தற்போது, திட்ட மதிப்பீட்டில் (ரூ.33808.60 லட்சம்) எஞ்சிய 50 விழுக்காட்டில், டுபிட்கோ நிதி நிறுவனத்தின் **M.I.D.F.** நிதியின் கீழ் 25 விழுக்காடு தொகை **ரூ.8452.15 லட்சம்** ஆண்டிற்கு **4 விழுக்காடு வட்டி** வீதத்தில் கடன் வழங்குவதற்கு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 02.05.2007 அன்று நடைபெற்ற கூட்டமர்வில் முடிவெடுக்கப்பட்டது.

மன்ற தீர்மான எண்.122/2007, நாள்:25.04.2007-ன்படி, வரியில்லா கடன் பத்திரம் மூலம் நிதி திரட்டினால், தற்போதைய சந்தை நிலவரப்படி 8 முதல் 8.50 விழுக்காடு வரை வட்டி விகிதத்தில் நிதி திரட்ட வாய்ப்புள்ளதெனவும், சந்தை நிலவரப்படி வட்டி விகிதத்தில் மாற்றம் இருக்கும் என்பதாலும், Surveillance Fee, Merchant Bankers Fee, BSE Listing Fee, Trustee Fee and CDSL Annual Custodial Fee போன்ற செலவினங்கள் ஆண்டுதோறும் கடன் தொகையினை திருப்பி செலுத்தும் வரையில் ஏற்படும். மேலும் வரியில்லா கடன் பத்திரம் மூலம் **ரூ.8452.15 லட்சம்** நிதி திரட்டினால் (மேற்கண்ட நிதி ஆதார (Funding Pattern) முறையில்) ஒரே தவணையில் கிடைத்துவிடும். ஆனால் டுபிட்கோ நிதி நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து நமது தேவையின் அடிப்படையில் கடன் தொகையினை நாம் பெற்றுக் கொள்ளலாம். இதனால் மாநகராட்சியின் வட்டி செலுத்தும் சுமை குறைய வாய்ப்புள்ளது.

இதனடிப்படையில், டுபிட்கோ நிதி நிறுவனத்தின் சொந்த நிதியின் **(TUFIDCO-OWN FUND)** கீழ் 25 விழுக்காடு தொகை **ரூ.8452.15 லட்சம்** ஆண்டிற்கு **8.50 விழுக்காடு வட்டி** வீதத்தில் 15 ஆண்டு காலத்தில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் பெற முடிவெடுக்கப்பட்டது.

எனவே,

அ) திட்ட மதிப்பீட்டில் (ரூ.33808.60 லட்சம்) எஞ்சிய 50 விழுக்காட்டில், டுபிட்கோ நிதி நிறுவனத்தின் **M.I.D.F.** நிதியின் கீழ் 25 விழுக்காடு தொகை **ரூ.8452.15 லட்சம்** ஆண்டிற்கு **4 விழுக்காடு வட்டி** வீதத்தில் கடன் பெறுவதற்கும்

ஆ) டுபிட்கோ நிதி நிறுவனத்தின் சொந்த நிதியின் **(TUFIDCO-OWN FUND)** கீழ் 25 விழுக்காடு தொகை **ரூ.8452.15 லட்சம்** ஆண்டிற்கு **8.50 விழுக்காடு வட்டி** வீதத்தில் 15 ஆண்டு காலத்தில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் பெறுவதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.121/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.நி.பி.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.அ2/3720/2007**
**ஆணையர் அவர்களின் 21.06.07 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.338/2007 பொருள் எண்.18

**சென்னை மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒலிபெருக்கி வாங்குதல்**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் திட்டத்தின்படி சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பள்ளிகளுக்கு ஒலி பெருக்கி வாங்கி நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.பள்ளிகளின் எண்ணிக்கைப்படி தேவைப்படும் ஒலி பெருக்கிகள்

| வரிசை எண் | பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிகை |
|---|---|---|
| 01 | சென்னை மாநகராட்சி , உயர் மேல் நிலைப் பள்ளிகள் | 65 |
| 02 | சென்னை மாநகராட்சி, தொடக்கப் பள்ளிகள் | 139 |
| 03 | சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் | 109 |
| | மொத்தம் | 313 |

இணை ஆணையர் (கல்வி) அவர்களின் **26.4.2007** நாளிட்ட குறிப்பின்படி, உயர்நிலை மேல்நிலை பள்ளிகளுக்கு கார்டுலெஸ் மைக்கிற்கு பதிலாக, வையர் மைக் வாங்கவும், தொடக்க நடுநிலைப் பள்ளிகளுக்கு வையர் மைக் வாங்கவும் முடிவு எடுக்கப்பட்டது.

**27 மேல் நிலை பள்ளிகளுக்கு தேவைப்படும் உபகரணங்கள்**

| வரிசை | எண்ணிக்கை | பொருட்களின் விவரம் | விலை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 01 | 1 | 250 வாட்ஸ் ஆம்பிளி பையர் SSA 250 | 10866 | 10866 |
| 02 | 2 | 2 Nos. SR x 120 மைக் ஸ்பிக்கர் பெட்டி | 3813 | 7626 |
| 03 | 1 | ஆடியோ வையர் மைக் | 1218 | 1218 |
| 04 | 1 | ஸ்டேண்டு | 680 | 680 |
| | | மொத்தம் | | 20390 |

(or) 20400/-

27 மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆகும் செலவு **20,400** x 27 = 5,50,800/-
(வரிகள்உட்பட)

அதே போல் **38** உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆகும் செலவு **20,400** x 38 = 7,75,200/–
(வரிகள் உட்பட)

**248 தொடக்க நடுநிலைப்பள்ளிகளுக்கு தேவைப்படும் பொருட்கள் .**

| வரிசை எண். | எண்ணிக்கை | பொருட்களின் விவரம் | விலை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 01 | 1 | ஆம்பிளி பையர் SSA 160 | 8175 | 8175 |
| 02 | 2 | எஸ்ஆர் 50 ஸ்பிக்கர் பெட்டி | 1972 | 3944 |
| 03 | 1 | எ.டி.எம் 511 பையர் மைக் | 945 | 945 |
| 04 | 1 | ஸ்டேண்டு | 680 | 680 |
| | | மொத்தம் | | 13744 |

(or) 13750

<u>க.து.ந.க.எண்.அ2/3720/2007</u>

248 தொடக்க நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆகும் செலவிணம் = 13750 x 248=34,10,000/-
(வரிகள் உட்பட)

அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒலிபெருக்கிகள் வாங்க ரூ.94,50,000/– என மதிப்பிடப்பட்டு இணை ஆணையர் (கல்வி ) அவர்களின் குறிப்பின்படி ரூ. 47,36,000/– என கீழ்கண்டவாறு குறைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு | – | 5,50,800/– |
| சென்னை மாநகராட்சி, உயர்நிலைப் பள்ளிகளுக்கு | – | 7,75,200/– |
| சென்னை மாநகராட்சி, தொடக்க / நடுநிலைப்பள்ளி | – | 34,10,000/– |
| மொத்தம் செலவினம் | – | 47,36,000/– |

(ரூபாய் நாற்பத்தி ஏழு லட்த்து முப்பத்தி ஆராயிரம் மட்டும் )

சென்னை மாநகராட்சி அனைத்து பள்ளிகளுக்கு ஒலிபெருக்கி கருவிகள் ரூ.47,36,000/– (தோராய மதிப்பீட்டில் ) மேற்பார்வை பொறியாளர் (மின்சாரத்துறை ) மூலம் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, வாங்குவதற்கும், இச்செலவினத்தை நடப்பு கணக்கு 2007–2008 ல் கல்வித்துறைக்கு மூலதனபிரிவில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் வாங்குவதற்கும் நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் வரிவதிப்பு (ம) நிதி மூலாமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“6.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.45, நாள்: 06.07.2007 ன் படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .”

“17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.119/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: கல்வித்துறை
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண் பி3 /10567/06**
**ஆணையர் அவர்களின் 19.06.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.339/2007 பொருள் எண்.19

**khiyneur;rpwg;g[ tFg;g[fspd;nghJ gHbuhl;ofs; tH';fpajw;F பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகளின் போது பழரொட்டிகள் வழங்குவதற்கும், பழரொட்டிகள் வழங்க திறந்த வெளி ஒப்பந்தத்தின்படி சிறந்த நிறுவனம் தேர்ந்தெடுப்பதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு ஆணை பெறப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு பழரொட்டிகள் வழங்குவதற்கு சிறந்த நிறுவனம் தேர்தெடுப்பதற்கு திறந்தவெளி ஒப்பந்தம் கோரப்பட்டதில் ஒப்பந்தில் கலந்து கொண்டு 100 கிராம் பழரொட்டிகள் ரூ2.92 பைசா என்ற விலைப்புள்ளி அளித்திருந்த மார்டன் ஃபுட் நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதற்கும் 10ஆம் வகுப்பில் 10095 மாணவர்களுக்கு, பிப்ரவரி 14.02.2007 முதல் மார்ச் 20.3.07 வரை 30 நாட்களுக்கும், 12 ஆம் வகுப்பில் 5076 மாணவர்களுக்கு 13 நாட்களுக்கும், (இதில் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் நீங்கலாக) பழரொட்டிகள் வழங்குவதற்கு ஆணையரிடம் ஆணைப் பெறப்பட்டு மார்டன் புட்ஸ் இண்டஸ்டிரியல் (இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு கொளமுதல் அனுமதி வழங்கப்பட்டது.

ஆணையர் அவர்கள் ஆணைப்படி மார்டன் ஃபுட் நிறுவனத்தின் மூலம் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பிப்ரவரி மாதம் 9 நாட்களுக்கும் மார்ச் மாதம் 17 நாட்களுக்கு மட்டும் பழரொட்டிகள் வழங்கப்பட்டது. இதற்கு ரூ 8,43,007க்கு செலவு ஆனது. இதனை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மேம்பாட்டு செலவனிங்கள் 184 என்ற கணக்கில் செலவு மேற்கொள்ளப்பட்டு ரூ8,43,007/—க்கான வரி பிடித்தம் ரூ 18917/— போக மீதம் ரூ 8,24,090/—க்கான காசோலை வழங்கப்பட்டது.

எனவே இதற்கு நிலைக்குழு (கல்வி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“06.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.42, நாள்.06.07.2007ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: கல்வித்துறை
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

திி.க.மே.து.ந.க.எண்.எ7/ 2035 /2007
ஆணையரின் 13.7.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.340/2007 பொருள் எண்.20

மண்டலம் –7ல், கோட்டம் –106ல் ஐயா சாமி தெருவில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை அனுமதி வேண்டுதல்

மண்டலம்–7ல் கோட்டம்–106ல் ஐயா சாமி தெருவில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு 2007–2008ஆம் ஆண்டு (மத்திய) அலுவலக விலை விகிதப்படி தயாரிக்கப்பட்ட 2007–2008ஆம் ஆண்டின் மூலதன நிதியின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 1,32,69,000/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கும் மற்றும் அரசின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும், அரசின் ஆட்சிமுறை அனுமதி வேண்டி முன்மொழிவுகள் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு) மூலம் சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 78ன் படி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.138, நாள் 13.07.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.133/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

திக.மே.து.ந.க.எண்.எ7/663/2007
ஆணையரின் 11.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.341/2007 பொருள் எண்.21

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பயினை கொட்ட வளசரவாக்கம் நகராட்சிக்கு அனுமதி அளித்தது

செயல் அலுவலர், வளசரவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சி, அவர்கள் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முகவரியிட்ட, 08.03.2007 நாளிட்ட கடிதத்தில் அவர்களுக்கு குப்பயினை களைய வேறு இடம் கிடைக்கும் வரையில் தற்காலிகமாக சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் வளசரவாக்கம் நகராட்சியில் தினசரி உருவாகும் சுமார் 12 டன் குப்பையினை கொட்ட அனுமதி கோருகின்றனர். மேலும் இதற்கான கட்டணத்தையும் அவர்கள் தருவதற்கு இசைவு தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, சென்னை மாநகராட்சியில் தனியார் எவரேனும் குப்பையினை குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்ட விரும்பினால் அதற்கென களைதல் கட்டணம்(Disposal Charges) செலுத்தி சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு களைய அனுமதி வழங்கலாம் என்று மன்றத்தின் தீர்மானம் எண்.400/2003, நாள் 24.7.2003 அமலில் உள்ளது. இந்த தீர்மானத்தில் கீழ்வருமாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(1) தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையினை களைய விரும்பினால், அவர்களிடமிருந்து களைதல் கட்டணம் பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கவும், (2) அதற்கான களைதல் கட்டணத்தை 2003ம் ஆண்டிற்கு ரூபாய்.161/–(ரூபாய் நூற்று அறுபத்து ஒன்று மட்டும்) என்றும் மற்றும் அதனில் ஒவ்வொர் ஆண்டும் 10% அதிகரிப்பு செய்து களைதல் கட்டணத்தை நிர்ணயிக்கவும் (3) அதற்கான விதிமுறைகளை வகுக்கவும்

தற்போது 2007ம் ஆண்டிற்கு தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை களைவதற்காக ஒரு டன்னிற்கு ரூ.237/–(ரூபாய் இருநூற்று முப்பத்தேழு மட்டும்) தனியாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஆனால் இந்த அனுமதி சென்னை மாநகரில் உருவாகும் அல்லது சென்னை மாநகருக்குள் தனியாரால் சேகரிக்கப்படும் குப்பைக்கு மட்டுமே நடைமுறையில் அனுமதி வழங்கப்படுகிறது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் மேற்சொன்ன வளசரவாக்கம் நகராட்சிக்கு தற்காலிகமாக பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அந்த நகராட்சியில் உருவாகும் குப்பையை களைவதற்கு அனுமதி அளிக்குமாறு சென்னை மாநகராட்சியினை கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்சொன்ன நகராட்சி சென்னை மாநகருக்கு அருகில் உள்ளதாலும், மற்றும் இது ஒரு உள்ளாட்சி அமைப்பு என்பதாலும், சென்னை மாநகரின் புறநகர் சுற்றுச்சூழல் இனம் தொடர்பானது என்பதாலும், ஒரு சிறப்பு நிகழ்வாக இந்த வளசரவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு அவர்கள் நகராட்சியில் உருவாகும் குப்பையினை நடைமுறையில் உள்ள மன்றத்தீர்மானத்தின்படி 2007ம் ஆண்டிற்கான களைதல் கட்டணம் செலுத்தி 60 நாட்களுக்கு தற்காலிக அனுமதியாக சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் களைய வளசரவாக்கம் நகராட்சியினருக்கு நடைமுறையில் உள்ள நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "13.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.137, நாள் 13.07.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> "17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.134/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி3/16262/06
ஆணையரின் 06–06–2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.342/2007 பொருள் எண்.22

## திருத்தம்

அரசாணை (3ப) எண்.22, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.10.06ன் மூலம் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி நிதி (ஓய்வூதியம்) துறையில் வெளியிடப்பட்ட 15.06.98 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 272 மற்றும் 273 ஆகியவற்றை சென்னை மாநகராட்சி அலுவலர்கள்/பணியாளர்களுக்கு நடைமுறைப் படுத்த ஆணையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 19.12.06 நாளிட்ட ஆணையரின் ஆணைப் படி அரசாணை எண்: (3ப) எண்: 22, ந.நி. மற்றும் கு.வ.துறை நாள் 18.10.2006ஐ அமலாக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில், 25.04.07 அன்று அனுமதி அளிக்கப்பட்ட மன்றத் தீர்மானத்தில் ( தீர்மான எண். 111/07) அரசாணை எண்.272 நிதி (ஓ) துறை, நாள் 15.06.98ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதி அளிக்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட மன்ற தீர்மானத்தில் அரசாணை எண்.272 நிதி (ஓ) துறை, நாள் 15.06.98ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த என்பதற்கு பதிலாக அரசாணை(3ப) எண் 22, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.10.2006ல் தெரிவிக்கப்பட்ட இரு அரசாணைகளை (எண். 272 மற்றும் 273 நாள் 15.06.98) சென்னை மாநகராட்சி அலுவலர்/பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த என திருத்தம் மேற்கொள்ள நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.117/07 நாள்.17.7.2007–ன்படி அரசாணை (3ப) எண்.22, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.18.10.2006ல் தெரிவிக்கப்பட்ட இரு அரசாணைகளை (எண்.272 மற்றும் 273 நாள்.15.06.98) நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.10.ந.க.எண்.ஜி1/144/2006
ஆணையாளர் அவர்களின் 07.07.2007. நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.343/2007 பொருள் எண்.23

உலக வங்கி கட்டிடம் –வார்டு–154–சொத்து வரி மற்றும் கட்டிட உரிமக் கட்டணம் விலக்களிப்பது–குறித்து.

சென்னை தரமணியில் உள்ள உலக வங்கியின் புதிய கட்டிடத்திற்கு சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி மற்றும் கட்டிட உரிமத் தொகையிலிருந்து விலக்கு அளிக்கும் கருத்துருவை சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் சமர்ப்பித்து பரிசீலனை செய்து மன்றத்தின் கருத்தினை பெற்று அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்குமாறு அரசு கடித எண்.19835/மா.ந.1/2006–6, நாள் 13.01.2007, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919 விதி எண்.101ன் கீழ் வார்டு–154, சென்னை தரமணியில் உள்ள உலக வங்கியின் புதிய கட்டிடத்திற்கு சொத்துவரி மற்றும் கட்டிட உரிமத் தொகை ஆகியவைகளிலிருந்து விலக்களிக்க இயலாது என அரசுக்கு 24.07.2006. நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அரசு கடிதத்தில் மாமன்றத்தின் கருத்து பெற்று அறிக்கை அளிக்க கோரியுள்ளதால் உலக வங்கிக் கட்டிடத்திற்கு சொத்துவரி, கட்டிட உரிமக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919ல் வழிவகைகள் இல்லை என்பதை அரசுக்கு தெரிவித்ததற்கு மாமன்றத்தின் கருத்தினை வேண்டி, நிலைக்குழு வரி விதிப்பு மற்றும் நிதி மூலமாக மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.118/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.ஜி1/0006/2007
ஆணையாளர் அவர்களின் 20.06.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.344/2007 பொருள் எண்.24

தொழில் உரிமம் எளிதான வகையில் வழங்குதல்

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்படுகின்ற சிறுதொழில்கள் / தொழில்கள் ஆகியவற்றிற்கு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கீழ்கண்டுள்ளபடி இனங்கள் வாரியாக பிரிக்கப்பட்டு, அதில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில், அனுமதிக்கப்பட்ட குதிரை திறன் இயக்கி ஏற்றவாறு தொழில்கள் / சிறுதொழில்கள் நடத்த வரையறுக்கப்பட்டுள்ளன.

Ïd§fŸ

1. முதல் நிலை குடியிருப்பு மண்டலம்: 5 குதிரை திறன் இயக்கி சிறுதொழில்கள் நடத்த அனுமதிக்கப்பட்டவை. (PRIMARY RESIDENTIAL ZONE: UPTO 5 H.P. MOTOR UNDER COTTAGE INDUSTRIES)
2. கலப்பு குடியிருப்பு மண்டலம்: 15 குதிரை திறனுக்குட்பட்ட இயக்கி (MIXED RESIDENTIAL ZONE: UP TO 15 H.P. MOTOR)
3. வணிக பயன்பாடு மண்டலம்: 50 குதிரை திறனுக்குட்பட்ட இயக்கி (COMMERCIAL USE ZONE: UPTO 50 H.P. MOTOR)
4. முதல் நிலை தொழில் மண்டலம்: 130 குதிரை திறனுக்குட்பட்ட இயக்கி (LIGHT INDUSTRIAL ZONE: UPTO 130 H.P. MOTOR)
5. பொது தொழில் மண்டலம்: 500 குதிரை திறனுக்குட்பட்ட இயக்கி (GENERAL INDUSTRIAL ZONE: UPTO 500 H.P. MOTOR)

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் வரையறுக்கப்பட்டுள்ள மேற்கண்ட ஐந்து இனங்கள்படி, சிறுதொழில்கள் / தொழில்கள் நடத்த, விண்ணப்ப படிவம், வீட்டு உரிமையாளர் தடையின்மை சான்றிதழ், சொத்துவரி செலுத்திய ரசீது, நில அளவை எண், இரண்டு நகல் புகைப்படம், குடியிருப்பு சான்று, தேசிய சேமிப்பு சான்றிதழ், தொழிலுக்கு ஏற்ப மாவட்ட தீயணைப்பு அலுவலரின் சான்றிதழ், உரிமக் கட்டணம், துப்புரவுக் கட்டணம் போன்றவைகள் விண்ணப்பதாரரிடம் பெறப்படுகின்றன. அதன்பின்பு விண்ணப்பம் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, மேற்படி ஐந்து இனத்திற்கும், உதவி செயற்பொறியாளர் நகரமைப்பு பிரிவு குறிப்புரை, உதவி சுகாதார அலுவலர் குறிப்புரை, உரிமம் ஆய்வாளரின் கள ஆய்வு அறிக்கை, சுகாதார அலுவலர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் பரிந்துரையின் பின்பு ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன், உரிமம் வழங்கும் முறை கடைப்பிடிக்கப்படுகின்றது.

முதல்நிலை குடியிருப்பு மண்டலம்–5 குதிரை திறனுக்குட்பட்ட இயக்கி சிறு தொழில்கள் அனைத்து பகுதிகளிலும் நடத்த அனுமதிக்கப்பட்டவையாகும். ஆனால் கலப்பு குடியிருப்பு மண்டலம், வணிக குடியிருப்பு மண்டலம், முதல்நிலை தொழில் மண்டலம், பொது தொழில் மண்டலம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள குதிரை திறன் இயக்கிக்கு ஏற்றவாறு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமே தொழில்கள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

எனவே, முதல் நிலை குடியிருப்பு மண்டலம் (5 குதிரை திறனுக்குட்பட்ட இயக்கி) சிறுதொழில்கள் அனைத்து பகுதிகளில் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளதால், இவ்வினத்தின்கீழ் வருகின்ற சிறுதொழில்களான தேனீர் விடுதி, மளிகை கடை, தையற்கடை, பால்வியாபாரம் முடி திருத்தல் கடை, குளிர்பான கடை, பிஸ்கட் கடை, ஆட்டிறைச்சி கடை, அச்சக தொழில் போன்றவைகளுக்கு எளிதான வகையில் உரிமம் வழங்கலாம் என முடிவெடுத்து, வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2007–08 நிதிநிலை அறிக்கையில் எளிதான முறையில் உரிமம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவித்துள்ள எளிதான முறையில் உரிமம் வழங்கும் முறையின்படி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் வரையறுக்கப்பட்டுள்ள முதல் நிலை குடியிருப்பு மண்டலம்:5 குதிரை திறன் இயக்கி சிறு தொழில்களான தேனீர் விடுதி, மளிகை கடை, பால்வியாபாரம், முடித்திருத்தல் கடை, குளிர்பான கடை, பிஸ்கட் கடை, ஆட்டிறைச்சி கடை அச்சக தொழில் மற்றும் இந்த இனத்தில் அடங்கும் தொழில்களுக்கு உரிமம் எளிதான வகையில் வழங்க, (1) விண்ணப்பபடிவம், (2) இரண்டு புகைப்படம் (3) உரிமம் மற்றும் துப்புரவு கட்டணம் (4) சொத்துவரி



செலுத்திய ரசீது (5) தேசிய சேமிப்பு பத்திரம் (6) ரூ.20/– முத்திரைத்தாளில், சுகாதார சீர்கேடு விளைவிக்கும் வகையிலும், பொதுமக்கள் இடையூறு ஏற்படுகின்ற வகையில் அடிப்படை விதிகளுக்கு புறம்பாக செயல்படுவதாக கண்டறியப்பட்டால் உரிமத்தை ரத்து செய்யவும் நிறுவனத்தை மூடுவதற்கும் மனப்பூர்வமான ஒப்புதல் தெரிவித்து ஆணை உறுதி ஆவணம் ஆகியவற்றை மட்டும் விண்ணப்பதாரரிடம் உரிமம் ஆய்வாளர்கள் பெற்றுக்கொண்டு, விண்ணப்பத்தில் உள்ள விவரங்களை மண்டல அலுவலகத்தில் இயங்கும் கணினியில் பதிவு செய்து உடனுக்குடன் உதவி வருவாய் அலுவலர் பரிந்துரையுடன் உரிமம் வழங்கலாம். உரிமம் வழங்கப்பட்ட நிலையில், சுகாதார சீர்கேடு மற்றும் விதிகளுக்குப் புறம்பான வகையில் செயல்படுவதாக பின்னர் ஆய்வின்போது கண்டறியப்பட்டால், உரிய

நடவடிக்கை எடுத்து ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுடன் அந்நிறுவனத்தை மூடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் வரையறுக்கப்பட்டுள்ள இனங்கள் 2 முதல் 5 வரை உள்ளவற்றிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மண்டலங்களின்படி அனுமதிக்கப்பட்டுள்ள குதிரை திறனுக்கு ஏற்ப உரிமம் வழங்க தற்போது பின்பற்றப்படும் வழிமுறைகளையே பின்பற்றலாம்.

சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு புதிய உரிமம் வழங்கும் எளிதான முறை மேற்கூறிய வகையில் எளிமைப்படுத்துவதால் வணிகர்கள் சிரமமின்றி, காலதாமதமின்றி விண்ணப்பம் சமர்ப்பித்த உடன் உரிமம் பெற இயலும் அதன் பயனாக உரிமமின்றி இயங்கும் மற்ற சிறு தொழில் நிறுவனங்களும் எளிய முறையில் உரிமம் பெறலாம் என்ற நோக்குடன் தாமாக முன்வந்து உரிமம் பெறுவதற்கு விண்ணப்பிக்க இந்த நடைமுறை நல்ல வாய்ப்பாக அமையும். இதன் மூலம் சென்னை மாநகராட்சியின் வருவாய் அதிகரிக்கும் என கருத்துரைக்கப்படுகிறது.

எனவே, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் வரையறுக்கப்பட்டுள்ள முதல் நிலை குடியிருப்பு மண்டலம்: (5 குதிரை திறன் இயக்கி) சிறுதொழில்களான தேனீர் விடுதி, மளிகை கடை, தையற்கடை, பால்வியாபாரம் முடி திருத்தல் கடை, குளிர்பான கடை, பிஸ்கட் கடை, ஆட்டிறைச்சி கடை, அச்சக தொழில் மற்றும் இந்த இனத்தில் அடங்கும் தொழில்களுக்கு (1) விண்ணப்படிவம், (2) இரண்டு புகைப்படம் (3) உரிமம் மற்றும் துப்புரவு கட்டணம் (4) சொத்துவரி செலுத்திய ரசீது (5) தேசிய சேமிப்பு பத்திரம் (6) ரூ.20/–க்கான ஆணை உறுதி ஆவணம் மட்டும் விண்ணப்பதாரரிடம் பெற்றுக்கொண்டு மண்டல கணினியில் பதிவு செய்து மண்டல உதவி வருவாய் அலுவலர் அளவில் உடனடியாக உரிமம் வழங்க அனுமதிகோரி மாமன்றத்திற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.116/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.
>
> ''கோழி இறைச்சி கடைகளையும் சேர்த்தும், சென்னை மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிக்காமலும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமலும் இருக்கும் வகையில் உரிய உறுதி மொழி பெற்று உரிமம் வழங்கலாம் என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி11/03009/2007
ஆணையாளரின் 02.07.2007 நாளிட்ட குறிப்பு.

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.345/2007 பொருள் எண்.25

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் டெக்சாஸில் உள்ள ஹுஸ்டன் மாநகரத் தந்தை சென்னை மாநகரத்துடன் சகோதரத்துவ உறவு மேற்கொள்ள ஒப்புதல் வேண்டுவது குறித்து.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் டெக்சாஸில் உள்ள ஹுஸ்டன் மாநகர தந்தை தனது 22.5.2007 நாளிட்ட கடிதத்தில், இந்தியாவின் நான்காவது நகரமாக சென்னை மாநகரம் திகழ்வதைப் போன்று, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நான்காவது நகரமாக ஹுஸ்டன் மாநகரம் திகழ்வதாக குறிப்பிட்டு, இந்த இரு நாடுகளிடையே ஏற்படவிருக்கும் சகோதரத்துவ உறவு இருமாநகர மக்களது பண்பு, பொருளாதாரம், அறிவுத்திறம் , கலை, கல்வி மற்றும் வணிகம் உட்பட பல்வேறு துறைகளில் உறுதியான இணைப்பினை ஏற்படுத்தும் என்றும் மேலும், சகோதரத்துவ உறவு மேற்கொள்ள ஒரு மனதாக தீர்மானம் நிலைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். தனது கடிதத்துடன் ஹுஸ்டன் நதர வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தை அவர்கள் ஹுஸ்டன் நகர மாமன்றத்தில் கடந்த மே மாதம் 2007ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிதலையும் (Proposal) இணைத்து அனுப்பியுள்ளார்கள்.

மேற்கண்ட விவரத்தின் அடிப்படையில், ஹுஸ்டன் நகர தந்தை தெரிவித்துள்ளபடி, இரு மாநகரங்களும் இணைந்து சகோதரத்துவ உறவுகளை மேற்கொள்ளவும், இந்நிகழ்வுக்கு மாநில மற்றும் மத்திய அரசுகளின் அனுமதி வேண்டி உரிய முன்மொழிவுகளை அனுப்புவதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.19/ 2007, நாள் : 12.07.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மி.து.ந.க.எண்.அ1/2271/2007**
**ஆணையாளர் அவர்களின் 10.07.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.346/2007 பொருள் எண்.26

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் மின்துறையில் கோட்ட மின் பொறியாளராக பணிபுரியும் திரு.எஸ். நாராயணராஜா அவர்கள் வரும் 31.07.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார். அன்னாரது பிறந்த தேதி 01.08.1949 ஆகும்.

திரு.எஸ்.நாராயணராஜா அவர்கள் 29.01.1971 அன்று சென்னை மாநகராட்சி பணியில் அளவையாளர் (SURVEYOR) ஆக சேர்ந்துள்ளார். அப்பதவியில் 29.01.1971 முதல் தகுதி காண்பருவம் துவக்கப்பட்டு, 29.01.1973 முதல் தகுதிகாண் பருவத்தினராக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்னர் அப்பதவி வரைவாளர் (DRAFTSMAN)என 01.12.1972 முதல் பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் 09.12.1978 முதல் மேற்பார்வையாளர் (SUPERVISOR) ஆக பதவி உயர்வு பெற்றுள்ளார். அப்பதவியில் 09.12.1978 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

தனியர் 25.07.1990 அன்று உதவி கோட்ட மின் பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார். அரசாணை (ப) எண்.143, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள்.20.03.1998ன் படி அரசினால் உறுதியாக்கம் செய்யப்பட்டு, பொ.து.ந.க.எண்.ஈ1/870/90, நாள்.03.04.1998ன் படி உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் 25.07.1990 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/15239/2000 நாள்.19.09.2000ன் படி கோட்ட மின் பொறியாளர் (மூலதனம்) ஆக 20.09.2000 பிற்பகல் பதவி உயர்வு பெற்றுள்ளார். அரசாணை (ப) எண்.704, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.12.2000ன் படி கோட்ட மின் பொறியாளர் பணி நியமனத்தை அவர் அப்பதவியில் சேர்ந்த நாள் முதல் அரசால் உறுதியாக்கம் செய்யப்பட்டதற்கிணங்க, சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/15239/2000 நாள்.29.12.2000ன் படி அவரது பணி கோட்ட மின் பொறியாளர் பதவியில் 20.09.2000 முதல் வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் விழிப்புக் குழுமத்தில் இவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அன்னார் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நீண்ட கால கடன்கள் /முன்பணம் ஏதுமில்லை. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை.

தனியர் முன்னதாக பணிபுரிந்த மண்டலம்–5ல் தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லை. தற்போது மின் துறையை பொறுத்தமட்டில் 7 தணிக்கைத் தடைகள் நிலுவையில் உளளது. அத்தணிக்கைத் தடையின்படி தனியரை தனிப்பொறுப்பு நிர்ணயம் ஏதும் இல்லை. துறை ரீதியானவை எனத் தெரிவிக்கப்படுகிறது. 2004–2005, 2005–2006 மற்றும் 2006–2007 ஆண்டிற்கான தணிக்கைத்தடை புத்தகம் தணிக்கைத் துறையினரால் வழங்கப்படவில்லை. இருப்பினும் இவரது ஓய்விற்கு பின்னர் இவரை பொறுப்பாக்கி தணிக்கைத் தடை மற்றும் நிதி இழப்பீடு இருப்பது பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என நிபந்தனை உறுதி மொழி கடிதம் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் கோட்ட மின் பொறியாளர் பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. என்பதால் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனவே, திரு.எஸ். நாராயணராஜா, கோட்ட மின் பொறியாளர், மின்துறை அவர்களை 31.07.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்கும் பொருட்டு, தணிக்கைத்தடை மற்றும் நிதி இழப்பீடுகளுக்கு இவர் பொறுப்பாகிறார் என்பது பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரை 31.07.2007 பிற்பகல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/2399/2007**
**ஆணையாளர் அவர்களின் 13.07.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.347/2007 பொருள் எண்.27

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர் திருமதி.வி.சுகதேவி, அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி அறுவை மருத்துவ அலுவலராக 03.10.79 அன்று சிறப்பு ஊட்டச்சத்து பிரிவில்(S.N.P.) பணியமர்ந்தார். இப்பதவியில் அரசாணை எண். 2193, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.02.12.82 நாளிட்ட அரசாணையின்படி 03.10.79 முதல் உறுதியாக்கமும் 02.11.81 முதல் பணிவரன்முறையும் முடிக்கப்பட்டுள்ளது. சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் 14.09.82 முதல் முடிவடைந்ததால் அரசாணை எண்.559, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் 04.05.93 நாளிட்ட அரசாணையின்படி 03.10.79 முதல் 14.09.82 வரைக்கான பணிக்காலத்தை மகப்பேறு குழந்தை நலத்துறையுடன் இணைத்து 15.09.82 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். அன்னாரின் பிறந்த தேதி 15.07.49, வயது முதிர்வு ஓய்வு நாள்.31.07.07.

டாக்டர் திருமதி.வி.சுகதேவி, மருத்துவ அலுவலர் அவர்கள் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 03.07.07 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளது தேதி வரையில் இவர் சென்னை மாநகராட்சியில் பணம் சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் பண இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. இவருக்கு சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கடன் ஏதும் நிலுவையில் உள்ளதா என

இக்கூட்டுறவு சங்கத்தில் கடன் குறித்த விவரம் பெற தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடன் தொகை நிலுவையில் இருப்பது தெரியவரின்அதனை ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்து கொள்ளப்படும். சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி 2ஆம் நிலை எனவே இவரை பணியிலிருந்து விடுவிக்க மாமன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி.வி.சுகதேவி, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு தொகை இழப்பீடு மற்றும் தனிப்பட்ட/துறை சம்மந்தப்பட்ட நீண்ட கால முன்பணம் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 31.07.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/2008/2007
ஆணையாளர் அவர்களின் 12.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.348/2007 பொருள் எண்.28

பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு அனுமதி

திரு. அ.லோகநாதன் அந்தோணிராஜ், துணை தகவல் தொடர்பு அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் ஆண் களப்பணியாளராக (Male Field Worker) ஆக 23.06.67 அன்று மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியமர்ந்தார். இப்பதவியில் 24.06.67 முதல் பணிவரன்முறைபடுத்தியும் 24.06.69 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 25.07.72ல் கல்வி விரிவாக்க அலுவலராகவும் பணியமர்ந்துள்ளார், இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. 13.10.92 முதல் துணை தகவல் தொடர்பு அலுவலர் ஆக பணியமர்ந்துள்ளார். இப்பதவியில் அரசாணை (பத்தாண்டு) 215, ந.நி.(ம)கு.வ.து.,நாள்.12.04.2000–ஐ தொடர்ந்து ஆணையரது செயல்முறை ஆணை எண். மா.குந.(ம)ம.கு.ந.எண்.எப்4/4684/88, நாள்.07.06.00ன் படி அரசின் உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது, இப்பதவியில் 13.10.1994 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரின் பிறந்த தேதி 19.07.49, வயது முதிர்வு ஓய்வு நாள்.31.07.07

திரு.அ.லோகநாதன் அந்தோணிராஜ், துணை தகவல் தொடர்பு அலுவலர் அவர்கள் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 25.06.07 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளது தேதி வரையில் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, தனியரின் பணிப்பதிவேட்டை முன்தணிக்கை செய்து அளிக்கப்பட்ட சான்றில் அன்னாரை தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. முன்தணிக்கை சான்றில் தெரிவித்தபடி மிகை ஊதியம் கணக்கிட்டு சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது, இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி
குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் நிதி இழப்பீடு குறித்த தணிக்கை
பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கடன் ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி 2ஆம் நிலை எனவே இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, திருஅ.லோகநாதன் அந்தோணிராஜ் , துணை தகவல் தொடர்பு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு தொகை இழப்பீடு மற்றும் தனிப்பட்ட / துறை சம்பந்தமான நீண்ட கால முன்பணம் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 31.07.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/1976/2007
ஆணையாளர் அவர்களின் 13.07.2007 நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.349/2007 பொருள் எண்.29

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு / பின்னேற்பு அனுமதி**

டாக்டர் திருமதி.பி.சாந்தகுமாரி, அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி அறுவை மருத்துவ அலுவலராக 27.10.74 அன்று மகப்பேறு குழந்தை நலப்பிரிவில் பணியமர்ந்தார். இவருடைய பிறந்த தேதி 19.06.49, வயது முதிர்வு ஓய்வு நாள்.30.06.07.

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியமர்ந்து, பதவி உயர்வு பெற்றுள்ளார்.

| பதவி உயர்வு நாள் | பணி உறுதியாக்கம் (ம) பணிவரன்முறை நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| உதவி அறுவை மருத்துவ அலுவலர், நாள்.27.10.74 | 27.10.74 அ.ஆ.915, சு(ம)கு.ந.து. நாள்.17.04.76, மன்றத்தீர்மான எண்.164, நாள்.25.02.76 | 05.11.76 அ.ஆ.323, சு(ம)கு.ந.து. நாள்.16.02.78, மன்றத் தீர்மான எண்.432/77, நாள்.26.05.77 (ம) மன்றத் தீர்மான எண்.410/77, நாள்.28.12.77 |
| மண்டல அலுவலர் நாள்.16.12.04 | 16.12.2004அ.ஆ.225, ந.நி.(ம)கு.நீ.வ.து. நாள்.20.06.06 | – |
| மாவட்டகுடும்ப நல மருத்துவ அலுவலர் நாள். 06.06.07 | உறுதியாக்கம் செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. | – |

டாக்டர் திருமதி.பி.சாந்தகுமாரி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 05.06.07 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, அன்னார் மீது தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் பண இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கடன் ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி I-B நிலை அலுவலர், எனவே இவரை பணியிலிருந்து விடுவிக்க மாமன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி.பி.சாந்தகுமாரி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு தொகை இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஒய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் அவரை 30.06.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்ததற்கு நியமனக்குழு மூலம் மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்பின்னேற்பு
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்பி13/5633/2007
ஆணையாளர் அவர்களின் 28.06.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.350/2007 பொருள் எண்.30

**ஒய்வூதியம்**

திருமதி.டி.சீதா, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை தன்விருப்ப ஒய்வு அடைந்தமையால் பணியிலிருந்து 11.02.2004 பிற்பகல் முதல் ஒய்வு பெற்றார். அவர் 29 ஆண்டுகள், 5 மாதங்கள், 16 நாட்கள் தகுதி பணிபுரிந்தமையால் தன்விருப்ப ஒய்வூதியமாக மாதம் ரூ.6,053/–ல் ஏற்கனவே வழங்கிய தன் விருப்ப ஒய்வூதியம் ரூ.5541/–ல் இருந்து அதிகமாக அளிக்கப்படுகிறது. இறப்பு மற்றும் ஒய்வுக்கால பணிக்கொடையாக ரூ.3,12,568/–ல் ஏற்கனவே வழங்கிய ரூ.2,85,708/– சரிசெய்து மீதம் ரூ.26,834/– வழங்கப்பட்டது மற்றும் ஒய்வூதியத்திலிருந்து ரூ.2017/– தொகுத்து பெறும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,60,920/–ல் ஏற்கனவே வழங்கிய ரூ.2,38,928/– சரிசெய்து மீதம் ரூ.21,992/– மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு வழங்கப்பட்டது.

ஒய்வூதிய காலத்திற்கு பின் அன்னாரது கணவர் வி.வெங்கடரமணா அவர்களுக்கு குடும்ப ஒய்வூதியமாக மாதம் ரூ.6053/– 11.02.2011 முடிய 12.02.2011 முதல் ரூ.4118/– பெறும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஒய்வூதிய பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைக் கணக்கு துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

ஆகையால் திருமதி.டி.சீதா, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களுக்கு 12.02.2004 முதல் ஒய்வூதியமாக மாதம் ரூ.6053/–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.5541/–ல் இருந்து அதிகரித்து அளிக்கப்பட்டது. இறப்பு மற்றும் ஒய்வுக்கால பணிக்கொடையாக ரூ.3,12,569/–ல் ஏற்கனவே வழங்கிய ரூ.2,85,708/– சரிசெய்து மீதம் ரூ.26,834/ வழங்கப்பட்டதற்கும் மற்றும் ஒய்வூதியத்திலிருந்து ரூ.2017/–ஐ (ரூபாய் இரண்டாயிரத்து பதினேழு மட்டும்) தொகுத்து பெறவும் அவ்வாறு தொகுத்து பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,60,920/– (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) இதில் ஏற்கனவே வழங்கிய ரூ.2,38,928/– சரிசெய்து மீதம் ரூ.21,992/– வழங்கப்பட்டதற்கும் மேலும், ஒய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர் திரு.வி.வெங்கடரமணா அவர்களுக்கு குடும்ப ஒய்வூதியமாக மாதம் ரூ.6053/– 11.02.2011 முடிய ரூ.4118/– 12.02.2011 முதல் வழங்கவும் மேற்கண்ட ஒய்வூதிய பயன்கள் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு அளிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு வேண்டி ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி
வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/10356/2007
ஆணையாளர் அவர்களின் 02.07.2007 நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.351/2007 பொருள் எண்.31

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, கட்டிடத்துறையில் உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்து 31.08.2000 பிற்பகல் முதல் வயது முதிர்வின் காரணமாக மன்றத் தீர்மானம் எண்.490/2000, நாள்.24.08.2000ல் வழங்கப்பட்ட அனுமதியினைத் தொடர்ந்து பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.ஜி.இரா.ராமசுப்ரமணியன், என்பவருக்கு கீழ்கண்ட ஓய்வூதியப்பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடிதம் எண்.நி.மு.எண்.5614/எ4/2007, நாள்.06.03.2007ல் சான்று வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.09.2000 முதல் | ரூ.4963/– |
| தொகுப்புத் தொகை | ரூ.1985/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.2978/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,30,901/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,49,158/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி. ரா.லலிதா, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் | ரூ.2978/– 12.08.2007 முதல் |

09.11.2000 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி ஏற்கனவே வழங்கிய ஓய்வூதியப்பயன்களை நேர் செய்து மீதம் வழங்கப்படவேண்டும்.

36 ஆண்டுகள் 04 மாதங்கள் 20 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25% விழுக்காடு பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.57,725/– இத்தொகையினை தணிக்கை தடைகள் அனைத்தும் நிவர்த்திக்கப்பட்ட பிறகு வழங்கப்படும் |
| துறைத்தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட மிகை ஊதியம் | ரூ.17,193/– |

எனவே, திரு. ஜி.இரா.ராமசுப்ரமணியன், உதவி செயற்பொறியாளர், கட்டிடத்துறை அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி 01.09.2000 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.4963/–என ஏற்கனவே வழங்கிய ரூ.3722/–லிருந்து உயர்த்தி வழங்கவும் தணிக்கைத்தடைக்கான 25 விழுக்காடு பிடித்தம் ரூ.57,725/–மற்றும் மிகை ஊதியம் ரூ.17,193/– ஆக மொத்தம் ரூ.74,918/–யை தற்போது அனுமதிக்கப்பட்ட பணிக்கொடை தொகை ரூ.2,30,901/ல் ஏற்கனவே வழங்கிய ரூ.1,69,500/–னை சரிசெய்து, மீதி தொகை ரூ.61,401/–யை நேர் செய்து மீதி பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ரூ.13,517/– அன்னாரின் ஓய்வூதிய நிலுவைத் தொகையில் நேர் செய்யவும், தொகுப்பு தொகை ரூ.2,49,158/–ல் ஏற்கனவே வழங்கிய ரூ.1,86,868/–யை நேர் செய்து மீதம் ரூ.62,290/–யை வழங்கவும், குடும்ப ஓய்வூதியமாக அன்னாரின் மனைவி திருமதி.ரா.லலிதா அவர்களுக்கு 2978/– ஆக வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/18964/2007
ஆணையாளர் அவர்களின் 04.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.352/2007 பொருள் எண்.32

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, வருவாய் துறை மண்டலம்–7ல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 28.02.2006 பிற்பகல் அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.டி.ஜெ.சூரியநாராயணராவ், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடிதம் எண்.1604/எ4/2007, நாள்.07.06.2007ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.03.2006 முதல் | ரூ.6436/– |
| தொகுப்புத் தொகை | ரூ.2145/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4291/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,69,241/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,70,848/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி. டி.எஸ்.சுமதி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.6436/– 28.02.2013 வரை<br>ரூ.3972/– 01.03.2013 முதல் |

37 ஆண்டுகள் 06 மாதங்கள் 02 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25% விழுக்காடு பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.80,945/– |
| இறுதி ஊதிய சான்றின்படி மிகை ஊதியம் | ரூ.13,233/– |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்படவேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.அ6/3424/2005
ஆணையாளர் அவர்களின் 29 .06.2007 நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.353/2007 பொருள் எண்.33

**ஓய்வூதியம்**

திரு. ஜி. மூங்கிலன், துப்புரவு பணியாளர், கோட்டம்–90, பகுதி–17, மண்டலம்–6 என்பவர் பணியில் இருக்கும் போது கடந்த 25.01.1997 அன்று காலமானார். அன்னார் தனது பணிப்பதிவேட்டில், தனக்கு பின்னர் இறப்புக் கால பயன்களை பெற தனது முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் மற்றும் இரண்டாவது மனைவி திருமதி. முனியம்மாள் ஆகியோரை வாரிசுதாரர்களாக நியமனம் செய்திருந்தார். அன்னாரது இறுதிச் சடங்கிற்கான முன்பணம் ரூ.2000/– ஆனது அவரது முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் அவர்களிடம் வழங்கப்பட்டு, ஒப்புகை பெறப்பட்டது.

திருமதி. எல்லம்மாள் (முதல் மனைவி) தனது கணவர் காலமானதையடுத்து, உரிய சான்றிதழ்களை சமர்ப்பித்து, இறப்புக் கால பயன்களை கோரினார். எனவே, மறைந்த துப்புரவு பணியாளர் திரு. மூங்கிலன் அவர்களின் இறப்புக்கால பயன்களை தகுந்த வாரிசுதாரருக்கு வழங்குவது குறித்து சட்ட அலுவலர் அவர்களின் குறிப்புரை வேண்டப்பட்டது.

கணக்கு அலுவலர் (ஓய்வூதியம்) அவர்கள் தனது 25.07.1997 தேதியிட்ட குறிப்புரையில், இரண்டு மனைவிகளின் விவரங்கள் அடங்கிய வாரிசு சான்றிதழ்களை பெற்று அனுப்ப கோரினார். பின்னர் இரு மனைவிகளும் அவரவர் தனித்தனியே வாரிசுதாரர் சான்றிதழ்கள் சமர்ப்பித்தனர். இவ்வினத்தில் கணக்கு அலுவலர் (ஓய்வூதியம்) அவர்களது 11.03.1998 தேதியிட்ட குறிப்புரையில் உதவி சட்ட அலுவலர் -II அவர்கள் மனுதாரர்களை நகர உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து வாரிசுரிமைச் சான்றிதழ் பெற்று அளிக்க அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

உதவி சட்ட அலுவலர் -II அவர்களின் அறிவுரையின்படி, காலஞ்சென்ற துப்புரவு பணியாளர் திரு. மூங்கிலன் அவர்களின் இரு மனைவிகளான திருமதி. எல்லம்மாள் மற்றும் திருமதி. முனியம்மாள் ஆகியோருக்கு நகர உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து வாரிசுரிமைச் சான்றிதழ் பெற்று அளிக்க கோரி 12.08.1999 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

இதனையடுத்து, திருமதி. எல்லம்மாள் (முதல் மனைவி) அவர்கள் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண்.64/2000 ன்படி வழக்கு தொடுத்தார். இவ்வழக்கில் இரண்டாவது மனைவி திருமதி. முனியம்மாள் முதல் எதிர்மனுதாரராகவும், அவரது மகள்கள் 2, 3 மற்றும் 4வது எதிர்மனுதாரராகவும், சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் 5வது எதிர்மனுதாரராகவும் சேர்க்கப்பட்டனர்.

முதலேற்பு வழக்கு எண்.64/2000ல் மனுதாரர் திருமதி. எல்லம்மாள் மற்றும் 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் சமாதான உடன்படிக்கை குறிப்பாணை ஒன்றை நகர உரிமையியல் 12வது நீதிமன்ற உதவி நீதிபதியிடம் தாக்கல் செய்து, சமாதான உடன்படிக்கை தீர்ப்பு கோரினர். சமாதான உடன்படிக்கை குறிப்பாணை பதிவு செய்யப்பட்டு, அதன்படி 19.12.2001 அன்று 12வது உதவி நீதிபதி அவர்களால் வழங்கப்பட்ட சமாதான உடன்படிக்கை தீர்ப்பில், பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர இறப்புக்கால பயன்கள் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களால் சரிசமமாக பிரித்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும், குடும்ப ஓய்வூதிய நிலுவை மற்றும் எதிர்கால குடும்ப ஓய்வூதியம் முதல் எதிர்மனுதாரர் திருமதி. முனியம்மாள் (இரண்டாவது மனைவி) அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், கருணை அடிப்படையில் வழங்கப்படும் வேலை வாய்ப்பு மனுதாரர் திருமதி. எல்லம்மாள் (முதல் மனைவி) அவர்களின் மகன் திரு. நரசிம்மன் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நீதிமன்ற உத்தரவின்படி காலஞ்சென்ற துப்புரவு பணியாளர் திரு.மூங்கிலன் அவர்களின் இறப்புக் கால பயன்களை பிரித்து வழங்குவது குறித்து உதவி சட்ட அலுவலர் அவர்களின் குறிப்புரை வேண்டப்பட்டது.

உதவி சட்ட அலுவலர் (தலைமையிடம்) அவர்கள் தனது 02.07.2002 நாளிட்ட குறிப்புரையில், இரண்டாவது மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதால், இத்தீர்ப்பினை ஏற்க இயலாது என்றும், இரு மனைவிகளையும் நீதிமன்றத்திலிருந்து "மரபுரிமைச் சான்றிதழ்" பெற்று அளிக்க கோரலாம் எனத் தெரிவித்தார். இவ்வலுவலக கடிதம் வாயிலாக "மரபுரிமைச் சான்றிதழ்" பெற்று சமர்ப்பிக்குமாறு இருமனைவிகளான திருமதி. எல்லம்மாள் மற்றும் திருமதி. முனியம்மாள் ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டது.

**ம.அ.6.ந.க.எண்.அ6/3424/2005**

காலஞ்சென்ற துப்புரவு பணியாளர் திரு. மூங்கிலன் அவர்களின் இரு மனைவிகளும் 22.07.2002 தேதியிட்ட கடிதத்தை கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டும், நீதிமன்றத்திலிருந்து "மரபுரிமைச் சான்றிதழ்" பெற்று சமர்ப்பிக்காமல் இருந்து விட்டனர். இதனால் இவ்வினத்தில் இறப்புக்கால பயன்களை பெற்று வழங்க இயலாமல் கோப்பு நிலுவையில் உள்ளது.

முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் அவர்கள் சட்ட அலுவலருக்கு அனுப்பிய 14.07.2005 தேதியிட்ட கடிதத்தில், தனது கணவரின் இறப்புக்கால பயன்கள் அனைத்தும் தங்களது குடும்ப பிரச்சினை காரணமாக நின்று விட்டதாகவும், தான் நகர உரிமையியல் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் சமாதானம் ஏற்பட்டு, அதன் அடிப்படையில் பெறப்பட்ட உடன்படிக்கை தீர்ப்பின்படி தனது கணவரின் இறப்புக் கால பயன்களை பெற உதவுமாறும் கோரப்பட்டது. இவ்வினம் குறித்து உதவி சட்ட அலுவலர் (தெற்கு) அவர்களின் குறிப்புரை வேண்டப்பட்ட போது, கணக்கு அலுவலர் (ஓய்வூதியம்) அவர்கள் ஓய்வூதிய விதிகளின்படி காலமான பணியாளரின் வாரிசுதாரர் மற்றும் முதல் மனைவிக்கே குடும்ப ஓய்வூதியம் வழங்க இயலும் என தெரிவித்தார்.

இதன் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது என்னவெனில், ஓய்வூதிய விதிகளின்படி முதல் மனைவிக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும். இரு மனைவிகளுக்கு ஓய்வூதியம் பகிர்ந்தளிக்க இடமில்லை. நீதிமன்ற அவமதிப்பை தவிர்க்கும் பொருட்டு, அரசு கடித எண்.38669/ஓய்வூதியம்/93–1, நிதி, நாள்: 25.06.1993 ன்படி குடும்ப ஓய்வூதியம் மற்றும் இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு ஓய்வூதிய விதி எண்.49 ஐ தளர்த்தி அரசாணை கேட்டு பெறப்பட வேண்டும்.

உடன்படிக்கை ஒப்பந்தத்தின்படி, இரண்டாவது மனைவி திருமதி. எம். முனியம்மாள் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் " சென்னை மாநகராட்சி துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து 25.01.1997 ஆம் ஆண்டு காலமான திரு. மூங்கிலன் அவர்களின் இறப்புப் கால பயன்கள் அனைத்தும், தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் அவர்களுக்கும் அவருடைய வாரிசுதாரர்களுக்கும் வழங்க தனக்கோ அல்லது தன்னுடைய வாரிசுதாரர்களுக்கோ எவ்வித ஆட்சேபனையும் இல்லையென முழுமனதுடன் தெரிவித்துக் கொள்வதாகவும், மாநகர உரிமையியல் வழக்கு ஓ. எஸ். எண்.64/2000 இல் மனுதாரராகிய திருமதி. எல்லம்மாள் மற்றும் எதிர் மனுதாரர்களாகிய தனக்கும், தன்னுடைய வாரிசுதாரர்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் நிமித்தம் பகரப்பட்ட 19.12.2001 நாளிட்ட தீர்வத்தின்படி தன்னாலோ அல்லது தன்னுடைய வாரிசுதாரர்களாலோ எவ்வித மேல் முறையீடும் செய்யப்பட மாட்டாது என உறுதியளிப்பதாகவும் நோட்டரி பப்ளிக் சான்றொப்பமிட்ட ஆணையுறுதி ஆவணத்தை சமர்ப்பித்துள்ளார்.

இவ்வினம் குறித்து சட்ட அலுவலர் (பொ.) அவர்களின் கருத்துரை கோரப்பட்ட போது, சட்ட அலுவலர் (பொ.) அவர்கள் காலஞ்சென்ற துப்புரவு பணியாளர் திரு. ஜி. மூங்கிலன் அவர்களின் இரண்டாவது மனைவி திருமதி. முனியம்மாள் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி இறப்புக்கால பயன்களை முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு வழங்க ஆட்சேபனை இல்லையென்று தெரிவித்துள்ள நிலையில், முதல் மனைவி மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு இறப்புக்கால பயன்களை வழங்க தடையேதும் இல்லையென்று தெரிவித்துள்ளார்.

எனவே, இவ்வினத்தில் காலஞ்சென்ற துப்புரவு பணியாளர் திரு. ஜி. மூங்கிலன் அவர்களின் இரண்டாவது மனைவி திருமதி. முனியம்மாள் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் அளித்துள்ள உடன்படிக்கை ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில், முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு காலஞ்சென்ற திரு. ஜி. மூங்கிலன் அவர்களின் இறப்புக்கால பயன்களை வழங்க ஆணையாளர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

காலஞ்சென்ற பணியாளரின் முதல் மனைவி திருமதி.எல்லம்மாள் மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு இறப்புக்கால பயன்களை வழங்கிட தணிக்கைச் சான்று வேண்டி பிரேரணை அனுப்பப்பட்டது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்கள் தனது 09.01.2007 நாளிட்ட தணிக்கைச் சான்றில் இறப்புக்கால பயன்களை வழங்க தணிக்கைச் சான்று வழங்கினார். ஆனால் நீதிமன்ற ஆணையில் முதல் மனைவி யார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லையென்றும், இரண்டாவது மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லை என்றும், மரபுரிமைச் சான்று பெற்று அதனடிப்படையில் தெரிவிக்கப்பட்ட நபருக்கு ஓய்வூதியம் மற்றும் இதர பயன்களை விடுவிக்கலாம் என்றும் தடை எழுப்பப்பட்டது.

இதன் தொடர்பாக வாரிசுதாரர்களிடமிருந்து 12வது நகர உரிமையியல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட முதலேற்பு வழக்கு எண்.64/2000ன் வாதுரை ( plain copy ) நகல் பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டது. இவ்வாதுரை மூலம் திருமதி. எல்லம்மாள் என்பவர் காலஞ்சென்ற ஜி. மூங்கிலன் அவர்களின் முதல் மனைவி என்ற விவரம் விளம்புகை செய்யப்பட்டுள்ளது. காலஞ்சென்ற ஜி. மூங்கிலன் அவர்களின் இரண்டாவது மனைவி மற்றும் அவரது வாரிசுதாரர்களும், திருமதி. எல்லம்மாள் என்பவர் காலஞ்சென்ற திரு. ஜி. மூங்கிலன்

ம.அ.6.ந.க.எண்.அ6/3424/2005

அவர்களின் முதல் மனைவி என்றும், முதலேற்பு வழக்கு எண்.64 / 2000ல் வழங்கப்பட்ட தீர்ப்பினை அவர்கள் வலியுறுத்தவில்லை என்றும், அத்தீர்ப்பின் மீது மேல் முறையீடு ஏதும் செய்யப் போவதில்லை என்றும், விதிகளின்படி முதல் மனைவி மட்டுமே குடும்ப ஓய்வூதியம் பெறத்தகுதியுடையவர் என்பதால், திருமதி. எல்லம்மாள் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் மற்றும் இதரப் பணப்பயன்களை வழங்க ஆட்சேபனை ஏதுமில்லை என்று ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் சான்றுறுதி அலுவலரின் சான்றொப்பத்துடன் ஆணையுறுதி ஆவணம் சமர்ப்பித்தனர். இவற்றின் அடிப்படையில் முதல் மனைவி திருமதி. எல்லம்மாள் என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைத் தொகை வழங்க தணிக்கைத் துறையின் திருத்திய தணிக்கை சான்று வேண்டப்பட்டது.

தணிக்கைத் துறையின் 07.05.2007 நாளிட்ட கடிதத்தில், அரசு கடித எண்.38669 / ஓய்வூதியம் / 93–1, நாள்: 25.08.1993ன்படி இணக்கத் தீர்வு அளிக்கப்பட்ட ( Memo of Compromise) இனத்திற்கு அரசின் தளர்வாணை பெற்ற பின்னர் ஓய்வூதியப் பயன்களை வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வினத்தில் இரண்டாவது மனைவி மற்றும் அவரது வாரிசுதாரர்கள் நீதிமன்றத் தீர்ப்பினை வலியுறுத்தாது, முதல் மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் மற்றும் இதரப் பணப்பயன்களை வழங்க ஆட்சேபனை ஏதும் இல்லையென்று தெரிவித்துள்ள நிலையில், அரசு கடிதம் எண். 38669/ஓய்வூதியம்/93–1, நாள்:25.08.1993ன்படி இணக்கத் தீர்வு அளிக்கப்பட்ட ( Memo of Compromise ) இனத்திற்கு அரசின் தளர்வாணை பெற நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.9ந.க.எண்.அ1/4912/1998**
**ஆணையாளர் அவர்களின் 10 .07.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.354/2007 பொருள் எண்.34

**ஓய்வூதியம்**

திரு. என்.சி. நடராஜன், அலுவலக உதவியாளராக மாவட்ட அலுவலகம் (தெற்கு) பகுதி அலுவலகம் –29ல் பணிபுரிந்த காலத்தில் 16.03.1987 அன்று காலமானார்.

திருமதி. என். கௌரி, இறப்பு செலவிற்காக ரூ.1000/– கேட்டு மனு செய்ததன் பொருட்டு அவருக்கு வழங்கப்பட்டது.

திரு. என்.சி. நடராஜன், பணியில் இருந்த காலத்தில் திருமதி. என். கௌரி மனைவி என்றும் திரு. என். பஞ்சாட்சரம், மகன் என்றும், குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்குவதற்கு நியமனதாரராக நியமனம் செய்துள்ளார்.

திருமதி கங்கம்மாள், மனைவி என்றும், ஒரு தொகையும் திருமதி கௌரிக்கு வழங்கக் கூடாது என்று மனு செய்ததன் பொருட்டு இருவரையும் நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணை வாங்கி வரும்படி கேட்கப்பட்டது.

நான்காவது உதவி நீதிபதி, நகர உரிமையியல் நீதிமன்றம் அவர்கள் தீர்ப்பில் திருமதி. கங்கம்மாள் சட்டரீதியான மனைவி என்று அவருக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது. இருப்பினும் திருமதி. கௌரிக்கு பிறந்த குழந்தைகளுக்கும், பணிக்கொடை சேமநலநிதி மற்றும் குடும்ப ஓய்வுதியத்தில் பங்கு உண்டு எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. அந்த ஆணையை எதிர்த்து திருமதி. கௌரி மேல் முறையீடு செய்தார். கூடுதல் நீதிபதி (பொறுப்பு) 4–வது கூடுதல் நகர உரிமையியல் நீதிமன்றம் அவர்கள் மேல்முறையீடு (ஏ. எஸ். எண். 268/90) மீது 12.07.91 அன்று கீழ் கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது. 1–ம் பிரதிவாதியையும் (திருமதி. கௌரி) அவருடைய மகன் பஞ்சாட்சரம் என்பவரையும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக 2–ம் பிரதிவாதி தன்னுடைய எதிர் வாதுரையில் கூறியுள்ளார். எனவே சேமநல நிதியை 1–ம் பிரதிவாதியும் அவருடைய மகன் பஞ்சாட்சரம் மட்டுமே முழுமையாக பெற உரிமையுள்ளவர்கள். அந்த தொகையை அவர்களுக்கு கொடுக்கக் கூடாது என்று எந்தவித உறுத்துக் கட்டளையும் பிறப்பிக்க முடியாது மற்ற ஓய்வூதியம், பணிக் கொடை தொகை மற்றவைகளை பொறுத்து 1–ம் பிரதிவாதி இறந்து போன நடராஜபக்தருக்கு சட்டப்படியான மனைவி இல்லை என்றாலும் 1–ம் பிரதிவாதிக்கும், நடராஜபக்தருக்கும் பிறந்த குழந்தைகளுக்கும் நடராஜனின் பணிக் கொடை தொகை ஓய்வூதியம் மற்றவைகளில் பாத்தியம் உண்டு எனவே அந்த தொகைகளை அவர்களுக்கு கொடுக்கக் கூடாது என்று உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்க இயலாது. ஆனால் அந்த தொகையில் 1–ம் பிரதிவாதியின் குழந்தைகளுக்கு எவ்வளவு பங்கு மற்றும் வாதி அவருடைய குழந்தைகளுக்கு எவ்வளவு பங்கு என்பதை தனியாக நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதை இந்த வழக்கில் செய்ய இயலாது.

இறுதியாக இந்த மேல் முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, கீழமை நீதி மன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் மாற்றியமைக்கப்படுகிறது. கீழமை நீதிமன்றம் வழங்கிய விளம்புகை பரிகாரத்தை ஊர்ஜிதம் செய்தும், கீழமை மன்றம் வழங்கிய நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தை ரத்து செய்தும் மாற்றி அமைக்கப்படுகிறது.

மேல் முறையீடு எண்.268/90 ஆணை நாள்–12.07.91ன்படி திருமதி. என். கௌரிக்கு சேம நலநிதி ரூ.584/– வழங்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர் கீழ் கண்டவாறு கூறியுள்ளார்.

In terms of the said Judgement, the plaintiff and her children along with the I defendants children will be entitled to a share of the death benefits in accordance with law. Though the amount should be paid to the nominee, the nominee is only a Trustee for the legal heirs. The ruling of the Supreme Court of India in AIR 1984 SC 354 and the Hon'ble High Court of Madras in AIR 1981 had confirms that the amount to he paid is sharable by all the heirs and the nominee cannot appropriate the same. Therefore, the legal heirs of the deceased may be directed to obtain necessary orders as to the ratio of shares payable to each and the amount may be disbursed accordingly.

சென்னை மாநகராட்சி தணிக்கைத் துறை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

It is informed that the rightful claimant for the settlement of dues of the deceased employee may be identified of by the administration as per the Court orders and following the executive instructions issued by Government form time to time.

பின்னர் திருமதி. கௌரி, ஒ.எஸ். எண்.1516/94. நாள்– 15.10.1997. நீதிமன்ற தீர்ப்பு நகலும் நீதிமன்றத்தில் செய்த சமரச உடன்படிக்கை நகலும் சேர்த்து இறப்புகால பயன்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

" The parties having filled a Memo of Compromise and the Court in recording the same the Court doth order and decree as follows:

1. That the plaintiffs and the 1st defendant be and are hereby declared and entitled equally of the family benefits now standing to the credit of the deceased N.C. Natrajan with the 2nd defendant.
2. That the amount accrued in the family pension as on September 1997 the plaintiffs shall be entitled to 50% equally and that from October 1997 the 1st defendant shall be entitled to get family pension. October 1997 onwards for which the plaintiffs having agreed and assured that they will not claim any future pension.
3. That the plaintiffs mother Gowrie or the plaintiffs are to liberty to seek employment with the 2nd defendant on Compassionate ground and the 1st defendant shall not make any objection for the same.
4. That there be no Costs in this Suit.

மேலும் திருமதி.கௌரியின் மகன் ஓம். முருகாவுக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க திரு. என். பஞ்சாட்சரம், திருமதி என். ஸ்ரீதேவியும் ஆட்சேபனையின்மை கடிதம் அளித்துள்ளார்கள்.

சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர் அவர்கள் தனது குறிப்பில் கீழ் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

" The Judgment passed by the City Civil Court in A.S. No.268/90 at page 137 has to be followed and the parties after receiving the benefit in them had can act to compromise deed. The compromise deed will not bind the Corporation of Chennai and the Corporation of Chennai can disburse the benefits and other amounts as per Judgment in A.S. No.268/90.

ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்ற கோப்பு தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டது.

துணை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அவர்கள் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

‘’ 2–வது மனைவியின் குழந்தைகளுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குவதற்கு ஓய்வூதிய விதிகளில் இடமில்லாத நிலையில், மேற்படி தீர்ப்பில் காலஞ்சென்ற பணியாளரின் 2–வது மனைவி திருமதி. கௌரி சட்டப்படியான மனைவியில்லை யெனினும் அவரது பிள்ளைகளுக்கு பணிக்கொடை மற்றும் இவற்றில் பாத்தியம் உண்டு எனவும் தெரிவித்துள்ளது. மேலும் இரு மனைவியரும் செய்து கொண்ட "Memorandum of Compromise" அடிப்டையில் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் ஓய்வூதிய நிலுவைத் தொகையை முதல் மனைவி மற்றும் 2–வது மனைவியின் குழந்தைகளுக்கு 50% சதவீதம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஓய்வூதிய விதிகளுக்கு முரணாக உள்ளதால் அரசுக் கடிதம் எண். 38669/ஓய்வூதியம்/93–1/ 25.06.1993ல் குறிப்பிட்டவாறு அரசின் ஆணை பெறப்பட்ட பின்னரே ஓய்வூதியப் பயன்கள் வழங்க இயலும் என தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

திரு. ஓம். முருகா, த/பெ. நடராஜன், அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். டபிள்யூ.பி. எண்.29567/99ல் தாக்கல் செய்யப்பட்ட "Memorandum of Compromise" ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. It is mutually agreed that the petitioner and the respondents 4 and 5 are jointly entitled to 50% of the retirement benefits and family pension of the late N.C.Natarajan the deceased employee of the respondents 1 and 2. and that the 3rd respondent herein is entitled to have the remaining 50% of the same.
2. The petitioner herein along with the Respondents 4 and 5 jointly agreed to take 50% of the retirement benefit as well as the monthly pension as on the date of disbursement with the 3rd respondent herein and that the 3rd respondent herein also agree to take the remaining 50% which benefits are lying with the respondents 1 and 2 to the credit of late N.C.Natarajan.
3. The petitioner, the respondents 4 and 5 thereafter shall have to claim over the monthly pension which future monthly pension shall be taken solely by the 3rd respondent herein.

**4.** The 3rd respondent herein agrees and gives consent that the petitioner and the respondents 4 and 5 are at liberty to seek employment with the respondents 1 and 2 on compassionate ground and for the same the 3rd respondent shall have no objection.

மேற்கண்ட உடன்படிக்கையின் அடிப்படையில், உயர்நீதிமன்றமும் அவ்வாறே உத்தரவிட்டுள்ளது. உதவி சட்ட அலுவலர் (தெற்கு) அவர்கள் தனது 19.05.2004 நாளிட்ட கருத்துரையில்

" As per the pension rules, the legally wedded wife alone is entitled for receiving the pensionery benefits of the deceased employee in this case. It is settled by the city civil Court that Smt.Gangammal (a) Gangabai is thelegally wedded wife. i.e.. Gangammal (a) Gangabai and other benefits may be settled to all the Legal heirs of the deceased employee as per Compromise Memo filed before the High Court of Madras in W.P.No.20561/99 என்று தெரிவித்துள்ளார்.

மேலும், உதவி சட்ட அலுவலர்(தெற்கு) அவர்களின் குறிப்பில் சம்பந்தப்பட்ட நபர்களை மண்டல அலுவலர் அவர்களின் முன்னிலையில் 20 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதியப் பயன்களை வழங்க அபிடேவிட் பெற்று ஆணையர் அவர்களுக்கு ,விரிவான குறிப்பு வைத்து ஆணை பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி 20 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் அனைத்து வாரிசுதாரர்களிடமிருந்தும் தடையின்மை அபிடேவிட் பெற்று இணைக்கப்பட்டுள்ளது.

துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அவர்களின் குறிப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.என்.சி.நடராஜன், அலுவலக உதவியாளர் 16.03.1987ல் மறைந்தவரின் குடும்ப ஓய்வூதிய கோப்பு பெறப்பட்டுள்ளது. தணிக்கைச் சான்றின்படி முதல் மனைவி திருமதி.கங்கம்மாள் என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது. தணிக்கைச் சான்றில், நீதிமன்றத்தால் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு ஓய்வூதிய விதிகளுக்கு முரண்பாடாக உள்ளது என்றும் நீதிமன்ற தீர்ப்பிற்கு ஏற்ப குடும்ப ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படுவதற்கு ஏதுவாக ஒய்வூதிய விதிகளை தளர்த்தி அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இரண்டாவது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை அளிப்பது குறித்தும் மற்றும் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு கோருவது குறித்தும் நிர்வாக ரீதியாக முடிவு செய்யப்பட வேண்டும்.

எனவே, காலஞ்சென்ற திரு.என்.சி.நடராஜன் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியப் பயன்களை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு எண் W.PNo.20561/99, 21.11.2003 (Compromise Memo) அடிப்படையில் ஒய்வூதிய விதிகளை தளர்த்தி அரசின் தளர்வாணை பெற .அரசுக்கு கடிதம் எழுத நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.அ5.ந.க.எண்.6751/2002**
**ஆணையாளர் அவர்களின் 11.9.2006 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.355/2007 பொருள் எண்.35

**பணியமைப்பு–ஓய்வூதிய விதி தளர்வு**

திரு.ஒட்டா சுப்ரமணி, துப்புரவு பணியாளர், பணி எண்.556460, கோட்டம்–97, பகுதி–19, மண்டலம்–7 அவர்கள் பணிக்காலத்தில் 12.3.1998 அன்று காலமானார். அன்னாரின் ஈமச்சடங்கு செலவிற்காக மண்டல அலுவலர்–7 அவர்களின் 12.3.1998 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி ரூ.5,000/– காலஞ்சென்ற பணியாளரின் சிறிய தாயாராகிய திருமதி கே.எம்ரோஸ் அவர்களிடம் வழங்கப்பட்டது.

திருமதி கே.எம்ரோஸ் அவர்களின் 29.7.1998 நாளிட்ட கடிதத்தில், தனது அக்கா மகன் திரு.ஒட்டா சுப்ரமணி அவர்களுக்கு சேர வேண்டிய பணிப்பயன்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று தர கோரினார். தணிக்கை துறையின் கடிதத்தில் அன்னாருக்கு சேர வேண்டிய பணிப்பயன்கள் ரூ.60,800/– வழங்கலாம் என தெரிவிக்கப் பட்டது.

நீதிமன்ற ஆணையின்படி, காலஞ்சென்ற திரு.ஒட்டா சுப்ரமணி, துப்புரவு பணியாளர் அவர்களின் சிறிய தாயாராகிய திருமதி கே.எம்ரோஸ் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க, கணக்கு அலுவலர்(ஓ) அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மனுதாரர் திருமதி கே.எம்ரோஸ் அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற மரபுரிமை சான்று பெற்று தனக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று கோரியுள்ள நிலையில், உயர்நீதிமன்ற மரபுரிமை சான்றின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க, முதலில் கோப்பினை பகுதி கணக்கு குழுமம் வழியாக குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்து தணிக்கை துறையின் சான்று பெற வேண்டும். தணிக்கை துறையின் சான்று பெற்ற பின்னர் சிற்றன்னைக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குவது ஓய்வூதிய விதிகளுக்கு முரணாக உள்ளதால் அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும். மேலும் கோப்பினை பரிசீலனை செய்ததில் மனுதாரர் மரபுரிமை சான்றுபெற வேண்டி இறந்த பணியாளரின் பணிக்கால சேமிப்பு மற்றும் இதர பணப்பயன்கள் எவ்வளவு என்று வினவிய நிலையில் உதவி செயற் பொறியாளர் / பகுதி–19, மண்டலம்–7 அவர்கள் மனுதாரருக்கு அனுப்பிய பதிலில் கூட்டுக்காப்பீட்டுத் தொகை வருங்கால வைப்புநிதி தொகை, ஐந்தாவது ஊதியக்குழு நிலுவை தொகை, 35 நாட்கள் ஈட்டிய விடுப்பு தொகை மற்றும் சிறப்பு வைப்பு நிதி தொகை ஆகியவை ரூ.1,25,453/– என்று தெரிவிக்கப்பட்டிருந்தும் எவ்வாறு மரபுரிமை சான்றில் மாத குடும்ப ஓய்வூதியத்துடன் மரபுரிமை சான்று பெற்றார் என்று தெரியவில்லை இக்கருத்தினையும் ஆணையருக்கு சமர்ப்பிக்கப்படும் குறிப்பில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

கணக்கு அலுவலர்(ஓ) அவர்களின் 6.4.2005 நாளிட்ட கருத்துருவின் அடிப்படையில் காலஞ்சென்ற திரு.ஒட்டா சுப்ரமணி, துப்புரவு பணியாளர் அவர்களின் சிறிய தாயாராகிய திருமதி கே.எம்ரோஸ் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம், உயர் நீதி மன்ற மரபுரிமை சான்றின் அடிப்படையில் வழங்க கோப்பு மற்றும் பணிப்பதிவேடு பகுதி கணக்கு குழுமம், மண்டலம்–7 மூலமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை சான்று பெற அனுப்பப்பட்டது.

துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, சென்னை மாநகராட்சி அவர்களின் 7.10.2005 நாளிட்ட கடிதத்தின்படி 12.3.1998ல் மரணமடைந்த திரு.ஒட்டா சுப்ரமணிக்கு நேரடி வாரிசுதாரர்கள் இல்லாததால் அன்னாரின் சிறிய தாயாருக்கு (தாயாரின் தங்கை) பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

மறைந்த பணியாளரின் சிறிய தாயார் திருமதி எம்ரோஸ், உயர்நீதிமன்றத்திலிருந்து மரபுரிமை சான்றிதழ் ( OP.NO.24 of 2003, நாள் 1.4.2003 ) பெற்று அதனடிப்படையில் தனக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு கோரியுள்ளதை தொடர்ந்து குடும்ப ஓய்வூதிய கருத்துரு தணிக்கைச் சான்றுக்காக பெறப்பட்டது.

பணியாளரின் / ஓய்வூதியரின் நேரடி வாரிசுதாரர்களான மனைவி / கணவன், மகன், மகள், தந்தை மற்றும் தாய் ஆகியோருக்கு மட்டுமே குடும்ப ஓய்வூதியம் வழங்க ஓய்வூதிய விதிகளில் அனுமதி உண்டு சிறிய தாயாருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளில் வழிவகை இல்லை. ஆகவே, 25.6.1993 நாளிட்ட நிதித்துறை கடித எண்.38669/ஓய்வூதியம்/93–1ன்படி சம்பந்தப்பட்ட ஓய்வூதிய விதிகளை தளர்த்தி, மறைந்த பணியாளரின் சிறிய தாயாருக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதித்து அரசாணை பெறப்பட வேண்டும் என்று துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<u>ம.அ.7.அ5.ந.க.எண்.6751/2002</u>

காலஞ்சென்ற திரு.ஒட்டா சுப்ரமணி, துப்புரவு பணியாளர், கோட்டம்–97, பகுதி–19, மண்டலம்–7 அவர்களின் சிறிய தாயார் திருமதி கே.எம்ரோஸ் அவர்கள் மரபுரிமை சான்று பெற இறந்த பணியாளரின் பணிக்கால சேமிப்பு மற்றும் இதர பணப்பயன்கள் எவ்வளவு என்று வினவிய நிலையில் உதவி செயற் பொறியாளர்/ பகுதி–19 அவர்கள் மனுதாரருக்கு அனுப்பிய பதிலில் பணப்பயன்கள் மொத்தமாக ரூ.1,25,453/– என்று தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் மரபுரிமைச்சான்றில் குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு மரபுரிமை சான்று பெற்றுள்ளார்.

ஆகையால், காலஞ்சென்ற திரு.ஒட்டா சுப்ரமணி, துப்புரவு பணியாளர், கோட்டம்–97, பகுதி–19, மண்டலம்–7 காலமான நாள் 12.3.1998 அவர்களின் சிறிய தாயாராகிய திருமதி கே.எம்ரோஸ் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளில் வழிவகை இல்லாமையால் 25.6.1993 நாளிட்ட நிதித்துறை கடித எண்.38669/ஓய்வூதியம்/93–1ன்படி சம்பந்தப்பட்ட ஓய்வூதிய விதிகளை தளர்த்தி மறைந்த பணியாளரின் சிறிய தாயாருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க அரசாணை பெற மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ1/26490/2006.**
**ஆணையாளர் அவர்களின் 20.06.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.356/2007 பொருள் எண்.36

**பணியமைப்பு – ஊதிய நிர்ணயம்**

10.07.2006 நாளிட்ட சென்னை மாநகராட்சி பொறியியல் சங்கத்தின் கடிதத்தில், சென்னை மாநகராட்சி பொறியியல் விதியில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு முன்னர் ஏற்பட்ட 101 உதவி செயற்பொறியாளர்கள் காலி பணியிடங்களில் 97 பட்டயப் பொறியாளர்கள் மட்டுமே பணியமர்வு செய்யப்பட்ட காரணத்தினால், நான்கு பட்டயப் பொறியாளர்களுக்கு இப்பணியிடங்களை ஒதுக்கி தக்க ஆணை வழங்கிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி பொறியியல் பணி விதி, 1969க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. இத்திருத்தத்தின்படி, 15.11.89க்கு பிறகு உதவி செயற்பொறியாளர் பதவிஉயர்வில் 3:1 (மூன்று பட்டப் பொறியாளர் மற்றும் ஒரு பட்டயப் பொறியாளர்) என்ற வீதத்தில் பதவி உயர்வு அளிக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு எதிராக சென்னை மாநகராட்சி பொறியாளர்களால் தொடுத்த வழக்கில் (Civil Appeal No.406/93, dated.3.2.1993 ) உச்ச நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்ப்பு பகன்றது

- " The Corporation shall ascertain the vacancies in the category of A.E.E. that have arisen three months prior to the coming into force of the impugned amendment (introducing the quota of 3:1 as between degreeholders and diplomaholders) and
- shall work out the vacancies which would have gone to the diplomaholders if unamended rules had been followed.
- The Corporation shall also ascertain which of the diplomaholders would have been promoted in those vacancies, such diplomaholder will be promoted in the vacancies that may be existing as on today and those that may arise in future.
- Until these diplomaholders are so promoted to the category of assistant executive engineers, no degreeholders shall be promoted. After these diplomaholders are so promoted and thereafter, it is obvious the amended rules shall be applied and follwed.
- It is further directed that as and when a diplomaholder is promoted in pursuance of this direction, his promotion shall be given effect to from the date he ought to have been promoted".

மேற்படி உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து, 1975 முதல் 1989 (01.06.75 முதல் 14.11.1989 வரை) ஆம் ஆண்டுவரை உதவி செயற்பொறியாளர் பணியிடத்தில் ஏற்பட்டிருந்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை 101 எனக் கணக்கிடப்பட்டது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, பிரிவு எண்.87ன்படி, சென்னை மாநகராட்சியில் ஏற்படும் காலிப்பணியிடங்களை மூன்று மாதத்திற்குள் நிரப்ப வேண்டும். இதன் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில், விகிதாச்சாரம் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று மாதத்திற்குள்ளான காலத்தில், பழைய நடைமுறையினை பின்பற்றியிருந்தால், எந்தெந்த பட்டயப் பொறியாளர்களுக்கெல்லாம் சட்டப்படி பதவி உயர்வு கிடைத்திருந்திருக்குமோ அத்தகைய நபர்களைக்கொண்ட பட்டியலை தயாரிக்க உத்தரவிட்டது.

இதன்அடிப்படையில், பழைய நடைமுறையின்படி, பட்டயப் பொறியாளர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தால், எந்தெந்த பட்டயப் பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கும் என ஆய்வு செய்யப்பட்டு, மேற்படி 101 காலிப்பணியிடங்களில் தகுதியான பட்டயப் பொறியாளர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு மூப்பு நிலையும் சென்னை மாநகராட்சி ஆணையரின் 17.3.1993 நாளிட்ட செயல்முறை ஆணையின் வாயிலாக நிர்ணயம் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, புதிய விகிதாச்சார முறை கடைபிடிப்பதற்கு முந்தைய காலத்தில், இப்பட்டியலில் அடங்கியுள்ள 101 பொறியாளர்கள் மட்டுமே உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற தகுதியானவர் ஆகிறார்கள்.

இதில் பின்வரும் நான்கு பட்டயப் பொறியாளர்களுக்கு அரசால் பணி உறுதியாக்கம் செய்ய பரிசீலனை செய்யப்பட்ட நாளில் இவர்கள் பணியில் இல்லாததால்/ஓய்வு பெற்றிருந்த காரணத்தினால் இவர்களுக்கு மட்டும் பணி உறுதியாக்கம் செய்யப்படவில்லை.

| வரிசை எண். | உ.செ.பொ. பணிமூப்புப் பட்டியலில் வரிசை எண். | பெயர் | பணிநியமனம் செய்யப்பட்ட நாள் | உ.செ.பொப பதவிக்கு தகுதி பெற்ற நாள் | ஓய்வு பெற்ற நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 25 | எம். தாண்டவமூர்த்தி | 10.09.1963 | நவம்பர் 74 | 30.04.93 |
| 2 | 36 | டி. கோபாலகிருஷ்ணன் | 02.01.1964 | மே 75 | == |
| 3 | 52 | ஆர். மாதவன் | 18.09.1962 | நவம்பர் 77 | 30.09.89 |
| 4 | 53 | ஆர்.ஆர். போஸ் விக்டர் | 13.08.1963 | நவம்பர் 77 | 30.09.92 |

அரசால் பரிசீலிக்கப்பட்ட நாளில் மேற்குறிப்பிட்ட நான்கு பொறியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த காரணத்தால், இவர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவியில் பணி உறுதியாக்கம் செய்யப்படவேண்டிய நிகழ்வு எழாததால், அரசாணை எண்.44, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 2.3.2001ல் இவர்களின் பெயர்களைத் தவிர்த்து ஏனைய 97 நபர்களுக்கு மட்டுமே பணி உறுதியாக்கம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.203, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 30.10.2000ன்படி, பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்ட அரசு ஊழியர், வயது முதிர்வின் காரணமாக ஓய்வுபெற்ற பின்னர், அரசின் பரிசீலனைக்குப் பின்னர் தகுதி மற்றும் முதுநிலை அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு முந்தைய பட்டியலில் சேர்க்கப்படுவார்களேயானால், அத்தகையோருக்கு இளையோர் பதவி உயர்வு பெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பணப்பயன்கள் அனைத்தும் அடையும்பொருட்டு, அடிப்படை விதி 27=ன் முறைமை (17)=ன்கீழ் ஓய்வு பெற்ற நாளன்று கருத்தியலான (Notional ) ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

எனவே, மேற்படி அரசாணையின்படி, பணிமூப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ள, பணியிலிருந்து ஓய்வுபெற்ற மேற்குறிப்பிட்ட நான்கு பட்டயப் பொறியாளர்களுக்கு அவர்களுக்குண்டான பணி மூப்பு நிலை நிர்ணயம் செய்து அடிப்படை விதி 27=ன் முறைமை (17)=ன்கீழ் ஓய்வு பெற்ற நாளன்று கருத்தியலான (Notional ) ஊதிய நிர்ணயம் செய்ய நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ7.ந.க.எண்.அ4/2343/2007
ஆணையாளர் அவர்களின் 23 .05.2007 நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.357/2007 பொருள் எண்.37

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்த அனுமதி

திரு.சி.பாலகிருஷ்ணன், துப்புரவு பணியாளர், பணிஎண்.526837, கோட்டம்–106, பகுதி–20, மண்டலம்–7, அவர்கள் 16.10.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்குவராமை குறித்து, குறிப்பாணை வழங்கப்பட்டது.

குறிப்பாணையை தனியர் பெற்றுக்கொண்டு, அக்குறிப்பாணைக்கு விளக்கம் சமா்பித்துள்ளாா். அதில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தனது சொந்த ஊரான ஆந்திராவுக்கு சென்று வைத்தியம் பார்த்ததால் தன்னால் 16.10.2004 முதல் பணிக்கு வரமுடியவில்லை, என்றும் தனக்கு உடல்நிலை தேறியதால் தன்னை மீண்டும் பணியில் சேர்க்கவும், பணிக்குவராத நாட்களை சம்பளம் இல்லாத விடுப்பாக வழங்கவும் கோரியுள்ளார். தனியர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை.

தனியருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை ஏற்படுத்தி சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1)ன் படி கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

1) 16.10.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது
2) சென்னை மாநகராட்சியின் அன்றாட பணிக்கு குந்தகம் விளைவித்தது.
3) சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி–20ஐ மீறியது.

இக்குற்றச்சாட்டு குறிப்பாணை தனியரின் மகள் அவர்களிடம் 08.10.2005 அன்று சார்வு செய்யப்பட்டது.

தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணை பெற்றுக் கொண்டு 20.12.2005 அன்று விளக்கம் சமா்பித்துள்ளாா். அதில் தன் மனைவி இறந்து சில நாட்களில் தனக்கு மஞ்சள்காமாலை வந்துவிட்டது என்றும், தான் இரண்டு இடத்தில் வைத்தியம் பார்த்தேன் என்றும், நோய் சுகமாகாத காரணத்தினால் தான் சொந்த ஊரில் மருந்து சாப்பிடுவதற்கு சென்றுவிட்டேன் என்றும், தன் பிள்ளைகளுக்கு எழுத படிக்க தெரியாததால் முன்னறிவிப்பு கொடுக்க முடியாமல் போய்விட்டது. என்றும் அதனால் தன் மீது கருணை வைத்து மீண்டும் பணியில் சேர்க்கவும் கோரியுள்ளார்.

அதனடிப்படையில் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர மண்டல அலுவலர்–7 அவர்களின் 07.03.2006 அன்று ஆணை வழங்கப்பட்டது. தனியர் இவ்வாணையை பெற்றுக்கொண்டு 12.03.2006 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக ஆணையாளர் அவர்கள் தனியருக்கு ஓராண்டு காலத்திற்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்று நிறுத்தவும், தனியர் பணிக்கு வராத காலம் 16.10.2004 முதல் 11.03.2006வரை ஓராண்டு கடந்துள்ளதால் இக்காலத்தை வரன்முறைப்படுத்த அரசுக்கு அனுப்பி விதி 18(2)ன் படி தளர்வாணை பெறவும் ஆணை வழங்கியுள்ளார். கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 05.04.2007 நாளிட்ட செயல்முறை ஆணை தனியருக்கு சார்வு செய்து ஒப்பம் பெறப்பட்டது.

எனவே, திரு.சி.பாலகிருஷ்ணன், துப்புரவு பணியாளர், கோட்டம்–106, பகுதி–20, மண்டலம்–7, அவர்கள் 16.10.2004 முதல் 11.03.2006 வரை பணிக்கு வராமல் இருந்த காலம் ஓராண்டு கடந்துள்ளதால் இக்காலத்தை வரன்முறைபடுத்த அரசுக்கு அனுப்பி அடிப்படை விதி 18(2)ஐ தளர்வாணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.358/2007 பொருள் எண்.38

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன் முறைப்படுத்துதல்**

திருமதி.ராயலம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்–72, மண்டலம்–5 அவர்கள் 16.01.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்ற பணியாளர் 16.06.2004 நாளிட்ட விளக்கத்தில் தனக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற்று வந்தார் என்றும், அவரை சோதித்த மருத்துவர் மஞ்சள் காமாலை நோய் உள்ளது என்று கூறியதாகவும், அவர் சொந்த கிராமத்திற்கு சென்று நாட்டு மருந்து சிகிச்சை பெற்று வந்தார் என்றும், தன் வீட்டின் அருகில் யாரும் இல்லாத காரணத்தினாலும் தனக்கு படிப்பறிவில்லாத காரணத்தினாலும் தன்னால் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க இயலவில்லை என்றும் தன்னை மன்னித்து இந்த முறை பணிக்கு எடுத்துக்கொள்ளவும் இனி வரும் நாட்களில் இது போல் தவறு செய்யமாட்டேன் என்றும் கூறியுள்ளார். பணியாளர் அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு–1 தாங்கள் 16.01.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறிய செயலாகும்.

குற்றச்சாட்டு–2 மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு காலதாமதமாக விளக்கமளித்துள்ளீர்.

குற்றச்சாட்டு–3 துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றங்களுக்காக குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்ற பணியாளர் தனது 15.07.2004 நாளிட்ட விளக்கத்தில் கடந்த 16.01.2004 அன்று உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் (மஞ்சள் காமாலை நோய்) ஆந்திராவில் சிகிச்சை செய்து வந்தேன் என்றும், இதனால் மண்டல அதிகாரி அனுப்பிய கடிதத்திற்கு குந்தகம் விளைவிக்கவில்லை என்றும், உடல்நிலை இப்போது சரியாக உள்ளது என்றும், இனி இது போல் தவறினை செய்ய மாட்டேன் என உறுதியுடன் தெரிவித்துக்கொண்டும், தன்னை மன்னித்து மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள கோரியுள்ளார்.

பணியாளர் மீதுள்ள குற்றச்சாட்டை விசாரணை செய்ய திரு.எஸ்.சண்முக பெருமாள், வழக்கறிஞர் அவர்களை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார். அதன்படி பணியாளரை விசாரணை செய்த விசாரணை அலுவலர் தனது 05.01.2005 நாளிட்ட அறிக்கையில் தனியர் வேண்டும் என்றே, மேற்கண்ட கற்றச்சாட்டுகளை செய்திருப்பார் என்று தோன்றவில்லை என்றும் 3 குற்றச்சாட்டுகளுக்கும் தனியர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதனால் பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை என அறிக்கையளித்துள்ளார்.

விசாரணை அறிக்கையின் மீது கூடுதல் விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டது அதனை பெற்ற பணியாளர் தனது 20.01.2005 மற்றும் 26.05.2005 நாளிட்ட விளக்கத்தில் அவர் விசாரணை அலுவலர் முன்பு தெரிவித்த விளக்கம் அனைத்தும் உண்மையே என்றும், தன்னை மன்னித்து மீண்டும் பணியில் சேர ஆணை வழங்க கோரியுள்ளார். துணை ஆட்சியர் (நி) அவர்களின் 18.03.2005 நாளிட்ட குறிப்புரையின்படி திருத்திய விசாரணை அறிக்கை பெறப்பட்டது. விசாரணை அறிக்கையின் மீது கூடுதல்

விளக்கம் கோரப்பட்டது. பணியாளர் 20.01.2005 அன்று அளித்த விளக்கத்தையே 26.05.2005 அன்று அளித்துள்ளார்.

ஆணையர் அவர்களின் 23.06.2005 நாளிட்ட ஆணையின்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 16.07.2005 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிகிறார்.

<u>ம.அ5.ந.க.எண்.சி2/4618/2004</u>

எனவே, திருமதி.ராயலம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்–72, பகுதி–14, மண்டலம்–5 அவர்கள் 16.01.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு தனியரின் விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை, அதற்கு பணியாளரின் கூடுதல் விளக்கம், ஆகிய தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையில் மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படாததால் நிகழ்வு கருணையுடன் அனுகியதில், இறுதி ஆணையாக ஆறு மாத காலத்திற்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

எனவே, தனியர் பணிக்கு வராத காலமான 16.01.2004 முதல் 15.07.2005 வரை உள்ள காலம் ஓராண்டுக்கு மேற்படுவதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**இ.பொ.து.அ.ந.க.எண்.பி1 / 365 / 2005**
**ஆணையாளர் அவர்களின் 02.07.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.359/2007 பொருள் எண்.39

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன் முறைப்படுத்துதல்**

திரு. எம். ஏ. சுப்புராயன், லேயர் ஆன் மாநகராட்சி அச்சகம், இ. பொ. துறை அவர்கள் 01.09.1992 முதல் 31.01.1994 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமையால் சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலை பணியாளர் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 விதி 9(2) கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனையாக தனியரது அடிப்படை சம்பள விகிதத்தினை குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கவும், பணிக்கு வராத காலத்தினை தகுதியுடைய விடுப்பாக பாவிக்கவும் ஆணை வழங்கப்பட்டது.

எனினும் திரு. எம். ஏ. சுப்பராயன், லேயர் ஆன், அச்சகம் அவர்கள் பணிக்கு வராத காலம் ஒரு வருடத்தினை கடந்துள்ளதால் அக்காலத்தை அரசு ஆணையுடன் வரண்முறைப்படுத்த வேண்டும் என்ற நிலையில் மன்றத்தின் ஒப்புதல் (நியமனக்குழு மூலமாக) திரு.எம்.ஏ.சுப்பராயன், லேயர்ஆன் அச்சகம் இ. பொ. துறை அவர்கள் 01.09.1992 முதல் 31.01.1994 வரை பணிக்கு வராத காலத்தை தகுதியுடைய விடுப்பாக வரண்முறைப்படுத்தியதை ரத்து செய்யவும். திரு. எம். ஏ. சுப்பராயன், லேயர் ஆன், அச்சகம், இ. பொ. துறை, அவர்கள் 01.09.1992 முதல் 31.01.1994 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தினை அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து வரண்முறைப்படுத்தி அரசின் ஆணை பெறவும், அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

எனினும் அரசுக் கடிதத்தில் 08.08.2000க்கு முந்தைய அடிப்படை விதி 18(3)ன்படி ஐந்தாண்டு பணி முடித்தவர் ஓராண்டிற்கு மேல் விடுப்பில் இருந்தால் அவர் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையில் குற்றச்சாட்டுகள் நிரூபணமானதாக கருதி தண்டனை வழங்குவதாயின் பணிநீக்கம் தண்டனைதான் வழங்க வேண்டும் அதற்கு மாறாக அடிப்படை சம்பள விகிதத்தினை குறைந்தபட்ச அடிப்படை சம்பள விகிதமாக ஐந்து ஆண்டுகளுக்கு குறைத்து வழங்க உத்தரவு இடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிகழ்வில் 08.08.2000க்கு முந்தைய அடிப்படை விதி 18(3)க்கு மாறாக தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதால் அதற்காக அடிப்படை விதி 18(3) தளர்வு செய்ய வேண்டும் அதற்காக மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு உரிய செயற்குறிப்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இந்நிலையில் திரு. எம். ஏ. சுப்பராயன், லேயர் ஆன் அச்சகம், இ. பொ. துறை 01.09.1992 முதல் 31.01.1994 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தினை அடிப்படை விதி 18(3)ஐ தளர்வு செய்து வரன்முறைப்படுத்த அரசின் ஆணை பெறவும் அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ8.ந.க.எண். எ5/5314/2003
ஆணையாளர் அவர்களின் 25.06.2007 நாளிட்ட குறிப்பு

## 30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.360/2007 பொருள் எண்.40

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன் முறைப்படுத்துதல்

திரு.சின்ன ஒபைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–120, பகுதி–24 மண்டலம்–8, அவர்கள் 16.02.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. அவர் பணிக்கு வராதது பற்றி அலுவலகத்திற்கு தகவலோ அல்லது விடுப்புக் கடிதமோ அளிக்கவில்லை. எனவே தனியருக்கு உதவி செயற் பொறியாளர், பகுதி–24, அவர்கள் குறிப்பாணை வழங்கி விளக்கம் கேட்கப்பட்டது. குறிப்பாணையை தனியரது வீட்டில் உள்ளவர்கள் பெற்றுக் கொண்டு தனியர் விட்டில் இல்லை என கூறி விட்டதாக உதவி செயற் பொறியாளர்,
பகுதி–24 அவர்கள் 24.07.2003 நாளிட்ட குறிப்புரையில் தெரிவித்துள்ளார். ஆகவே தனியர் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் துணை விதி 9(2)ன் கீழ் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

1) இவர் 16.02.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் துப்புரவு பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
2) இவர் 16.02.1999 முதல் பணிக்கு வராததால் பணியின் மீது உள்ள அக்கரையின்மையை காட்டுகிறது.

குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்ட தனியர் அதற்கான விளக்கக் கடிதத்தை கடைசி வரையிலும் சமர்ப்பிக்கவில்லை. ஒழுங்கு நடவடிக்கையை இறுதியாக்கும் பொருட்டு விசாரணை அலுவலராக உதவி செயற் பொறியாளர், பகுதி–23, அவர்கள் நியமிக்கப்பட்டு, தனியர் விசாரணைக்கு ஆஜராகும் பொருட்டு இருமுறை குறிப்பாணை அனுப்பியும், தனியர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனவே, விசாரணை அலுவலர் ஒரு தலை பட்ச விசாரணை அறிக்கையை சமர்ப்பித்தார். விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று கூடுதல் விளக்கம் வேண்டி தனியருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டு திரும்ப பெறப்பட்டது. ஆயினும் இறுதி முடிவு எடுக்கும் பொருட்டு தனியரின் வீட்டுக் கதவில் 29.03.2004 அன்று சாட்சிகளுடன் ஒட்டு சார்வு செய்யப்பட்டது. இது நாள் வரையில் எந்தவித கூடுதல் விளக்கமும் தனியரால் சமர்ப்பிக்கப்படவில்லை.

விசாரணை அலுவலரின் அறிக்கையும், கோப்பில் இருக்கும் ஆவணங்கள் ஆகியவற்றை கனிவுடன் ஆராய்ந்ததில், தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு பதில் அளிக்காததும், விசாரணைக்கு ஆஜராகாததும் விசாரணை அலுவலர் அவர்களின் அறிக்கைக்கு கூடுதல் விளக்கம் அளிக்காததும் தனியருக்கு பணியின் மேலுள்ளஅக்கறையின்மையை காட்டுகிறது. இறுதி முடிவாக தனியருக்கு மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வினை நிறுத்தி வைக்கவும் ஆணை வழங்கப்பட்டது. இத்தனியரை மீண்டும் பணியில் சேர உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களால் 14.03.2005 உத்தரவிடப்பட்டு, தனியர் 10.04.2005 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, திரு. சின்ன ஒபைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–120, பகுதி–24 மண்டலம்–8, அவர்கள் 16.02.1999 முதல் 09.04.2005 வரையிலான பணிக்கு வராத நாட்களை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ன் கீழ் தளர்வாணை பெற அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மி.து.ந.க.எண். அ2/2550/1999**
**ஆணையாளர் அவர்களின் 13.06.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.361/2007 பொருள் எண்.41

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன் முறைப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி மின்துறையில் நிரந்தர தொழிலாளியாக பணியாற்றும் திரு.டி.கண்ணண் அவர்கள், 21.01.1999 முதல் 06.05.2007 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்திற்காக, அன்னார் மீது சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், குற்றச்சாட்டுகள் நிரூபணமான நிலையிலும், அன்னார் 30.06.2007ல் வயது முதிர்வு ஓய்வு பெறுவதை கருத்தில் கொண்டும், கனிவு நோக்குடன் அவரை “ எச்சரித்து “ விடப்பட்டு ஒழுங்கு நடவடிக்கையில் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை மி.து.ந.க.எண்.அ2/2550/2007, நாள்.24.05.2007ன்படி, இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

எனவே, திரு.டி.கண்ணண் நிரந்தர தொழிலாளி, மின்துறை அவர்கள், 21.01.1999 முதல் 06.05.2007 வரை பணிக்கு வராத 3030 நாட்களை “ அசாதாரண விடுப்பாக (Extra Ordinary Leave without M.C.) “ வரன்முறை செய்திட இவ்விடுப்புக்காலம் ஒரு ஆண்டிற்கு மேல் உள்ள நிலையில் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசாணை பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ1.ந.க.எண்.அ6/1845/03

ஆணையாளா் அவா்களின் 27.06.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீா்மான எண்.362/2007 பொருள் எண்.42

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன் முறைப்படுத்துதல்

திரு. டி. வெங்கடேஸ்வரராவ், நிரந்தர துப்புரவு பணியாளா், வாா்டு–2 (இ.எம்.பி.எண் 743866) பகுதி–1 கடந்த 14.05.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. எனவே அன்னாருக்கு குறிப்பாணை வழங்கி விளக்கம் பெறப்பட்டது. விளக்க கடிதத்தில், தனது தாயாா் உடல் நலம் சாியில்லாமல் இருந்ததால், மருத்துவ சிகிச்சை செய்வதற்காக வெளியூா் சென்றதால், அலுவலகத்திற்கு தகவல் தொிவிக்க இயலவில்லை எனவும், 14.05.2001 முதல் 30.07.2001 வரை சம்பள மில்லா விடுப்பு அளிக்க கோாியுள்ளாா்.

கடிதம் அளித்தபின், அன்னாா் மீண்டும் பணிக்கு வரவில்லை. எனவே, அன்னாா் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளா்கள் ( ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) துணை விதி 9(1)ன் கீழ் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டது. 10.10.2001 அன்று தனியருக்கு தபாலில் சாா்வு செய்யப்பட்டு, திரும்ப பெறப்பட்டது. அன்னாரைப் பற்றி தகவல் ஏதும் பெறப்படாத நிலையில், தனியரே 01.12.2001 அன்று குற்றக் குறிப்பாணையை நோில் பெற்றுக் கொண்டு, விளக்கம் ஏதும் அளிக்காததால் 9(1)ன் கீழ் வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை விலக்கப்பட்டு 9(2)ன் கீழ் பின்வருமாறு குற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது.

1) கடந்த 14.05.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2) குறிப்பாணைக்கு அளித்த விளக்கம் ஏற்கப்படவில்லை. குற்றக் குறிப்பாணையை பெற்றுக் கொண்டு, விளக்கம் அளிக்காதது, தங்களின் அலட்சிய போக்கு மற்றும் மேலதிகாாிகளின் உத்திரவிற்கு கீழ்ப்படியாமையை காட்டுகிறது.
3) அடிக்கடி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத வழக்கம் பணியின் மீது அக்கறையின்மையை காட்டுகிறது.
4) முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கோட்ட துப்புரவு பணிகள் வெகுவாக பாதிக்கப்படுகிறது.

மேற்கண்ட குற்றக் குறிப்பாணையை தனியா் 30.06.2002 அன்று பெற்றுக் கொண்டு, 03.07.2002 நாளிட்ட விளக்க கடிதத்தில், ஆந்திரா மாநிலத்தில் உள்ள ஒங்கோல் கிராமத்தில் தனது தாயாாின் உடல் நிலை சாியில்லாத காரணத்தினால், அருகில் இருந்து கவனித்து வந்த போது, திடிரென மஞ்சள் காமாலை நோய் வந்ததால், பணிக்கு வர இயலவில்லை எனவும் 14.05.2001 முதல் பணிக்கு வராத தன்னை மன்னித்து பணிக்கு எடுத்துக் கொள்ளும் படி கோாியுள்ளாா்.

எனவே, உதவி ஆணையா் (பொ.நி.ம.ப) அவா்களின் உத்திரவின்படி, அன்னாா் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் வைத்து 23.10.2002 முதல் மீண்டும் பணிக்கு அனுமதிக்கப்பட்டாா். இந்நிகழ்வு தொடா்பாக, விசாரணை அலுவலா் உதவி ஆணையா் (பொ.நி.ம.ப) அவா்களின் 21.08.2002 நாளிட்ட உத்திரவுபடி நியமிக்கப்பட்டாா்.

தனியா் விசாரணைக்கு இரு நினைவூட்டுகளுக்கு பின் 21.03.2003அன்று நோில் ஆஜராகி விளக்கம் அளித்துள்ளாா்.

குற்றச்சாட்டு –1க்கு விளக்கம் : தன்னுடைய தாயாா் உடல் நலம் சாியில்லாத காரணத்தினால் ஆந்திர மாநிலம் சென்றதாலும், அங்கு தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதாலும் பணிக்கு வர முடியவில்லை எனவும்,

குற்றச்சாட்டு –2க்கு விளக்கம் : ஆந்திர மாநிலத்தில் மஞ்சள் காமாலை நோய்க்கு சிகிச்சை பெற்று வந்ததால், குற்றக் குறிப்பாணைக்கு பதில் அளிக்கவில்லை. ஆகையால் மன்னிக்கும் படியும்,

குற்றச்சாட்டு –3க்கு விளக்கம் : இனிவரும் காலங்களில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருக்க மாட்டேன், என உறுதி அளிப்பதாகவும்,

குற்றச்சாட்டு –4க்கு விளக்கம் : இனிவரும் காலங்களில் கோட்ட பணிகள் பாதிக்காத வண்ணம் பணிபுாிவதாக உறுதியளிப்பதாகவும், தொிவித்துள்ளாா்.

விசாரணை அலுவலா் தம் அறிக்கையில், தனியா் மீது தொடரப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக குறிப்பிட்டுள்ளாா். இவ்விசாரணை அறிக்கை தனியருக்கு சாா்வு செய்யப்பட்டு விளக்கம் பெறப்பட்டது. அதில் ஏற்கனவே அளித்த விளக்கத்தினை மீண்டும் தொிவித்துள்ளாா்.

<u>ம.அ1.ந.க.எண்.அ6/1845/03</u>

எனவே, தனியர் மீது தொடரப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையில், இறுதி முடிவாக, தனியரின் ஆண்டு ஊதிய உயர்வினை ஓராண்டுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், தனியர் பணிக்கு வராத காலம் 14.05.2001 முதல் 22.10.2002 வரையிலான காலத்தினை தனியருக்கு சம்பளமில்லா விடுப்பாக பாவித்து 18.02.2004 இணை ஆணையர் (பணிகள்) அவர்களால் செயல்முறை ஆணைவழங்கப்பட்டது.

14.05.2001 முதல் பணிக்கு வராத தனியர் 23.10.2002 அன்று மீண்டும் பணியில் சேர்ந்து, மேற்க்கண்ட கோப்பின் மீதான ஒழுங்கு நடவடிக்கை முடியும் முன்னர் மீண்டும் 30.11.2002 முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.

அன்னாருக்கு 18.12.2002 நாளிட்ட குறிப்பாணை துப்புரவு ஆய்வாளரால் 20.03.2003 அன்று சுமார் ஒரு வருடம் 2 மாதங்கள் கழிந்து சார்வு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, துப்புரவு ஆய்வாளர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அன்னார் எச்சரித்து விடுவிக்கப்பட்டுள்ளார் பணியாளர் விளக்கம் அளிக்கவில்லை. மீண்டும், 14.07.2003 அன்று பதிவு தபாலில் அனுப்பப்பட்டு, 10.11.2003 அன்று தன் விளக்க கடிதத்தை அளித்துள்ளார்.

பணியாளர் தனக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டு, ஆந்திர மாநிலம் நெல்லூர் கிராமத்தில் நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால், அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க இயலவில்லை எனவும், மன்னித்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளும்படி கோரியுள்ளார்.

இப்பணியாளர் அடிக்கடி பணிக்கு வராத வழக்க முடையவராததால், இவரது விளக்கம் ஏற்கும்படி இல்லை. இருப்பினும் அன்னார் பணிக்கு அனுமதிக்க கோரியதன் அடிப்படையில், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் வைத்து 11.12.2003 முதல் மீண்டும் பணியில் சேர மண்டல அலுவலரின் 9.12.03 நாளிட்ட ஆணையின்படி அனுமதிக்கப்பட்டார்.

மற்றொரு நிகழ்வில் அன்னார் பணிக்கு வராத காலம் 6 மாதத்தினை கடந்துள்ளதால், சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 நிலை பணியாளர் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) துணை விதி எண் 9(2)ன் கீழ் கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுகள் சுமத்தி விளக்கம் கோரப்பட்டது.

1) கடந்த 30.11.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2) பணிக்கு வராமை குறித்து எவ்வித தகவலும் இதுநாள் வரை அளிக்கவில்லை.
3) முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கோட்ட துப்புரவு பணிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல்.
4) பணிக்கு வர எவ்வித முயற்சியும் மேற் கொள்ளவில்லை.

தனியர் மேற்கண்ட குற்றக் குறிப்பாணைக்கு பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு -1க்கு விளக்கம் :</u> தான் கடந்த 30.11.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை எனவும், மஞ்சள் காமாலை நோய் வந்ததால்தான் ஆந்திர மாநிலம் சென்று நாட்டு மருந்து சாப்பிட்டு வந்ததால், அலுவலகத்திற்கு தெரிவிக்க முடியவில்லை எனவும்,
<u>குற்றச்சாட்டு -2க்கு விளக்கம் :</u> தான் தன்னிச்சையாக வைத்தியம் பார்த்ததால், அலுவலகத்திற்கு தெரிவிக்க இயலவில்லை எனவும்,

<u>குற்றச்சாட்டு -3க்கு விளக்கம் :</u> தான் பணிக்கு வராமல் கோட்ட துப்புரவு பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதால் தன்னை மன்னிக்கவும், இனி கோட்ட பணிகள் பாதிக்கா வண்ணம், பணி செய்வதாகவும், தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வு தொடர்பாக, விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, விசாரணை அறிக்கை சமர்பித்துள்ளார் தனியர் இவ்விசாரணைக்கு நேரில் அஜராகி தான் தடந்த 30.11.2002 முதல் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு, தான் சொந்த ஊரான ஆந்திர மாநிலம் நெல்லூர் கிராமத்தில் நாட்டு வைத்தியம் செய்து வந்ததாகவும், அதனால்தான் பணிக்கு வர முடியவில்லை என்றும் தான் வேண்டுமென்றே பணிக்கு குந்தகம் விளைவிக்க வில்லை என்றும், உடல் நலம் சரியில்லாத காரணத்தால் தான், இதுபோல் நடந்து விட்டதாகவும், இனி ஒழுங்காக பணிக்கு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலர் 02.02.2006 நாளிட்ட விசாரணை அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்ட நபர் 30.11.2002 முதல் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டதாலும் தன் சொந்த ஊரான ஆந்திர மாநிலம் நெல்லூர் கிராமத்தில் நாட்டு வைத்தியம் செய்து வந்ததாகவும், அதனால்தான் பணிக்கு வர முடியவில்லை என்றும் தான் வேண்டுமென்றே பணிக்கு குந்தகம் விளைவிக்கவில்லை என்றும், உடல் நிலை சரியில்லாத காரணத்தால் தான் இதுபோல் நடந்து விட்டேன் எனவும், இனி பணிக்கு ஒழுங்காக வருவதாகவும், உத்திரவாதம் அளித்துள்ளார், மேற்குறிய சாட்சியங்களை வைத்து பார்க்கும் போது குற்றம் சாட்டப்பட்ட நபர் 30.11.2002 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல், குந்தகம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டு

நிரூபணமாகிறது எனவும், மேற்குறிய குற்றச்சாட்டுகளின்படி, குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றவாளி என தீர்மானிப்பதாக தெரிவித்துள்ளார். விசாரணை அறிக்கைக்கு, தனியர் கூடுதல் விளக்கம் எதும் அளிக்கவில்லை.

திரு. டி. வெங்கடேஸ்வரராவ், துப்புரவு பணியாளர் மீது தொடரப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையில், இறுதி முடிவாக, தனியரின் ஊதிய உயர்வினை ஒராண்டிற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 30.11.2002 முதல் 10.12.2003 வரை ஒராண்டிற்கு மேல் உள்ளதால், அடிப்படை விதி 18(1)ஐ தளர்த்த நியமனகுழு மூலமாக மன்ற ஒப்புதல் பெற்று, அரசு தளர்வாணை பெற்று வரன்முறைப் படுத்தப்படும். என 09.08.2006 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

தனியர், 05.08.2000 முதல் பணியில் சேர்ந்த ஐந்து வருடங்களுக்குள் 2 வருடங்களுக்கு மேலாக முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்துள்ளார். அடிப்படை விதி 18(1)ன் படி ஐந்து ஆண்டுகள் பணி முடிக்காத பணியாளருக்கு 6 மாதம் மற்றும் அதற்கும் மேல் தொடர்ந்து விடுப்பு எடுக்க அனுமதி இல்லை. இத்தனியருக்கு 5.8.2000 முதல் பணிவரன் முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தகுதிகாண் பருவம் முடிக்கப்படவில்லை.

தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத முதல் நிகழ்வில், 14.05.2001 முதல் 22.10.2002 வரை சம்பளமில்லா விடுப்பாக பாவித்தும், 2 வது நிகழ்வில் 30.11.02 முதல் 10.12.2003 வரை அரசு தளர்வாணை பெற்று வரன் முறைப்படுத்தவும், செயல் முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தனியர் இரு நிகழ்வுகளில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 14.05.2001 முதல் 22.10.2002 வரை மற்றும் 30.11.2002 முதல் 10.12.2003 வரை உள்ள காலங்கள் ஒராண்டினைக் கடந்துள்ளதால் சம்பளமில்லா விடுப்பாக வரன் முறைப் படுத்த ஏதுவாக, அடிப்படை விதி 18(1)ஐ தளர்த்தி அரசு தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்த அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்ப நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஜி4/7612/2007
ஆணையரின் 21.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.363/2007 பொருள் எண்.43

கருணை அடிப்படையில் பணி நியமனம் – கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி கடைபிடிக்க அனுமதி

சென்னை மாநகராட்சியில். பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க அரசு வெளியிட்டுள்ள அறிவுரையில் சென்னை மாநகராட்சி முனிசிபல் கவுன்சில் சட்டம் 1919 பிரிவு 85 மாநகராட்சி பணியமைப்பு வகுப்பு 4 (சி) ன்படி வணக்கத்திற்குரிய மேயர், ஆணையர் மற்றும் இரண்டு மன்ற உறுப்பினர்களை, கொண்ட குழுவின் மூலம் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யலாம் என்ற அறிவுரைகளை பின்பற்றி கல்வித் தகுதியின் அடிப்படையில் மூப்புப்பட்டியலின்படி கீழ்கண்ட முறைப்படி வகுப்பு 3 மற்றும் 4 ம் நிலை பணியிடங்களில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கல்வித்தகுதி பட்டப்படிப்பு படித்து பட்டம் பெற்றவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யவும்.
2. பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களின், வாரிசுதாரர்களின் குறைந்தபட்ச கல்வித்தகுதி (10ஆம் வகுப்பு (S.S.L.C) தேர்ச்சி) மற்றும் தட்டச்சருக்கான தொழில்நுட்ப கல்வித்தகுதி பெற்றவர்களுக்கு தட்டச்சர் பதவியில் பணிநியமனம் செய்யவும்.
3. பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களின், வாரிசுதாரர்களின் குறைந்தபட்ச கல்வித்தகுதி (10 ஆம் வகுப்பு (S.S.L.C) தேர்ச்சி) பெற்றவர்களுக்கு நேரக்காப்பாளர் / பதிவுறு எழுத்தர் மற்றும் இதர மூன்றாம் நிலை பதவியில் பணிநியமனம் செய்யவும்.
4. பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களின், வாரிசுதாரர்களின் கல்வித்தகுதி 10–ஆம் வகுப்பு தேர்ச்சி அடையாதவர்களுக்கு அலுவலக உதவியாளர் மற்றும் அதற்கு இணையான பதவியில் பணிநியமனம் செய்யவும்.
5. பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களின், வாரிசுதாரர்களின் கல்வித்தகுதி 10–ஆம் வகுப்பு இடைநிறுத்தம் மற்றும் அதற்கு கீழ் கல்வித்தகுதி உள்ளவர்களுக்கு தொழிலாளர் பணியமைப்பின் கீழ் உள்ள நான்காம் நிலை பதவியில் நியமனம் செய்யவும்.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

"கடந்த காலங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்தவர்களில் பட்டப்படிப்பு கல்வித்தகுதி பெற்று கீழ்நிலைப் பணிகளில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி வழங்கிய பின்பு வரிசை எண்.1 ஐ நடைமுறைப்படுத்தலாம் என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**திக.மே.து.ந.க.எண்.எ7/210/2007**
**ஆணையாளர் அவர்களின் 05.06.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.364/2007 பொருள் எண்.44

**பணியமைப்பு**

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் சுமார் 400 ஏக்கர் பரப்பிற்கும் மேல் பரந்து விரிந்து உள்ள இடமாகும். இங்கு குப்பையிலிருந்து மாற்று உபயோகத்திற்கு பயன்படும் பல்வேறு பொருட்களை சேகரித்து பிழைப்பு நடத்துபவர்கள் வளாகத்திற்குள் நுழைந்து குப்பையிலிருந்து உலோகம் மற்றும் கம்பி போன்றவற்றை சேகரிக்க அடிக்கடி குப்பையினை கொளுத்துகின்றனர். தற்போது கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தினை சுற்றி குடியிருப்புகள் பெருகி மக்கள் தொகை மிகுந்ததாக அப்பகுதி மாறிவிட்டதால் குப்பையினை கொளுத்துவதால் உருவாகும் புகை சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதுடன் அந்த பகுதியில் வசிப்பவர்களின் உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பதாகவும் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகம் அவர்களிடமிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு பாதுகாவலர்களை ஒப்பந்தமுறையில் தருவிக்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டன. பின்னர் அவர்கள் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 10 பாதுகாவலர்களை தருவித்து பணியமர்த்தி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்குமாறு கோரப்பட்டனர். ஆயினும் அவர்கள் அவ்வாறு பாதுகாவலர்களை தருவித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவில்லை. எனவே, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் முழு அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய ஒரு பணிமுறைக்கு 10 பாதுகாவலர்கள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று பணிமுறை என்ற விகிதத்தில் 30 பாதுகாவலர்களையும் மற்றும் ஒரு பணிமுறைக்கு ஒரு பாதுகாவல் மேற்பார்வையாளர் என்ற விகிதத்தில் ஒரு நாளைக்கு மூன்று பாதுகாவல் மேற்பார்வையாளரும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் தருவிக்க ஒப்பந்தபுள்ளிகள், 08.06.2007 என்று நாள் குறித்து அழைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, ஏற்கனவே அமலில் உள்ள அரசாணை எண்.49, பணியாளர் நிர்வாக சீரமைப்பு துறை, நாள்.14.05.2002ல் அலுவலக உதவியாளர்கள் நீங்கலாக பெருக்கும் பணியாளர்கள், கழிப்பறை சுத்திகரிப்பவர்கள், சுத்திகரிப்பாளர்கள் மற்றும் தோட்டப்பணியாளர்கள் ஆகிய பணிவகை னு–ல் வரும் பணியாளர்களை ஒப்பந்த முறையில் தருவிக்க அரசு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளது.

இந்த பாதுகாவலர்களும் பணிவகை னு–ல் வருபவர்களாதலால், ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தமுறையில் தருவிக்கலாம் என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வு பணியாளர்களை ஒப்பந்த முறையில் தருவிப்பது என்பதால் இதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறவேண்டியுள்ளது. மேலும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திலும் பிரச்சனையின் பரிமாணம் இதே போன்று உள்ளதால் அங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய ஒப்பந்த முறையில் பாதுகாவலர்கள் மற்றும் பாதுகாவல் மேற்பார்வையாளர்கள் தருவிக்க ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்க வேண்டியுள்ளது. இதற்கும் மன்றத்தின் அனுமதி தேவைப்படுகிறது.

எனவே,

1) கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ஒப்பந்த முறையில் ஒரு பணிமுறைக்கு 10 பாதுகாவலர்கள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று பணிமுறை என்ற விகிதத்திலும் ஒரு பணிமுறைக்கு ஒரு பாதுகாவல் மேற்பார்வையாளர் வீதம் ஒரு நாளைக்கு மூன்று பாதுகாவல் மேற்பார்வையாளரும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பாதுகாப்பு வழங்க ஒப்பந்தபுள்ளிகள், அழைத்தற்கு மன்றத்தின் பின்னேற்பும்
2) பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திலும் ஒப்பந்த முறையில் ஒரு பணிமுறைக்கு 10 பாதுகாவலர்கள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று பணிமுறை என்ற விகிதத்திலும் ஒரு பணிமுறைக்கு ஒரு பாதுகாவல் மேற்பார்வையாளர் வீதம் ஒரு நாளைக்கு மூன்று பாதுகாவல் மேற்பார்வையாளரும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பாதுகாப்பு வழங்க ஒப்பந்தபுள்ளிகள், அழைப்பதற்கு மன்றத்தின் ஒப்புதலும் நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
/உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>வ.து.ந.க.எண்.அ4/2926/89</u>

<u>ஆணையாளர் அவர்களின் 25.06.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.365/2007 பொருள் எண்.45

<u>பணியமைப்பு – தற்காலிக பணியிடங்கள் நீட்டிப்பு</u>

சென்னை மாநகராட்சி, வருவாய்த்துறையில் தற்காலிகமாக கீழ்கண்ட பதவிகள் மூன்று வெவ்வேறு கோப்புகளில் கீழே கலம் – 5ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் தோற்றுவிக்கப்பட்டு கலம்–6ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைப்படி 31.12.2005 வரை தொடர் நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது.

| வ. எண் (1) | பதவி (2) | ஊதிய விகிதம் (3) | எண்ணிக்கை (4) | முதன் முதலில் தோற்றுவிக் கப்பட்ட அரசாணை எண். தேதி (5) | கடைசியாக நீட்டிப்பு பெறப்பட்ட அரசாணை எண், தேதி (6) |
|---|---|---|---|---|---|
| | (1) <u>கோப்பு எண்.வ.து.ந.க.எண்.அ4/02926/89</u> | | | | |
| 1. | உதவி வருவாய் அலுவலர் | 8000–275–13500 | 3 | அரசாணை எண். ஜி.ஓ.எம்.எஸ்.எண்.2366, ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி துறை, நாள் 20.11.68 | அரசாணை (ப) எண்.445, ந.நி.(ம)கு.வ. (மாந3) துறை, நாள் 11.11.2005 |
| 2. | உதவி வருவாய் அலுவலர் | 8000–275–13500 | 2 | அரசாணை எண். 2313, ஊ.வ.(ம)உ.துறை, நாள் 31.10.72 | ” |
| 3. | உதவி வருவாய் அலுவலர் | 8000–275–13500 | 2 | அரசாணை எண்.216, ஊ.வ.(ம)உ.துறை, நாள் 7.2.77 | ” |
| 4. | மேலாளர் | 5300–150–8300 | 2 | அரசாணை எண்.91, ஊ.வ.(ம) உ.துறை, நாள் 18.1.73 | ” |
| 5. | இளநிலை உதவியாளர் | 3200–85–4900 | 2 | அரசாணை எண்.216, ஊ.வ.(ம)உ.துறை, நாள் 7.2.77 | ” |
| 6. | அலுவலக உதவியாளர் | 2550–55–2660–60–3200 | 2 | அரசாணை எண்.216, ஊ.வ.(ம) உ.துறை, நாள் 7.2.77 | ” |
| 7. | மேலாளர் | 5300–150–8300 | 2 | அரசாணை எண்.2478, ஊ.வ.(ம)உ.துறை நாள் 23.11.74 | ” |
| 8. | வரி மதிப்பீட்டாளர் | 5300–150–8300 | 6 | அரசாணை எண்.2478, ஊ.வ.(ம)உ.துறை நாள் 23.11.74 | ” |
| 9. | உதவியாளர் | 4000–100–6000 | 1 | அரசாணை எண்.2478, ஊ.வ.(ம)உ.துறை நாள் 23.11.74 | ” |
| 10. | உதவியாளர் | 4000–100–6000 | 7 | அரசாணை எண்.2478, ஊ.வ.(ம)உ.துறை நாள் 23.11.74 | அரசாணை (ப) எண்.445, ந.நி.(ம)கு.வ. (மாந3) துறை, நாள் 11.11.2005 |

வ.து.ந.க.எண்.அ4/2926/89

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | தட்டச்சர் | 3200–85–4900 | 1 | அரசாணை எண்.412, ஊ.வ.(ம)உ.துறை நாள் 13.3.1979 | ” |
| | (2) கோப்பு எண்.வ.து.ந.க.எண்.அ4/43728/88 | | | | |
| 12. | கூடுதல் வருவாய் அலுவலர் | 12000–375–16500 | 1 | அரசாணை எண்.1870, ஊ.வ.(ம) உ.துறை, நாள் 7.12.82 | ” |
| 13. | உதவி வருவாய் அலுவலர் | 8000–275–13500 | 3 | அரசாணை எண்.853, ஊ.வ.(ம)உ.துறை, நாள் 15.6.83 | ” |
| 14. | உதவி வருவாய் அலுவலர் | 8000–275–13500 | 2 | அரசாணை எண்.519, ஊ.வ.(ம) உ.துறை, நாள் 30.3.84 | ” |
| 15. | வரி மதிப்பீட்டாளர் | 5300–150–8300 | 15 | அரசாணை எண்.853, ஊ.வ.(ம)உ.துறை, நாள் 15.6.83 | ” |
| 16. | வரி மதிப்பீட்டாளர் | 5300–150–8300 | 6 | அரசாணை எண்.519, ஊ.வ.(ம) உ.துறை, நாள் 30.3.84 | ” |
| 17. | உரிமம் ஆய்வாளர் | 5000–150–8000 | 4 | அரசாணை எண்.853, ஊ.வ.(ம)உ.துறை, நாள் 15.6.83 | |
| 18. | உரிமம் ஆய்வாளர் | 5000–150–8000 | 18 | அரசாணை எண்.519, ஊ.வ.(ம) உ.துறை, நாள் 30.3.84 | ” |
| | (3) கோப்பு எண். பொ.து.ந.க.எண்.இ3/30984/93 | | | | |
| 19. | கூடுதல் வருவாய் அலுவலர் | 12000–375–16500 | 1 | அரசாணை எண்.31, (30 வருடங்கள்) ந.நி.ம.கு.வ. துறை, நாள் 18.3.96 | ” |
| 20. | உதவி வருவாய் அலுவலர் | 8000–275–13500 | 10 | அரசாணை எண்.31, (30 வருடங்கள்) ந.நி.ம.கு.வ. துறை, நாள் 18.3.96 | ” |
| 21. | வரி மதிப்பீட்டாளர் | 5300–150–8300 | 7 | அரசாணை எண்.31, (30 வருடங்கள்) ந.நி.ம.கு.வ. துறை, நாள் 18.3.96 | ” |
| 22. | வரி தண்டலர் | 3200–85–4900 | 10 | அரசாணை எண்.31, (30 வருடங்கள்) ந.நி.ம.கு.வ. துறை, நாள் 18.3.96 | ” |
| 23. | சுருக்கெழுத்தர் | 4000–100–6000 | 1 | ” | ” |

---------

108

----------

இது குறித்து மேலும் சமர்ப்பிப்பது, இப்பதவிகளை 31.12.2006 வரை நீட்டிக்க மன்றத்தின் ஒப்புதல் பெற்று 30.06.2006 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அரசு தனது 03.08.2006 மற்றும் 30.03.2007 நாளிட்ட கடிதங்களில் சில விவரங்களை கோரியது. அரசு கோரிய விவரங்கள் இத்துறையின் 21.05.2007 நாளிட்ட கடிதத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட கால அவகாசம் 31.12.2006ல் முடிவுற்றுள்ளதால் இப்பதவிகளை 31.12.2007 வரை தக்க வைத்துக்கொள்வது அவசியம் ஆகிறது. மேலும் இதற்கான கருத்துருக்கள் மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஏனெனில் சென்னை மாநகரில் புதிய வீடுகள் ஆண்டுக்கு ஆண்டு கூடி வருவதாலும் புதிய தொகுப்பு கட்டிடங்களும், காலனிகளும் உருவாகி உள்ளதாலும் சுமார் 4.35 இலட்சம் வீடுகளிலிருந்து 5.85 இலட்சம் வீடுகளாக தற்போது சென்னை நகரில் அதிகரித்துள்ளது.

மேலும், நடப்பு சொத்துவரி பொது சீராய்வு தொடங்குவதற்கு எந்த நேரத்திலும் அரசிடமிருந்து ஆணை பெறக்கூடிய நிலை உள்ளது. ஆட்சேபனை மனுக்கள் மீது இறுதி ஆணைகள் பிறப்பிக்கவும் அடுத்த சொத்துவரி பொது சீராய்வின் போது சொத்தின் உரிமையாளரிடமிருந்து சொத்து விவர அறிக்கை பெற்று அதன்படி சென்னையிலுள்ள அனைத்து கட்டிடங்களையும் பொது சீராய்வு செய்து அதற்கான சொத்துவரி அட்டை வழங்கப்பட வேண்டும். மேலும் தொழில்வரி, உரிமம் கட்டணம், நிறுவன வரி, மர வரி, சமுதாயக்கூட கட்டணம் வாகனங்கள் நிறுத்தம் கட்டணம், மார்க்கெட் வரி, குத்தகை கட்டணம், ஆடு, மாடு இறைச்சிக்கூடம், சலவைக் கூடம், கல் கட்டணம், இதர வருவாய் இனங்கள் மீது தனிக் கவனம் செலுத்தி சென்னை மாநகராட்சியின் வருவாயினை பெருக்க வேண்டிய அவசியமுள்ளது. சென்னை மாநகராட்சியில் வருவாய் இனங்களை பெருக்க மேற்கண்ட பதவிகளை நிரந்தரமாக தக்க வைத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. மேலும், அரசாணை எண்.1368, நிதித்துறை, நாள் 4.11.63 மற்றும் அரசாணை எண்.397 நிதி (சம்பளம்) துறை நாள்.04.06.1991 தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட பதவிகள் இடை நிறுத்தமின்றி 3 ஆண்டுகளுக்கு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டால் பணித்தன்மை காரணமாக அவைகளை நிதித் துறையின் ஒப்புதலுடன் நிரந்தரமாக தக்க வைத்துக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக பணியிடங்களை நிரந்தரம் செய்வதற்காக அப்பணியிடத்தின் அவசியத்தை ஆய்வு செய்ய ஏதுவாக அமைக்கப்பட்ட தொழில் நுட்பக்குழு 2004ம் ஆண்டில் கூடிய முதல் கூட்டத்தில் ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் உள்ள நிரந்தர பணியிடங்களின் பணியின் அவசியத்தையும் ஆய்வு செய்து பின்னர் தற்காலிக பணியிடங்களை நிரந்தரம் செய்ய முடிவு எடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் அனைத்து துறை மற்றும் மண்டலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு அந்தந்த துறைத்தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் தங்கள் துறை மற்றும் மண்டலங்களில் ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு முழுமையான விவரங்கள் பெறப்படாத காரணத்தால் தொழில் நுட்பக்குழு கூட்டத்தினை கூட்ட இயலவில்லை இந்த விவரங்கள் விரைவில் பெறப்பட்டு தொழில் நுட்ப குழு கூட்டம் நடத்தி சீராய்வு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் வரிசை எண்.1 முதல் 23 வரை குறிப்பிட்டுள்ள 108 தற்காலிக பணியிடங்களை அரசின் பின்னேற்பை எதிர்நோக்கி 1.1.2007 முதல் நீட்டித்தமைக்கு பின்னேற்பும் மற்றும் 31.12.2007 வரை இப்பதவிகளை நீட்டிக்க, அரசாணை பெறவும் மன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழுவின் மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

ம.அ.5.வ.து.ந.க.எண்.ஆர்2/341/2007
ஆணையரின் 21.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.366/2007 பொருள் எண்.46

பணியமைப்பு – தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்

திரு.சி.கோட்டீஸ்வரராவ், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, மண்டலம்–5 அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.01.2006ல் பணியிலிருந்து ஒய்வு பெற்றார். இவர் 21.05.1970ல் சென்னை மாநகராட்சியில் உதவியாளராக பணியில் சேர்ந்தார். உதவியாளர் பதவியில் 21.05.1970 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு 23.05.1972 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டது. இவர் 15.11.79ல் உரிமம் ஆய்வாளராகவும், 14.05.1984ல் வரி மதிப்பீட்டாளராகவும், 19.12.1997ல் உதவி வருவாய் அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று 31.01.2006 பிற்பகல் முதல் ஓய்வு பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பாணைக்குட்பட்டு ஆணையர் அவர்களால் 31.01.2006 தேதியிட்ட ஆணை மூலம் ஒய்வு பெற அனுமதி அளித்து உத்தரவு வழங்கப்பட்டது. பின்னர் 04.09.2006 நாளிட்ட தீர்மானம் எண்.321/2006 வாயிலாக நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறப்பட்டது.

அனைத்து மண்டலங்களிலிருந்தும் அன்னார் மீது தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது. மேலும், விழிப்பு அலுவலர் அவர்களால் தனியர் மீது யாதொரு விசாரணையும் நிலுவையில் இல்லையென அறிக்கை அளித்துள்ளார். மேலும், துறை பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை எதும் நிலுவையில் இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

தனியரின் தாய் மொழி தெலுங்கு, இவர் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற மே 1996 மற்றும் மே 2005 ஆகிய இரண்டு அமர்வுகளில் கலந்து கொண்டும் அத்தேர்வில் தேர்ச்சிபெற இயலவில்லை என்று தனியர் 07.12.2005 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து அதற்கான நுழைவுச்சீட்டு நகல்களை அளித்துள்ளார். இவரது உதவி வருவாய் அலுவலர் பணி நியமனம் 10.03.1998 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.(ப) 87ல் அரசு உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. பொ.து.ந.க.எண்.ஈ2/8971.87ல் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பணிவிதிகள் பிரிவு 10(2)ன்படி பதவி உயர்வு வழங்கப்பட்டதிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் தமிழ் மொழி தேர்ச்சி பெற வேண்டும் என்றும், அவ்வாறு தேர்ச்சி பெறாவிடில் நான்காவது ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படமாட்டாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும், தனியர் தமிழ் மொழி தேர்ச்சி பெறாததால், ஆய்வாளர் உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை, மண்டலம்–5 அவர்களின் 17.11.05 தேதியிட்ட கடிதத்தின்படி உதவி வருவாய் அலுவலர் பதவியில் 3 ஆண்டுகளுக்கு பிறகு வழங்கப்பட்ட ஊதிய உயர்வுகளை அதாவது 01.10.2001 முதல் வழங்கிய ஊதிய உயர்வுகளை ரத்து செய்து ஊதியம் வரண்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தனியருக்கு வழங்கப்பட்டுள்ள மிகை ஊதியம் மற்றும் தனியர் சார்நிலை அலுவலருக்கான கணக்குத்தேர்வினை (பாகம்–1) உதவியாளர் பதவி வகித்தபோது தேர்ச்சி பெற்றதற்காக அவருக்கு வழங்கப்பட்ட ஒரு முன் ஊதிய உயர்வு ரத்து செய்து அதனால் வழங்கப்பட்ட மிகை ஊதியம் ஆகியவை மொத்தம் ரூ.63056/– என கணக்கிடப்பட்டு அத்தொகையினை தனியருக்கு வழங்க இருக்கும் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றும், மேலும் இவரை தனிநபர் பொறுப்பாக்கும் தணிக்கை தடை எதேனும் பின்னர் தெரியவரின் அதன் நிமித்தம் ஏற்படும் இதுப்பினையும் அன்னாரின் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றும், மற்றும் தனியர் மீது நீண்டகால முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லையென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அன்னாரின் தாய்மொழி தெலுங்கு என்பதால், அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்விலிருந்து தேர்ச்சி பெற விலக்களிக்க அரசாணை பெற்றால் தான் ஓய்வுகாலப்பயன்கள் அளிக்க இயலும் என்பதால், அரசாணை பெறுவது அவசியமாகின்றது.

எனவே, திரு.சி.கோட்டீஸ்வரரால், ஒய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தமிழ்மொழித்தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**சு.து.ந.க.எண். சி1/1853/2007**

**ஆணையர் அவர்களின் 13.7.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.367/2007 பொருள் எண்:47

**வெளிநாடு செல்ல தடையில்லா சான்றிதழ் / பின்னேற்பு அனுமதி**

டாக்டர்.எ.சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர் , மண்டலம்–7 அவர்களின் 9.4.2007 நாளிட்ட அவரது கடிதத்தில் மலேசியா நாட்டில் வசிக்கும் அவரது சகோதரர் குடும்ப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மலேசியா செல்ல அனுமதி கோரியிருந்தார்.

டாக்டர்.எ.சரஸ்வதி அவர்கள் 19.4.1995 ல் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டார் அவரது பணிநியமனம் தொடர்பாக அரசின் உறுதியாக்கபெறப்பட்டு மருத்துவ அலுவலர் பதவியில் 19.4.1995 ல் பணி வரன் முறைப்படுத்தப்பட்டு அவருக்கு 21.9.1997ல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். டாக்டர்.எ.சரஸ்வதி,மருத்துவ அலுவலர் அவர்கள் 23.6.2006 முதல் உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு தனியர் உதவி சுகாதார அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டதற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு அவருக்கு 23.6.2006 முதல் பணி வரன்முறை படுத்தப்பட்டது.

காவல் துறை கண்காணிப்பாளர் மத்திய பாதுகாப்பு பிரிவு மத்திய புலணாய்வு துறை அவர்களின் 27.4.2007 தேதியிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

விழிப்பு அலுவலர் அவர்களின் 03.5.2007 தேதியிட்ட கடிதத்தில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலர் பதவியானது வகுப்பு–2ன்கீழ் வகைபடுத்தப்பட்டுள்ளதால், தனியர் வெளிநாடு (மலேசியா) பயணம் மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் போதிய கால அவகாசம் இன்மையால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/1853/07 நாள்.10.05.2007ன்படி தனியர் வெளிநாடு (மலேசியா) பயணம் மேற்கொள்ளவும் தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டது.

1. வெளிநாடு (மலேசியா) செல்ல அனுமதி கோரும் இவர் வெளிநாட்டில் தங்கும் போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது படிக்கவோ மற்றும் பயிற்சியிலோ ஈடுபடக்கூடாது,
2. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்மந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது,
3. வெளிநாடு செல்லும் பயண செலவு உட்பட எவ்வித தொகையையும் சென்னை மாநகராட்சி ஏற்காது,
4. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது அவர் சென்னை மாநகராட்சி பணியினை துறக்க விண்ணப்பிக்ககூடாது மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டு அக்கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, மேலும் பெளிநாட்டில் இருக்கும்போது விடுப்பு நீட்டிப்பு கோரக்கூடாது
5. வழங்கப்படும் இவ்வாணையை பயன்படுத்தி முன் அனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணம் மேற்கொள்ள பயன்படுத்தக்கூடாது,
6. வழங்கப்படும் இவ்வாணை மலேசியா செல்ல மட்டுமே செல்லத்ததக்கது.
7. இத்தடையின்மை சான்று ஆறுமாத காலத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது.

ஆகவே, டாக்டர்.எ.சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர் , மண்டலம்–7 என்பவர் வெளிநாடு(மலேசியா) பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்கிய 10.5.2007 தேதியிட்ட ஆணையரின் ஆணைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

மி.து.ந.க.எண்.அ1/2987/07
ஆணையாளரின் 23.7.2007 நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.368/2007 பொருள் எண் :48

கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பு

சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையில் கோட்ட மின் பொறியாளராக பணிபுரியும் திரு.எஸ். நாராயண ராஜா அவர்கள், அவரது தாயார் மலேசியாவில் வசிக்கும் அன்னாரின் சகோதரியின் பராமரிப்பில் இருப்பதாகவும் அவரது உடல் நிலை சரியல்லாத காரணத்தால் அன்னார் மலேசியா சென்று அவரது தாயாரை காணும் பொருட்டு கடவுச்சீட்டு (Passport) பெறுவதற்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்க கோரி விண்ணப்பித்தார்.

எனவே, திரு.எஸ். நாராயண ராஜா, கோட்ட மின் பொறியாளர் அவர்கள் மலேசியாவில் உடல் நலம் சரியில்லாமல் இருக்கும் அவரது தாயரை காணச் செல்வதற்கு ஏதுவாக தற்போது நடைமுறையிலுள்ள அயல்நாடு செல்வதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்படுத்தி கடவுச் சீட்டு பெறுவதற்கு தடையின்மை சான்றிதழ் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை மி.து.ந.க.எண்.அ1/2197/06 நாள் 24.7.2006ன் மூலம் வழங்கப்பட்டது.

தனியர் பாஸ்போர்ட் அலுவலகத்தில் விண்ணப்பித்து பாஸ்போர்ட் பெற்றுள்ளார். பாஸ்போர்ட் எண் G0656538 ஆகும். இருப்பினும் அலுவலகப் பணி நிமித்தம் காரணமாக இவர் வெளிநாடு பயணம் மேற்கொள்ளவில்லை.

மேற்படி அலுவலருக்கு கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மை சான்று வழங்கப்பட்ட நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி நியமனக்குழு மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**சு.து.ந.க.எண்.சி1/ 5859/2001**
**ஆணையர் அவர்களின் 20.7.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.369/2007 பொருள் எண்.49

அரசாணை (பத்தாண்டு) எண் 357 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மா.ந.3 துறை , நாள்: 3.9.2004 ன் படி சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையில் 1998 ம் ஆண்டு முதல் 10 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக இருந்ததால் அப்பணியிடங்களை ஒப்பந்த முறையில் தொகுப்பூதிய அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/– க்கு மிகாமல் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் ஓராண்டிற்கு பணி நியமனம் செய்துகொள்ள அரசு ஆணையிட்டது.

மேற்படி அரசாணையினை தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் இன சுழற்சி மற்றும் மூப்பு நிலை கொண்ட நபர் பட்டியல் கோரப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்டு ஒரே ஒரு நபரான டாக்டர். எஸ். பாஸ்கர் என்பவர் மட்டும் பணியில் சேர விருப்பம் தெரிவித்ததை தொடர்ந்து சு.து.ந.க.எண்.சி1/5859/01 தேதி 01.06.2005ன்படி அவர் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டார். தனியர் 3.6.2005 முதல் சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவ மனையில் மருத்துவ அலுவலராக பணிபுரிய பணிக்கப்பட்டார். டாக்டர்.எஸ்.பாஸ்கர் என்பவர் தொகுப்பூதிய அடிப்படையில் அவர் பணியில் சேர்ந்த 3.6.2005 முதல் முறையாக தொடர்ந்து பணிநியமனம் ஓராணடிற்கு மட்டுமே என்று ஆணை இடப்பட்டுள்ளதால் டாக்டர்.எஸ். பாஸ்கர் எனபவரின் பணி தேவைப்பட்டதால் அவரது பணியினை மேலும் ஓராண்டிற்கு 3.6.2006 முதல் நீட்டிப்பதற்கு அரசின் பின்னேற்பு ஆணை கோரி அரசிற்கு 30.5.2006 நாளிட்ட செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. அரசு கடித எண் 14679/மா.ந.3/2006–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 15.6.2006 ல் கூடுதல் விவரங்கள் கோரி கடிதம் அனுப்பியுள்ளது. அரசு கோரியுள்ள விவரங்களை அனுப்ப மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மன்றத் தீர்மான எண் 71/2007 நாள்: 25.4.2007 ல் உரிய பதிலை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தொற்றுநோய் மருத்துவமனையில் 7 அலுவலர்கள் பணிபுரிய வேண்டிய இடத்தில் 2 மருத்துவ அலுவலர்கள் மட்டுமே பணிபுரிந்து வருவதால் நோயாளிகளுக்கு சீரிய முறையில் சிகிச்சை அளிக்க சிரமம் ஏற்படுவதால் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் டாக்டர்.எஸ். பாஸ்கர் எனபவரது பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதால் அவரது பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அவரது பணியினை தொகுப்பூதிய அடிப்படையில் மேலும் ஓராண்டிற்கு 3.6.07 முதல் நீட்டிப்பு செய்திடவும் அரசாணை பெற அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத் தீர்மான எண் 236/2007 நாள் 28.5.2007ன்படி வாயிலாக மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுஅரசிற்கு 2.6.2007 தேதியிட்ட செய்ற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசாணையை எதிர்பார்க்கப்படுகிறது.

28.5.2007 நாளிட்ட மன்றத் தீர்மானத்தினை தொடர்ந்து அரசாணை எதிர்நோக்கி டாக்டர்.எஸ்.பாஸ்கர் தற்காலிக மருத்துவ அலுவலர் என்பவரின் பணிக்காலத்தை மேலும் ஓராண்டிற்கு 3.6.2007 முதல் நீட்டித்து செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/5859/2001 02.06.2007 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது.

தற்போது சுகாதார துறையில் 31 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளது. இக்காலிப்பணியிடங்களை அரசாணை (ப) எண் 57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.2.2007 ன் படி 2006 – 2007 ம்ஆண்டில் 50 விழுக்காடு பணியிடங்களை நிரப்பி கொள்ள அரசாணை வழங்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையை தொடர்ந்து 50 விழுக்காடு அதாவது 15 மருத்துவ அலுவலர் காலிப் பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து இனசுழற்சி / மூப்பு நிலை கொண்ட நபர் பட்டியல் பெறப்பட்டு, 6 நபர்கள் மட்டுமே 4.6.2007 ல் சான்றிதழ் சரிபார்ப்புக்கு ஆஜரானார்கள்.

நிர்வாக நலன் கருதி அவசர அவசியம் மற்றும் பொது மக்களுக்கு அன்றாட சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான 6 நபர்களை உடனடியாக பணிநியமனம் செய்து செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 48 மருத்துவ அலுவலர்களை கால முறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய சென்னை மாநகராட்சி நியமனக்குழுவின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு நியமனம் செய்துகொள்ள ஆணைகள் வெளியிடலாம் என்று அரசு கடித எண் 38929/மா.ந.3/2005 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 5.4.2007 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சு.து.ந.க.எண்.சி1/ 5859/2001</u>**

அதன் அடிப்படையில் சுகாதாரத்துறையில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் மாதம் ரூ.10,000/– க்கு மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர்.எஸ். பாஸ்கர் என்பவரை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000– 275–13500 மற்றும் இதர படிகளுடன் காலியாக உள்ள ஒரு மருத்துவ அலுவலர் பணியிடத்தில் தற்காலிகமாக பணிநியமனம் செய்யவும், இது குறித்து அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி அரசாணை பெறவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**<u>சு.து.ந.க.எண்.சி1/7579/2007</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 13.07.2007 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.370/2007 பொருள் எண்.50

**<u>பணியமைப்பு</u>**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை கால்நடை பிரிவில் இரண்டு உதவி கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

உதவி கால்நடை மருத்துவர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவி சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 விதி 85 (3பி)ன் படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன் படி உதவி கால்நடை மருத்துவர் பதவியினை நேரிடை நியமனம் மூலம் நிரப்பப்படவேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ. 6,500 – 250 11,100 கல்வித் தகுதி: –B.V.Sc degree or any equivalent Degree of University or Institution or A post Graduate Degree or Diploma in Animal Husbandry or Veterinary Science or any equivalent Degree or Diploma of any University or Institution. 35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

13.02.2007 நாளிட்ட ந.க.ம.கு.வ.துறை அரசாணை எண்.57ன் படி காலியாக உள்ள இரண்டு கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களில் 2006–2007ம் ஆண்டில் ஒரு காலிப் பணியிடத்தை நிரப்பிட தகுதி உள்ள நபர் பட்டியலை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:–

| Sl. No. | Registration No. | Name and Address | Date of Birth & Community & Age | Qualification | Communiual Rotatation |
|---|---|---|---|---|---|
| 1. | D.G.E. (SG/SGQ) 1991 M 00926 S.F. 12/02/1991 | C.R. Sollin Selvan S/o. C.V. Ramasamy North Cheyur, Cheyur Post & Taluk Chengai M.G.R. Dist., 603 302 | 03/06/1967 Scheduled Cast 40 Years | Gr. Veterinary Science (Veterinary Sciences) | General Turn Priority |

மேற்படி நபர் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 02.07.2007 அன்று ஆஜராகி சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டது.

பொது விதி 12 (d)ன் படியும் அரசாணை எண்.98 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்.17.7.2006ல் அரசு பணியாளர்களுக்கான வயது வரம்பினை கடந்தவர்களுக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு வயது தளர்வாணை வழங்கியுள்ளதால் மேற்படி நபருக்கு வயது தளர்வாணை பெற தேவையில்லை.

சுகாதாரத்துறையில் காலியாக உள்ள இரண்டு உதவி கால்நடை மருத்துவர் பணியிடத்தை காலமுறை ஊதிய விகிதம் ரூ.6500–250–11,100/– என்ற ஊதிய அடிப்படையில் இதர படிகளுடன் குறிப்பிட்டுள்ள கல்வித்தகுதி பெற்று சான்றிதழ் சரிபார்பிற்கு ஆஜராகி உள்ள திரு.சொல்லின் செல்வன் என்பவரை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85(3பி)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மன்றத்தின் அனுமதி பெற்று அவசர அவசியத்தை கருதி பணிநியமனம் செய்யலாம் என்று கருதப்படுகிறது.

**சு.து.ந.க.எண்.சி1/7579/2007**

எனவே, அரசாணை எண்.65, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (N2) துறை நாள்.30.03.2007ன்படி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 1:1 என்ற விகிதாசாரத்தில் பெறப்பட்ட பட்டியலின் படி சுகாதாரத்துறையில் காலியாக உள்ள உதவி கால்நடை மருத்துவர் பணியிடத்தில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 02.07.2007 அன்று ஆஜரான திரு. சொல்லின் செல்வன் என்பவரை அவசரம் மற்றும் அவசியத்தை கருதி உதவி கால்நடை மருத்துவராக ரூ. 6,500 – 250 – 11,100/– என்ற கால முறை ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணி நியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்.

வ.து.ந.க.எண்.அ1/ 4030/96.

ஆணையர் அவர்களின் 21.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.371/2007 பொருள் எண்:51

பணியமைப்பு

மன்றத் தீர்மான எண்.193/06 நாள்.30.05.2006ல் ஒப்புதலளிக்கப்பட்ட உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலிலிருந்து பின்வரும் வரி மதிப்பீட்டாளர்கள் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 என்ற ஊதிய விகிதத்தில் உதவி வருவாய் அலுவலர்களாக 16.06.2006 நாளிட்ட ஆணையரின் செயல் முறை ஆணைப்படி பதவி உயர்வு வழங்கப்பட்டது.

| வ.எண் | வரிமதிப்பீட்டாளர்களின் பெயர்கள் | உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.தியாகராஜன் | 21.06.2006 மு.ப. |
| 2 | திரு.பி.எம்.தீனதயாளன் | 21.06.2006 மு.ப. |
| 3 | திரு.ஆர்.விமலன் | 20.06.2006 மு.ப. |
| 4 | திரு.எம்.பி. நந்தகுமார் | 21.06.2006 மு.ப. |
| 5 | திரு.எஸ்.தன்ராஜ் | 21.06.2006 மு.ப. |
| 6 | திரு.என்.கனிகண்ணன் | 21.06.2006 மு.ப. |

அரசாணை எண்.(ப) எண்237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந–3) நாள்.01.06.2007ல் மேற்படி பதவி உயர்விற்கு அரசு உறுதியாக்கம் வழங்கி உள்ளது. அரசாணையை தொடர்ந்து இவர்களது பணிகள் உதவி வருவாய் அலுவலர் பதவியில் பொறுப்பேற்ற நாள் முதல் வரன் முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, மேற்படி அலுவலர்கள் உதவி வருவாய் அலுவலராக அவரவர் பெயருக்கெதிரே பொறுப்பேற்ற நாள் முதல் வரன் முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**மி.து.ந.க.எண்.மே1/அ1/8266/96.**

**ஆணையர் அவர்களின் 07.06.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.372/2007 பொருள் எண்:52

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சியில் பல்வேறு நகர வசதி அலுவல்களை பொது நலன் கருதி துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள தொடர்பு வசதிக்காக கம்பியில்லாத் தொடர் அமைப்பு ஏற்படுத்தி அரசாணை எண்.351, நாள் 14.03.1986ன்படி அனுமதி பெறப்பட்டு இயங்கி வருகின்றது. இதன் தொடர்ச்சியாக 1994 ஆம் ஆண்டு மன்றத் தீர்மான எண்.5115/93,

நாள். 06.01.1994ன் படி 2 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 6 தொழில் நுட்ப உதவியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர். பின்பு இவர்கள் காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் அரசு ஒப்புதலுடன் பணியமர்வு செய்யப்பட்டனர்.

இப்பதவிகள் அனைத்தும் நிரந்தரம் செய்ய பொது விதிகள் தயாரிக்கப்பட்டு அரசிதழில் (முயணணநவவந) 29 நவம்பர் 2000 ல் வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக வரைவு துணை விதியில் தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வழிவகை செய்து தக்க திருத்தங்கங்கள் அனுப்புமாறு அரசு கோரியதைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சி பொறியியல் சார்நிலை அலுவலர்களுக்கான வரைவு பணியமர்வு விதி 1981 ன் மீது தக்க திருத்தங்கள் செயல்படுத்த துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களின் பணி ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 1 அம் தேதி முதல் பணி நீட்டிப்பு செய்ய அரசின் அனுமதி பெறப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் அரசாணை ( வாலாயம் ) 142, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ( மநா 3 ) துறை நாள். 30.06.2006ல் சென்னை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று சென்னை மாநகராட்சி கம்பியில்லாத் தொடர் அமைப்பு தோற்றுவித்த தற்காலிக பணியிடங்களை 2 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 6 தொழில் நுட்ப உதவியாளர்கள் பணியிடங்களை 01.07.2005 முதல் மேலும் ஒராண்டு நீட்டிக்க சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டது. இப்பணியாளர்களின் பணியினை நீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியத்தின் அடிப்படையில் 01.07.2006 முதல் மேலும் ஒராண்டு நீட்டிப்பு செய்ய அனுமதி கோரி குறிப்பு 11.09.2006 நாளன்று அரசுக்கு அனுப்பப்பட்டது. இதற்கு அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கடித எண்.20719 /

மாந 3  2005 –1 நாள். 05.07.2005ல் சென்னை மாநகராட்சியில் பணியாளர் தொகுதி தொடர்பான சீராய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும், தவிர சென்னை மாநகராட்சியில் தற்காலிக பணியிடங்கள் தொடரப்படவேண்டிய தேவை குறித்து அமைக்கப்பட்டுள்ள குழு மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் தற்காலிக பணியிடங்கள் தொடர்வது தீர்மானிக்கப்படவேண்டும் என்றும் ஆய்வுக் குழுவின் மேற்கொண்ட ஆய்வு குறித்து விவரங்கள் அனுப்பி வைக்க கோரப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் பல்வேறு துறைகளில் தற்காலிகமாக தோற்றுவைக்கப்பட்ட 1739 தற்காலிக பதவிகளை அரசு தனது அரசாணை ( பத்தாண்டு ) எண்.54, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.02.2003ன் படி நீட்டிப்பு செய்த பதவிகளை நிரந்தரம் செய்வது குறித்து அரசினால் தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு கூட்டம் தலைமையில் 16.08.2004 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (பணிகள்) தலைமையில் 16.08.2004 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிரந்தரப் பதவிகள் பட்டியலுடன் தற்காலிக பதவிகளின் பட்டியலும் மற்றும் இது குறித்து துறை தலைவர்களின் பரிந்துரை அகியவைகளை ஒப்பிட்டுப் பார்த்து முடிவெடுக்க இயலும் என்பதால் முழு விவரம் பெற்று அடுத்த தொழில் நுட்பக் கூட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1739 தற்காலிக பணியிடங்களுக்கு 2003 வரை பணி நீட்டிப்பு அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கம்பியில்லா தொடர்பு அமைப்பில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 30.06.2005 வரை பணி நீட்டிப்பிற்கான அரசு அனுமதி அளித்து ஆணை வழங்கியுள்ளது. ஆகையால் 26.01.2005 அன்று அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் படி, கம்பியில்லாத் தொடர்பு அமைப்பு பிரிவின் பணி இடங்களை 1739 பணியிடங்களுடன் சேர்க்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சென்னை மாநகராட்சி, மின்சாரத் துறையில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட கம்பியில்லாத் தொடர்பு அமைப்பிற்கான பணியமர்வில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் மேற்படி சீராய்வில் சேர்க்கப்படவில்லை. இதற்கான நியமனமுறை மற்றும் கல்வித் தகுதிக்கான விதிகள் அரசிதழில் (Gazzette) வெளியிடப்பட்டது. விதிகளை பரிசீலித்து இப்பிரிவில் பணியமர்வு

செய்யப்பட்டவர்களுக்கான பதவி உயர்வு அளிக்க வழிவகை செய்யுமாறு பணிக்கப்பட்டது. இதன்மீது சென்னை மாநகராட்சி பொறியியல் சார்நிலை பணியாளர் பிரிவிற்கான வரைவு விதியில் திருத்தங்கள் மேற்கொள்ள துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதற்கான மன்ற ஒப்புதல் மன்ற தீர்மான எண்: 390, நாள். 31.08.2006 மூலம் பெறப்பட்டது. அரசின் ஒப்பளிப்பு கோரப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்நிலையில் இப்பதவிகளை தொடர்வது மிகவும் அவசியமாகிறது. ஏற்கனவே 31.08.2006 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண்.378/ 31.08.2006 படி கம்பியில்லாத் தொடர்பு அமைப்புப் பிரிவில் பணிபுரியும் தற்காலிக 2 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 6 தொழில் நுட்ப உதவியாளர்கள் பணியிடங்களை தொடர 01.07.2006 முதல் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்க அரசின் ஆணை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு துறை குறிப்பு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனைத் தொடர்ந்து மேலும் 01.07.2007 முதல் இவர்களின் பணி நீட்டிப்பு அவசியமாகிறது.

எனவே மின்சாரத் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் கம்பியில்லாத் தொடர் அமைப்பில் பணியமர்வு செய்யப்பட்டுள்ள 2 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 6 தொழில் நுட்ப உதவியாளர்களின் பணியினை 01.07.2007 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் மற்றும் செயற்குறிப்பினை அரசுக்கு சமர்ப்பிக்கவும், நியமனக்குழு மூலம் மாமன்றத்திற்கு ஒப்புதல் வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

க.து.ந.க.எண்.இ10/6772/2006
ஆணையாளர் அவர்களின் 07 .06.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.373/2007 பொருள் எண்.53

பணியமைப்பு

சென்னை மாநதகராட்சி பள்ளிகளில் ஏழை எளிய மக்களுக்கென 97–98 ஆம் கல்வி ஆண்டில் மண்டலத்திற்கு ஒன்று வீதம் 10 மழலையர் பள்ளிகள் தொடங்கப்பட்டது. இதற்கு ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியை, ஒரு ஆயா மற்றும் ஒரு அலுவலக உதவியாளர், வீதம் பணிநியமனம் செய்யப்பட்டது. இம் மழலையர் பள்ளிகளுக்கு பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்ததால், 1998–99 ஆம் கல்வி ஆண்டில் மேலும் 2 பள்ளிகள் வீதம் 20 மழலையர் பள்ளிகள் கூடுதலாக தொடங்கப்பட்டது. ஆக மொத்தம் 30 மழலையர் பள்ளிகளில் 102 வகுப்புகளில் 102 ஆசிரியைகள். 102 ஆயாக்கள் மற்றும் 30 அலுவலக உதவியாளர்கள், பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு மாமன்ற தீர்மானம் பெற்று தொகுப்பூதியமாக ஒரு மாதத்திற்கு ஒரு ஆசிரியருக்கு ரூ.2000/– ம் ஆயாவுக்கு ரூ 900/–ம் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு ரூ 1,000/– ம் வழங்கப்பட்டு இச்செலவு நிதி ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு தொடக்கப்பள்ளிகளில் செலவிடப்பட்டு வருகிறது.

தற்பொழுது மீண்டும் பெருகிவரும் பொருளாதார உயர்வினை கருத்தில் கொண்டு இவர்களின் கோரிக்கை ஏற்று தொகுப்பூதியத்தை ஆசிரியருக்கு ரூ.2000/– லிருந்து ரூ.2500/– ஆகவும், ஆயாவுக்கு ரூ.900/– லிருந்து ரூ.1,100/– ஆகவும் அலுவலக உதவியாளர்களுக்கு ரூ.1,000/– லிருந்து 1,300/– ஆகவும் உயர்த்தி வழங்கவும் தொகுப்பூதியம் உயர்த்தி வழங்க கூடுதல் செலவீனத்தை ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் இயங்கிவரும் மழலையர் வகுப்புகளில் கடந்த 10 ஆண்டுகாலமாக பணிபுரிந்து வரும் இவர்களது பணி நிரந்திரம் மற்றும் காலமுறை நிர்ணய ஊதியம் கோரிக்கை ஏற்று அரசுக்கு கடிதம் அனுப்பவும் மன்ற தீர்மானம் எண் 391/06 நாள் 31.8.2006ல் அன்று அனுமதி அளிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் இயங்கி வரும் இம் மழலையர் வகுப்புகள் நன்மதிப்பு பெற்று நடைமுறைப் படுத்தப்பட்டதால், இப்பணியாளர்கள் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்டனர். இவர்கள் உறுதிமொழி ஒப்பந்த அடிப்படையில் கல்வி ஆண்டுகளில் 10 மாத காலம் மட்டும் பணிபுரிய மன்றத்தில் அனுமதிக்கப்பட்டு 10 ஆண்டுகாலமாக பணிபுரிந்து வருகிறார்கள். இம் மழலையர் பள்ளிகளின் காரணமாக மாணவர்களின் சேர்க்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேலும், பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள குழந்தைகள் முறையான பள்ளிகளுடன் (Regular School) இணைந்து செயல்படுவதால் இம்மாணவர்கள் துவக்க நிலையிலேயே தக்க வைக்க வாய்ப்புகள் பெருகும். இந்நிலையில் இப்பள்ளிகளை தொய்வின்றி தொடர்ந்து நடத்திடவும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் சுற்று வட்டாரத்தில் உள்ள வீடுகளுக்கும் சென்று மழலையர்களை பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவும், இம் மழலையர் பள்ளி பணியாளர்களின் பணி மிகவும் அவசியத் தேவை என கருதப்படுகிறது. என்றும், சென்னை மாநகராட்சி மழலையர் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் கோரிக்கையின் படியும் கருணை அடிப்படையிலும் இவர்களுக்கு காலமுறை ஊதிய நிர்ணயம் வழங்கவும், சென்னை மாநகராட்சி இயந்திரத்துறையில் உள்ள 60 பதவிகளை நிலுவையில் வைப்பதன் மூலம் (kept in abeyance) மேற்படி பதவிகளை கல்வித்துறையில் உள்ள மழலையர் பள்ளிக்கு நிரந்தரமாக தொடர்ந்திடவும் இவர்கள் வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப் படாமைக்கும், இன சுழற்சி முறையினை கடைபிடிக்கப் படாமைக்கும் வயது வரம்பு தளர்விற்கும், அரசின் அனுமதி கோரி அரசுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

அரசு பரிசீலனைக்குப்பின், சென்னை மாநகராட்சி மழலையர் பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் ஆயாக்கள், மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு கீழ்கண்டவாறு அவரவர் பதவிகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்படாத காலமுறை ஊதியத்தை, (Non Standard Scale of pay) நிர்ணயித்து அரசாணை (நிலை) எண்.96 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.9.2006ல் அரசு ஆணையிட்டுள்ளது.

<u>க.து.ந.க.எண்.இ10/6772/2006</u>

| வ.எண் | பதவியின் பெயர் | வரையறுக்கப்படாத காலமுறை <u>ஊதியம்</u> |
|---|---|---|
| 1 | ஆசிரியர் | ரூ.1300–20–1500–25–2000 |
| 2 | அலுவலக உதவியாளர்கள் | ரூ. 700–15–850–25–1225 |
| 3 | குழந்தைகள் பராமரிப்பு ஆயாக்கள் | ரூ.600–10–700–20–1100 |

மேற்கண்ட வரையறுக்கப்படாத காலமுறை ஊதியத்துடன் 50 சதவீத அகவிலை ஊதியமும் (Dearness pay ) அவ்வப்போது வழங்கப்படும் அகவிலைப்படியும் இவர்களுக்கு பொருந்தும் என்றும், இப்பணியாளர்களுக்கு வீட்டுவாடகைப் படி நகர ஈட்டுப் படி மற்றும் மருத்துவப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது என்றும் இவ்வூதியப் பயன்களை ஆணை வெளியிடும் நாள் முதல் (14.9.2006) நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இவர்கள் வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமைக்கும் இன சுழற்சி முறையினை கடைபிடிக்கபடாமைக்கும், வயது வரம்பிற்கும் தளர்வளித்தும் மன்றத்தின் பின்னேற்பு தீர்மானத்திற்குட்பட்டு அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இச்செலவீனத்தை சென்னை மாநகராட்சி தொடக்க கல்வி 116 கல்வித்துறை நிரந்தரமற்ற பணியாளர்கள் தலைப்பில் நிதி ஒதுக்கீடு ரூ 40.00 லட்சத்தில் செலவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கீழ்கண்டவாறு பணியாளர்கள் செலவு விவரம்

| | | **<u>Pay</u> Rs** | **<u>D.P.</u> Rs** | **<u>D.A.</u> Rs** | **<u>Total</u> Rs** | | **<u>Arrear</u>** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **ஆசிரியை 102 பணியிடங்கள்** | **1300** | **650** | **566** | **2516** | **x102** | **Rs 2,56,632 x 12** | **Rs 30,79,584** |
| **2** | **அலுவலக உதவியாளர் 30 பணியிடங்கள்** | **700** | **350** | **305** | **1355** | **x30** | **Rs 40,650 x 12** | **Rs 4,87,800** |
| **3** | **ஆயா 102 பணியிடங்கள்** | **600** | **300** | **261** | **1161** | **x102** | **Rs 1,18,422 x 12** | **Rs 14,21,064** |
| | | | | | | | | **Rs 49,88,448** |

மொத்த செலவு சுமார் ரூ.50.00 இலட்சம் ஆகும்.

2006–2007 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ரூ.40.00 லட்சத்தில் ஆகஸ்ட் 2006 வரை ரூ.16,98,481/– ஆகும் மீதம் ரூ.23,01,519/– நிலுவையில் உள்ளது. நடப்பு கல்வி ஆண்டில் கூடுதலாக ரூ.5.00 இலட்சம் உயர்த்தி வழங்கவும் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே, கீழ்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஆணை வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சி 30 மழலையர் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் கோரிக்கைக்கு இணங்க தொகுப்பூதியம் உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்ட மன்றத் தீர்மானம் எண்.391/2006. நாள் 31.8.2006 னை பத்தி 6ல் வரிசை எண்.1ஐ ரத்து செய்யவும்.
2. அரசாணை (நிலை) எண்.96 ந.நி.ம.கு.வ துறை நாள் 14..09.06.ன்படி, 30 மழலையர் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்படாத காலமுறை ஊதியத்துடன் (Non Standard Scale of pay) 50 சதவிகித அகவிலை ஊதியமும் (Dearness pay) அவ்வப்போது வழங்கப்படும் அகவிலைப்படியும் இவர்களுக்கு பொருந்தும் எனவும், இப்பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் மருத்துவபடி ஏதும் வழங்கப்படமாட்டாது என்றும், இவ்வூதியப் பயன்கள் ஆணை வெளியிடும் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், இவர்கள் வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமைக்கும், இனசுழற்சி முறையினை கடைப்பிடிக்காமைக்கும் வயது வரம்பிற்கும் தளர்வளித்தும், மழலையர் பள்ளி பணியாளர்களுக்கு அவரவர் பதவிகளுக்கு வரையறுக்கப்படாத காலமுறை ஊதியத்தை (Non Standard Scale of pay) அரசு ஆணை வெளியிடும் நாள் முதல் செயல்முறை ஆணையில் கண்டுள்ளவர்களுக்கு நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பும்,

3. 16 ஆசிரியர்கள் குறைந்த பட்ச கல்வித்தகுதியான பொதுத்தேர்வு எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறாமல் தொடர்ந்து பணிபுரிந்து வரும் நிலையில், அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை வழங்கவும்,

4. இப்பணியாளர்களுக்கு ஆகும் செலவினம் 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் நிதி ஒதுக்கீடு தொடக்கக்கல்வி 116 கல்வித்துறை நிரந்தரமற்ற பணியாளர்கள் தலைப்பில் நிதி ஒதுக்கீடு ரூ.5.00 இலட்சம் உயர்த்தி வழங்கவும்.

“6.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.44, நாள்: 06.07.2007 ன் படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.120/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நிமயனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”.

“பணியாளர்கள் பல ஆண்டுகளாக தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருவதையும், தற்போது அரசு ஆணையில் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரையறுக்கப்படாத காலமுறை ஊதியம் மிகவும் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு இப்பணியாளர்களுக்கு முறையான கால முறை ஏற்ற ஊதிய விகிதங்களை (Regular time scale of pay) நிர்ணயிப்பது குறித்து அரசு மறுபரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டி அரசை மீள கேட்டுக்கொள்ளலாம் என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

சு.து.(ம) ந.க.எண்.எம்.1/697/2007
ஆணையாளர் அவர்களின் 13.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.374/2007 பொருள் எண்.54

பணியமைப்பு

சென்னை மாநகராட்சியில் தேசிய யானைக்கால் ஒழிப்பு திட்டத்தின் கீழ் அரசாணை எண்.2588 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்.10.10.1971ன் படி 40 களப்பணி உதவியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

தற்போது 15 களப்பணி உதவியாளர்களே பணியில் உள்ளனர். வயது முதிர்வு ஒய்வின் காரணமாகவும், தன்விருப்ப ஒய்வின் காரணமாகவும் மற்றும் பணியிலிருக்கும் போது ஏற்பட்ட இறப்பின் காரணமாகவும் 25 பணியிடங்கள் காலியாக உள்ளது.

சென்னை நகரில் நாளுக்கு நாள் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப கட்டிட பணிகளும், கழிவுநீர் கால்வாய்களும் அதிகரித்து வருவதால் கொசுக்களின் உற்பத்தி அதிகமாகி மக்களுக்கு தொல்லையை கொடுப்பதுடன் மலேரியா நோய், டெங்கு காய்ச்சல், சிக்–குன்–குனியா மற்றும் யானைக்கால் நோய்கள் பரவி வருகின்றன.

பல இன கொசுப்புழுக்களின் வளர்ச்சிகளை குறுக்காய்வு செய்து அவற்றின் பெருக்கத்தை கணக்கிடவும், கொசுக்களின் இனப்பெருக்கத்தினை கணக்கிடுவதற்க்காக காலை மற்றும் மாலை நேரங்களில் கொசுக்களை பிடிக்கும் பணியினையும் களப்பணி உதவியாளர்கள் செய்து வருகின்றனர். களப்பணி உதவியாளர்களின் பணி மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

களப்பணி உதவியாளர்களின் கொசுப்புழு குறுக்காய்வு அறிக்கை, மற்றும் கொசுக்களின் எண்ணிக்கை அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு கொசுப்புழு அழிப்பு மற்றும் கொசு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது பணியில் உள்ள 15 களப்பணி உதவியாளர்களை கொண்டு 155 வார்டுகளிலும் கொசுப்புழு குறுக்காய்வு மற்றும் கொசு பிடிக்கும் பணிகள் மேற்கொள்வதில் பின்னடைவு ஏற்பட்டு கொசு தடுப்பு பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே கீழ்கண்டவற்றிற்கு ஆணையர் அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

மன்றத் தீர்மான எண்.22/82ன் படி களப்பணி உதவியாளர், பதவிக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேலும் தலைமை மஸ்தூர் பதவியிலிருக்கும் பணியாளர்களுக்கு களப்பணி உதவியாளராக பதவி உயர்வு அளிக்கலாம். தலைமை மஸ்தூர் பணியாளர்கள் தேவையான எண்ணிக்கையில் இல்லாத பட்சத்தில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பலாம்.

தற்பொழுது சென்னை மாநகராட்சியில் 28 தலைமை மஸ்தூர்களே பணி செய்து வருகின்றனர். அவர்களில் வயதானவர்களே அதிக அளவில் உள்ளனர் களப்பணியாளர்களின் பணி மிகவும் இன்றியமையாத பணி என்பதால் மன்ற தீர்மான எண்.22/82ல் உள்ள விதிகளை மாற்றி கீழ்கண்டவாறு களப்பணி உதவியாளர்களை நியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) களப்பணி உதவியாளர் பணிக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2) சென்னை மாநகராட்சியில் பணி செய்து வரும் தலைமை மஸ்தூர்களில் விருப்பப்பட்டவர்களுக்கு இப்பதவியை வழங்கவும்
3) சென்னை மாநகராட்சியில் பணி செய்து வரும் 4–ம் நிலை ஊழியர்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களை கொண்டு நிரப்பவும்,
4) தேவையான எண்ணிக்கையில் தகுதி உள்ள பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பவும்,
5) தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு குறைந்தது ஒரு மாத காலம் தமிழ் நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறையில் பயிற்ச்சியளிக்கவும்,

1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**பொ.சு.ந.க.எண்.ஈ2/31325/99**

**ஆணையரின் 23.07.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.375/2007 பொருள் எண்.55

**பணியமைப்பு – கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியல்**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் சுகாதார அலுவலர் மற்றும் கூடுதல் சுகாதார அலுவலர் பணியிடங்கள் முறையே 31.07.2000 மற்றும் 10.04.2000 முதல் காலியாகவுள்ளது.

மேற்படி பணியிடங்களில், சுகாதார அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 1ஏ என வகைப்படுத்துள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியவை அரசின் வசம் உள்ளது.

கூடுதல் சுகாதார அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு– 1பி என வகைப்படுத்தப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 85(3)(பி)ன்படி இப்பதவியினை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி மேற்படி பதவிகளுக்கான பணிநியமன விதிகள் பின்வருமாறு :–

| Class, Name of the Post and Scale of Pay | Mode of Appointment | Qualification |
|---|---|---|
| Class IA<br>Health Officer<br>14300-400-18300 | By Promotion from the cadre of Addl. Health Officer in Class 1B service | M.B.B.S. Degree with Diploma in Public Health.<br>A pass in Account Test for Executive Officers.<br>Must have served as Addl, Health Officer atleast for a period of one year. |

| Class, Name of the Post and Scale of Pay | Mode of Appointment | Qualification |
|---|---|---|
| Class IB<br>Additional Health Officer<br>10,000-325-15200 | By Promotion from the cadre of Asst. Health Officer and the holdler of the post of Superintendent, Communicable Diseases Hospital, in Class II Service. | 1. M.B.B.S. Degree with Diploma in Public Health.<br>2. A pass in Account Test for Executive Officers.<br>3. Must have served as Asst. Health Officer / Superintendent, Communicable Diseases Hospital atleast for a period of 2 years. |

ஏற்கனவே ஒரு கூடுதல் சுகாதார அலுவலர் பணியிடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக ஒரு கூடுதல் சுகாதார அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க மன்றத் தீர்மான எண்.242/2007, நாள் 2805.2007ன்படி, அரசுக்கு 11.07.2007 தேதியிட்டு முன்மொழிவு அனுப்பப்பட்டு, அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது.

01.04.2007ஐ மைய நாளில் மேற்படி பணியிடங்களை பதவி உயர்வின் மூலம் நிரப்ப பின்வருமாறு பட்டியல் அமைகிறது :–

1) டாக்டர்.பெ. குகானந்தம்

2) டாக்டர்.எஸ். கிருஷ்ணா

3) டாக்டர்.ஜி.ட்டி. தங்கராஜ்

இதில், வரிசை எண்.1லுள்ள உதவி சுகாதார அலுவலர் கூடுதலாக சுகாதார அலுவலராக பொறுப்பு வகித்துவருகிறார். சுகாதார அலுவலருக்கு ஊட்டப்பதவி கூடுதல் சுகாதார அலுவலர் பதவியாகும். இப்பதவியில் ஒரு வருட காலம் பணிபுரிந்த பின்னர்தான் இவரது பெயரினை சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு பரிசீலிக்க இயலும்.

வரிசை எண்.2லுள்ள உதவி சுகாதார அலுவலர் கூடுதலாக கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான பொறுப்பு வகித்துவருகிறார்.

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/31325/99</u>

கடந்த 7 வருடங்கலாக சுகாதார அலுவலர் பணியிடம் காலியாகவுள்ளதால், கூடுதல் பொறுப்பிலேயே பணிபார்க்கப்படுகிறது. அதிக மக்கள் தொகை கொண்ட சென்னை மாநகரில் சுகாதார பணிகள் விரிவுப்படுத்தப்பட்டு கொண்டே வருகிறது. இச்சூழலில் சுகாதாரத்துறையில் தொழில் நுட்ப தகுதியுடைய சுகாதார அலுவலர் பணியிடம் பொறுப்பு அலுவலரால் கண்காணிக்கப்படுவது அவ்வளவு சிறப்புடையது அல்ல.

இப்பதவியில் தற்பொழுது கூடுதல் பொறுப்பு வகித்து வரும் டாக்டர்.பெ. குகானந்தம் இன்னும் உதவி சுகாதார அலுவலர் பதவியிலேயே உள்ளார். விதிகளின்படி இவருக்கு கூடுதல் சுகாதார அலுவலர் பதவி உயர்வு அளித்து சுகாதார அலுவலர் (பொறுப்பு) வகிக்க மட்டுமே தற்போது இயலும்.

மேற்படி அலுவலர் கூடுதல் சுகாதார அலுவலர் பதவியிலேயே இருந்தாலும் நடைமுறையில் சுகாதார அலுவலர் பதவியை கூடுதல் பொறுப்பாக வகித்து வருவதால் இப்பணியிடத்தில் உதவி சுகாதார அலுவலர் டாக்டர்.எஸ். கிருஷ்ணா என்பவரை கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கும், மேற்படி மன்றத் தீர்மானத்தின்படி கூடுதலாக ஒரு கூடுதல் சுகாதார அலுவலர் பதவியினை தோற்றுவிக்கப்படவுள்ள பணியிடத்தில் உதவி சுகாதார அலுவலர் டாக்டர்.ஜி.ட்டி. தங்கராஜ் என்பவரை பணியமர்த்தலாம் என கருதப்படுகிறது.

எனவே, பின்வரும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(1) கடந்த 7 வருடங்கலாக சுகாதார அலுவலர் பணியிடம் காலியாகவுள்ளதால், கூடுதல் பொறுப்பிலேயே பணிபார்க்கப்பட்டு வருவதால், இப்பதவியில் தற்பொழுது கூடுதல் பொறுப்பு வகித்து வரும் உதவி சுகாதார அலுவலர் டாக்டர்.பெ. குகானந்தம் என்பவரை ரூ.10000–325–15200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு கூடுதல் சுகாதார அலுவலர் பணியிடத்தில் தற்காலிகமாக கூடுதல் சுகாதார அலுவலர் பதவி உயர்வு அளித்து சுகாதார அலுவலர் (பொறுப்பு) வகிக்கவும்,

(2) மேற்படி அலுவலர் கூடுதல் சுகாதார அலுவலர் பதவியிலேயே இருந்தாலும் நடைமுறையில் சுகாதார அலுவலர் பதவியை கூடுதல் பொறுப்பாக வகித்து வருவதால் இவர் சுகாதார அலுவவலர் பதவிக்கு பரிசீலிக்கப்படும் நிலையில், இப்பணியிடத்தில் உதவி சுகாதார அலுவலர் டாக்டர்.எஸ். கிருஷ்ணா என்பவரை கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கும்,

(3) மன்றத் தீர்மான எண்.242/2007, நாள் 2805.2007ன்படி கூடுதலாக ஒரு கூடுதல் சுகாதார அலுவலர் பதவியினை தோற்றுவிக்கப்படவுள்ள பணியிடத்தில் உதவி சுகாதார அலுவலர் டாக்டர்.ஜி.ட்டி. தங்கராஜ் என்பவரை பணியமர்த்தவும்,

(4) உதவி சுகாதார அலுவலர்கள் டாக்டர்.எஸ். கிருஷ்ணா மற்றும் டாக்டர்.ஜி.ட்டி. தங்கராஜ் ஆகியோருக்கு கருத்தியலாக கூடுதல் சுகாதார அலுவலர் பதவி உயர்வு வழங்கி அரசாணை பெற்ற பின்பே இவர்களுக்கு கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படும்,

(5) பின்னர் அரசின் ஆணையை கோரி தக்க செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிடவும்.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி
சமர்ப்பிக்கின்றது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
/உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**பொ.து.ந.க.எண்.ஈ1/31246/2007**
**ஆணையாளர் அவர்களின் 28.06.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.376/2007 பொருள் எண்.56

**பணியமைப்பு – உதவி செயற்பொறியாளர் பணி நியமனம் உறுதியாக்கம்**

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான நியமன அதிகாரம் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பெற்றுள்ளது. மேற்படி பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு

| Class, Category and name of post | Method of Appointment | Qualifications |
|---|---|---|
| Assistant Executive Engineer other than Assistant Executive Engineer (Electrical) | உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் பதவிகளைக்கொண்டு பதவி உயர்வின் மூலம் 3 பட்டதாரி பொறியாளர்(உதவி பொறியாளர்) ஒரு பட்டயப் பொறியாளர்(இளநிலைப் பொறியாளர்) என்ற விகிதாச்சார முறையில் நிரப்பப்படவேண்டும். (அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 09.02.1990) | i.(a) B.E. Degree (Civil or Mechanical) of any University or Institution recognised by the University Grants Commission for purposes of its grant or any other qualification considered equivalent thereto;<br>(b) Must have served as Assistant Engineer in the Corporation Engineering Subordinate Service, Municipal Engineering Grade III, Junior Engineer or Supervisor (Public Health) for a period of not less than five years on duty; or<br>(c) Municipal Engineer, Grade II or Assistant Engineer (Public Health) ; or<br>(d) Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto; Provided that Draftsman, overseers and Surveyors of the CorporationEngineering Subordinate Service Promoted as Junior Engineer in the same service; Head Surveyors and Head Draftsmen of the Corporation Engineering Subordinate Service, Municipal Engineer Grade III or Supervisor (Public Health) possessing the qualifications referred to in item (d) above shall be eligible for appointment as Assistant Executive Engineers only if they have put in a total service of not less than 10 years in one or more categories or as Municipal Engineer Grade III or as Supervisor (Public Health); and (G.O.Ms/No/907, RD&LA dt.20-5-81)<br>(ii) A pass in the Account Test for Public Works Department Officers and Subordinates. |

3:1 என்ற விகிதாச்சார முறையின்படி, அரசின் உறுதியாக்கத்தினை எதிர்நோக்கி தகுதியான இளநிலை/உதவி பொறியாளர்களுக்கு பல்வேறு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.3.2001ன் வாயிலாக 114 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கான அரசின் உறுதியாக்க ஆணை பெறப்பட்டுள்ளது. அரசின்

<u>பொ.து.ந.க.எண்.ஈ1/31246/2007</u>

உறுதியாக்கம் பெற்றதைத் தொடர்ந்து 114 உதவி செயற் பொறியாளர்களில் பணியிலிருந்த தகுதிபெற்றுள்ளவர்களுக்கு செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் 114 நபர்களைக் கொண்ட அரசால் பணி உறுதியாக்கம் செய்யப்பெற்றுள்ள பட்டியல் தற்போது காலாவதியாகவுள்ளது.

சென்னை மாநகராட்சியில் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய செயற்பொறியாளர் பணியிடங்களை, உதவி செயற்பொறியாளர் பதவியில் அரசால் பணி உறுதியாக்கம் செய்யப் பெற்றவர்களைக் கொண்டு நிரப்ப இயலும் என்பதால், அரசின் உறுதியாக்கத்தினை எதிர்நோக்கி உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களின் விவரங்களை அரசுக்கு தெரிவித்து, அரசின் உறுதியாக்கம் பெறப்படவேண்டும்.

ஆனால், 114 உதவி செயற்பொறியாளர்களுக்கு பணி உறுதியாக்கம் அளித்து அரசால் இடப்பட்டுள்ள ஆணையினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் சென்னை மாநகராட்சியின் சில பொறியாளர்களால் வழக்கு தொடரப்பட்டு, வழக்குகள் நிலுவையில் உள்ளதால் பணி உறுதியாக்கம் செய்யக் கோரி அரசுக்கு பிரேரணை அனுப்ப இயலாத சூழ்நிலை தொடர்கிறது.

சென்னை மாநகராட்சியில் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய செயற்பொறியாளர் பணியிடங்களை, உதவி செயற்பொறியாளர் பதவியில் அரசால் பணி உறுதியாக்கம் செய்யப் பெற்றவர்களைக் கொண்டு நிரப்ப இயலும் என்பதால், அரசின் உறுதியாக்கத்தினை எதிர்நோக்கி உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களின் விவரங்களை தொகுத்து அதன் விவரத்தினை அரசுக்கு தெரிவித்து, உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டு, உதவி செயற்பொறியாளர் பதவியில் பணி உறுதியாக்கம் செய்ய அரசினைக் கோர நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

பொ.து.ந.க.எண்.ஜி4/7012/2007
ஆணையாளர் அவர்களின் 27.06.2007 நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.377/2007 பொருள் எண்.57

**பணியமைப்பு – கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து**

அரசாணை (நிலை) எண்.42 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ–1) துறை, நாள்.12.03.2007ல் பணியமர்த்தப்படும் அனைத்து நிகழ்வுகளும் அரசின் ஒப்புதலுக்கு பிறகே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி ஓர் தன்னாட்சி நிறுவனமாகும் எனவும், சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கென பல்வேறு நிலைக்குழுக்கள், நியமனக்குழு மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் ஆகியன நிர்வாகத்தினை வழிநடத்தி செல்கிறது எனவும், சென்னை மாநகராட்சியில் கருணை அடிப்படையிலான மனுதாரர்களின் மனுக்களை பரிசீலனை செய்திட ஏற்கனவே உதவி ஆணையர் (பொ.நி.ம.ப), துணை ஆட்சியர் (நிர்வாகம்), மண்டல அலுவலர்–1 மற்றும் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) ஆகியோர் அடங்கிய தேர்வுக்குழு உள்ளது. இக்குழுவினர் மேற்படி கருணை அடிப்படையிலான மனுதாரர்களின் உடல் தகுதி, கல்வித்தகுதி போன்றவற்றின் தகுதிக்கேற்ப தேர்வு செய்து பணிநியமனம் செய்திடும் பொருட்டு, சென்னை மாநகராட்சி நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் ஒப்புதலைப்பெற்று பணிநியமனம் வழங்கப்பட்டு வந்ததன் அடிப்படையில் கருணை அடிப்படையில் வேலை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட அரசு தெரிவித்துள்ள பணியாளர் குழுவிற்கு பதிலாக ஏற்கனவே உள்ள நடைமுறைப்படி சென்னை மாநகராட்சி தேர்வுக்குழு மூலம் தேர்வுச்செய்யும் மனுதாரர்கள் நியமனக்குழு ஒப்புதலைப்பெற்று, செயல்படுத்திடலாமா, என அரசின் கருத்துரை வேண்டப்பட்டது.

தற்பொழுது அரசு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கடிதம் எண்.12429/க்யூ–1/2007–1, நாள்.08.06.2007ல் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளது.

As per the Chennai City Municipal Act,1919 Under section 85, Corporation establishment class-IV(C)

1. Appointment to all posts included in the class III and class IV and to all other posts not so included shall be made by the appointments committee consisting of the Mayor, the Commissioner and two councilors elected by the council, which shall be established for the corporation subject to the Bye-laws if any, made by the council.
2. The Corporation of Chennai may examine and to follow the above provisions of the Act and as per the orders issued by the Government in G.O.Ms.No.42 L & E. Department, dated : 12.03.2007 for compassionate ground appointment.
3. This letter issues with the concurrence of the Municipal Administrative and Water Supply Department vide its U.O.No.16071/MC3/07-1,dated : 30.05.2007.

அரசு தெரிவித்துள்ள கருத்தினை சென்னை மாநகராட்சியில் அமல்படுத்திட, மாமன்றத்தின் தகவலுக்காக நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பதிவுசெய்து மன்றத்தின் பதிவிற்காகவும்
தகவலுக்காகவும் சமர்ப்பிக்கின்றது”.

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 1941/2007**
**ஆணையரின் 10.7.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.378/2007 பொருள் எண்:58

**மண்டலம் 2ல், கோட்டம் –31ல் பேசின் பால சாலையில் உள்ளகுப்பை கொட்டும் வளாகம் மண்டலம் 2க்கான நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை அனுமதி வேண்டுதல்**

மண்டலம்–2ல் கோட்டம்–31ல் பேசின் பால சாலையில் உள்ள குப்பை கொட்டும் வளாகம் மண்டலம் 2க்கான நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு 2007–2008ஆம் ஆண்டு (வடக்கு) அலுவலக விலைவிகிதப்படி தயாரிக்கப்பட்ட 2007–2008ஆம் ஆண்டின் மூலதன நிதியின் கீழ் இப்பணிமேற்கொள்ளப்படவுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,72,75,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து இரண்டு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கும் மற்றும் அரசின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும் நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 78ன் படி சமர்ப்பிக்கப்படுகிறது,

“இப்பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால் இப்பொருள் அரசின் அனுமதியை எதிர்நோக்கி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் 13.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.131, நாள் 13.07.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளிக்கின்றது.”

“17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.137/07 நாள்.17.7.2007ன்படி இப்பொருளில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால், இப்பொருள் அரசின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 1869/2007
ஆணையரின்  10.7.2007  நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.379/2007 பொருள் எண்:59

**மண்டலம் 4ல், கோட்டம் –60ல் எஸ்.எஸ். புரம் ஓட்டேரி குப்பை கொட்டும் வளாகம் மண்டலம் 4க்கான நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை அனுமதி வேண்டுதல்**

மண்டலம்–4ல் கோட்டம்–60ல் எஸ்.எஸ்.புரம் ஓட்டேரி குப்பை கொட்டும் வளாகம் மண்டலம் 4க்கான நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு 2007–2008ஆம் ஆண்டு (வடக்கு) அலுவலக விலைவிகிதப்படி தயாரிக்கப்பட்ட 2007–2008ஆம் ஆண்டின் மூலதன நிதியின் கீழ் இப்பணிமேற்கொள்ளப்படவுள்ளது . மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,99,50,000/– (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கும் மற்றும் அரசின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும் நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 78ன் படி சமர்ப்பிக்கப்படுகிறுத.

''இப்பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால் இப்பொருள் அரசின் அனுமதியை எதிர்நோக்கி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் 13.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.132, நாள் 13.07.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளிக்கின்றது.''

‘‘17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.136/07 நாள்.17.7.2007ன்படி இப்பொருளில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால், இப்பொருள் அரசின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 2005/2007
ஆணையரின் 11.7..2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.380/2007 பொருள் எண்:60

மண்டலம் 3ல், கோட்டம் –45ல் பேசின் யானைகவுளி சாலையில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் மண்டலம் 5க்கான நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை அனுமதி வேண்டுதல்

மண்டலம்–3ல் கோட்டம்–45ல் பேசின் யானை கவுளி சாலையில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் மண்டலம் 5க்கான நவீன குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு 2007–2008ஆம் ஆண்டு (வடக்கு) அலுவலக விலைவிகிதப்படி தயாரிக்கப்பட்ட 2007–2008ஆம் ஆண்டின் மூலதன நிதியின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,84,50,000/– (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கும் மற்றும் அரசின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும் நிலைக்குழு (பணிகள்)வின் அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 78ன் படி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால் இப்பொருள் அரசின் அனுமதியை எதிர்நோக்கி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் 13.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.136, நாள் 13.07.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளிக்கின்றது.”

“17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.135/07 நாள்.17.7.2007ன்படி இப்பொருளில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால், இப்பொருள் அரசின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

திக.மே.து.ந.க.எண்.அ7/2033/2007
ஆணையரின் 17.07.2007 நாளிட்ட குறிப்ப

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.381/2007 பொருள் எண்.61

திடக்கழிவு மேலாண்மை விதிகளை பொதுமக்கள் கடைப்பிடிக்கும் முறைகளை வகுத்தல்

சென்னை மாநகரத்தில் தினந்தோறும் சுமார் 3200 டன் குப்பை உருவாகின்றது. அவ்வாறு உருவாகின்ற குப்பையை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் களையப்படுகின்றன. ஜனத்தொகை நாளுக்கு நாள் பெருகி வருகின்ற நிலையில் குப்பையும் நாளுக்கு நாள் பெருகும் நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு இந்தியாவில் உள்ள அனைத்து நகரங்களிலும் உருவாகும் குப்பைகளை விஞ்ஞான முறைப்படி கையாளும் பொருட்டு 2000ம் ஆண்டில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளல் விதிகள் இந்திய அரசினால் உருவாக்கப்பட்டது. இவ்விதிகளில் கீழ்காணும் முக்கிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

1) எந்த ஒரு கட்டடத்தின் உரிமையாளரோ அல்லது குடியிருப்பவர்களோ பொது இடங்களிலும் மற்றும் பொது நீர்நிலைகளிலும் மற்றும் வடிகால் அல்லது சாக்கடைகளில் எந்த ஒரு கழிவினையும் போடக்கூடாது.

2) எந்த ஒரு நபரும், பொது இடங்களில் நீராடவோ, எச்சில் துப்பவோ, சிறுநீர்கழிக்வோ, மலஜலம் கழிக்கவோ, விலங்குகளுக்கு அல்லது பறவைகளுக்கு உணவளிக்கவோ, வாகனங்கள், பாத்திரங்கள் அல்லது இன்ன பிற பொருட்களை கழுவுதலோ, கூடாது.

3) ஒவ்வொரு நபரும், அவருக்கு சொந்தமான அல்லது அவரின் உபயோகத்தில் இருக்கும் எந்த ஒரு கட்டடத்தின் முன்புறம் அல்லது அருகாமையில் உள்ள பொது இடத்தை, நடைபாதையினை தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

4) ஒவ்வொரு நபரும் தங்களால் உருவாக்கப்படும் கழிவுகளை கீழ்வரும் ஆறு வகைகளாக அவைகள் உருவாகும் இடத்திலேயே தனியாக பிரித்து சேர்த்து வைக்கவேண்டும்.

    1) அழுகக்கூடிய(ஈரப்பதம் வாய்ந்த) கழிவுகள்
    2) இல்லங்களில் உருவாகும் அபாயகரமான கழிவுகள்
    3) மருத்துவக்கழிவுகள்
    4) கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகள்
    5) மரங்களை அலங்கரிப்பாக கத்தரித்த கழிவுகள் உட்பட அதிகஅளவிலான தோட்ட மற்றும் தோட்டம் சார் கழிவுகள்
    6) மறு சுழற்சி செய்யக்கூடிய மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகள் உட்பட மற்ற அனைத்து வகையான (உலர்ந்த) கழிவுகள்

5) குடியிருப்பு வளாகங்கள் மற்றும் பலமாடிக் கட்டடங்கள் ஆகியவைகளில் இருப்பவர்கள் கழிவுகளை கலக்காமல் தரம் பிரிக்கப்பட்டதாக சேர்த்து வைத்து வழங்கவேண்டும்.

6) தரம்பிரிக்கப்பட்ட அழுகக்கூடிய கழிவுகள் உரமாக மாற்றப்படாவிட்டால், அவைகள், இல்லத்திற்குள்ளேயே சேர்த்து வைக்கப்பட்டு அவைகளை சேகரிக்க வரும் செனை மாநகராட்சி வாகனங்களில் போட வேண்டும். இத்தகைய கழிவுகளை அதிகஅளவில் உருவாக்கும் உணவு விடுதிகள், உணவகங்கள், வணிகக்கட்டடங்கள், உணவருந்தும் நிலையங்கள், மகிழகங்கள், பணியாளர் உணவுவிடுதிகள், அங்காடிகள் அதற்கென குறித்த இடத்தில் இத்தகைய கழிவுகளை வழங்க வேண்டும்.

7) அதிக அளவில் கழிவுகளை உருவாக்குபவர்கள் அத்தகைய கழிவுகளை சென்னை மாநகராட்சி சொல்லும் இடத்தில் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்.

8) கழிவுகளை அதிக அளவில் உருவாக்குபவர்கள், மற்றும் புதிய கட்டுமானங்களின் உரிமையாளர்கள்/அவைகளை கையகத்தே வைத்திருப்பவர்கள் அங்கு உருவாகும் அழுகும் கழிவுகளை அந்த இடத்திலேயே உரமாக மாற்ற வேண்டும். இடவசதி இல்லாத காரணத்தினால் அவ்வாறு உரமாக மாற்ற இயலாத நிகழ்வுகளில் மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

9) கட்டுமான மற்றும் கழிவுகள் அவைகள் உருவாக்கப்படும் இடத்திலேயே சேர்த்து வைக்கப்பட்டு இதற்கென உள்ள சென்னை மாநகராட்சி தகவல் மையத்திற்கு தகவல் அளிக்கவேண்டும். சென்னை மாநராட்சி தனது வாகனத்தில் அல்லது ஒப்பந்ததாரர்களின் வாகனம் மூலம் அவைகளை வெளியேற்றும். இதற்கென இக்கழிவுகளை உருவாக்குபவர்கள் அகற்றல் கட்டணத்தை சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

10) மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத அனைத்து உலர் கழிவுகளையும் அவைகளை உருவாக்குபவர்கள் சேர்த்து வைத்திருந்து அவைளை சென்னை மாநகராட்சி அறிவிக்கும் இடங்களில் உள்ள குறிப்பிட்ட நேரத்தில் வரும் சேகரிப்பு வாகனகளில் வழங்க வேண்டும்.

11) அதிக அளவில் உருவாகும் தோட்ட மற்றும் தாவர கழிவுகள், அவைகள் உருவாகும் இடத்திலேயே உரமாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு இயலாத நிகழ்வுகளில் சென்னை மாநகராட்சி அத்தகைய கழிவுகளை ஒரு குறிப்பிட்ட கால அட்டவணை முறையில் சேகரிக்கும். அதற்கென இத்தகைய கழிவுகளை உருவாக்குபவர்கள் போக்குவரத்து கட்டணமாக சென்னை மாநகராட்சிக்கு நிர்ணயிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். அந்நிகழ்வுகளில் தோட்டங்களில் தாவரங்கள் குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வருவதற்கு முந்தைய நாளில் தான் வெட்டபட வேண்டும்.

12) எந்த ஒரு கழிவினையும் எரித்தலின் மூலம் அழிப்பது கட்டாயமாக தடை செய்யப்படுகிறது.

13) இந்த விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

எனவே, சென்னை மாநகராட்சி எல்லைக்குள் வசிக்கும் ஒவ்வொரு குடிமகன், குடும்பங்கள், உணவகங்கள் தங்கும் விடுதிகள், வணிக கட்டிடங்கள் மற்றும் அங்காடிகள், கட்டுமானபணிகள் மேற்கொள்பவர்கள், தங்களால் உருவாக்கப்படும் குப்பைகள், கட்டுமான பொருட்கள் கட்டிட இடிபாடுகள் போன்றவற்றை விதிமுறையின்படி தங்கள் இடங்களிலேயே தரம்பரித்து சேர்த்து வைக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் பொது இடங்களில், வீதிகளில் மற்றும் சாலைகளில் போடக்கூடாது. குப்பை சேகரிக்கும் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் / வாகனங்களில் மட்டுமே அளிக்கப்படவேண்டும்.

இது போன்ற கட்டுமான பொருட்களை தங்களின் கட்டுமான எல்லைக்குள்ளேயே சேகரிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் வீதிகளில், நடைபாதைகளில் சேகரிக்க கூடாது. கட்டிட இடிபாடுகளை மற்றும் தோட்டத்தில் உண்டாகும் கழிவுகளை அகற்றுவதற்கு சென்னை மாநகராட்சி தகவல் மையத்திற்கு / மண்டல அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் தகவல் அளிக்க வேண்டும். சென்னை மாநகராட்சி கட்டிட இடிபாடுகளை அகற்றுவதற்கான கட்டணத்தை உரிமையாளரிடம் இருந்து வசூலித்து மாநகராட்சி வாகனங்கள் அல்லது இதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் வாகனங்கள் மூலம் முன்னுரிமை அடிப்படையில் அகற்றப்படும்.

விதிகளில் கூறப்பட்டுள்ள இவ்வழிமுறைகளை கடைபிடிக்காமல் பொது மக்களுக்கு சுகாதாரகேடு விளைவிப்பவர் மீது சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கொண்ட உயர்மட்ட குழு அமைத்து, குழுவின் பரிந்துரைப்படி மேல் நடவடிக்கை எடுக்க நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.138/07, நாள்.17.7.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்.

**இ.டி.பி.எண்.சி2/285/2006**
**ஆணையாளரின் 03.04.2007 நாளிட்ட குறிப்பு.**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.382/2007 பொருள் எண்: 62

**சென்னை மாநகராட்சியின் இணைய தளம் மூலம் பொது மக்களின் வேண்டுகோளைப் பெற்று பிறப்பு/ இறப்பு சான்றிதழை தபால் துறை மூலம் வழங்க நடைமுறைப்படுத்துதல் குறித்து ஒப்புதல் பெறுவது – சம்மந்தமாக.**

பொதுமக்களின் வேண்டுகோளின்படி தற்பொழுது பிறப்பு/இறப்பு சான்றிதழ்கள் கணிப்பொறி மூலம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. இ.டி.பி. செல் சென்னை மாநகராட்சியின் இணைய தளமான www.chennaicorporation.com மூலம் பொதுமக்களின் வேண்டுகோளைப் பெற்று சான்றிதழை தபால்துறை மூலம் வழங்க முடிவு செய்து அதற்கான ஆணையர் அவர்களின் ஒப்புதலையும் 03.08.2006 அன்று பெற்றுள்ளது.

இது சம்பந்தமாக இ.டி.பி. செல் விரிவான கலந்துரையாடலை தபால் துறை, NIC, மற்றும் வெப்துனியா என்ற தனியார் நிறுவனத்திடமும் நடத்தியுள்ளது. NIC, வெப்துனியா நிறுவனங்கள் அதற்கான software உருவாக்கி அதனை சுகாதாரத்துறை சார்ந்தவர்களுக்கும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

தபால்துறையின் உயர் அதிகாரிகளிடம் இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. அவர்கள் (MOU)ல் கையெழுத்திடுமாறு கூறியுள்ளார்கள்.

**சென்னை மாநகராட்சி ஒப்புக்கொண்ட சான்றிதழ் வழங்கும் கட்டணம்**

| | | |
|---|---|---|
| சான்றிதழ் | – | ரூ. 20/– |
| பதிவுக்கட்டணம் | – | ரூ. 22/– |
| ஒப்புகை அட்டை | – | ரூ. 3/– |
| வி.பி. தபால் கட்டணம் | – | ரூ. 2/– |
| சேவைக்காக தபால் துறைக்கு அளிக்கும் கட்டணம் | – | ரூ. 10/– |
| | | ரூ. 57/– |

இந்தக் கட்டணம் அவ்வப்போது அரசு ஆணைகளுக்கு ஏற்ப மாறுதலுக்கு உட்பட்டது. சான்றிதழை பெற மனுதாரர் மறுத்தாலும் அல்லது அந்த முகவரியில்லாத போதும் அதற்கான கட்டணங்களை சென்னை மாநகராட்சியே ஏற்பது என்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தபால் துறை அனுப்பிய MOU நகலை சட்ட அலுவலர், சென்னை மாநகராட்சி அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அனுமதியும் பெறப்பட்டது.

**இ.டி.பி.எண்.சி2/285/2006**

எனவே, சென்னை மாநகராட்சியின் இணைய தளமான www.chennaicorporation.comல் பொதுமக்கள் பிறப்பு/இறப்பு சான்றிதழை பெற பதிவு செய்து தபால் துறையின் மூலம் பெறும் நடவடிக்கையினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும்,குறிப்பில் கூறப்பட்டுள்ள கட்டணங்களை பொதுமக்களுக்கு விதிக்கவும் மாமன்ற ஒப்புதல் வேண்டி இக்குறிப்பு நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.07.07 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 17/2007, நாள் 12.07.2007 ன்படி1980 ஆம் ஆண்டு முதல் பிறப்பு / இறப்பு கணினியில் பதியப்பட்டுள்ள நிலையில் 1) இணையதளம் மூலம் மட்டுமின்றி படிப்பறிவில்லா பாமர மக்கள் தற்போது நடைமுறையில் உள்ளதைப் போன்றும் பிறப்பு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும், 2) வெளிநாடு வாழ் இந்தியர்கள் பிறப்பு சான்றிதழ் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கையில் கட்டணத்தொகை ரூ.57/– மட்டுமின்றி தபால் செலவு முழுவதையும் விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும் எனவும், 3) செலவீனத்தை மாநகராட்சி ஏற்காது போன்ற திருத்தங்களுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“17.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.132/07, நாள்.17.7.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பி.டி.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

ப.து.ந.க.எண்.நகரமைப்பு/3248/2007
ஆணையர் அவர்களின் 11.07.2007 நாளிட்ட குறிப்பு

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.383/2007 பொருள் எண்.63

நகரமைப்பு பிரிவில் – திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி – வழங்கப்பட்ட வரைபடங்கள் – டிஜிட்டல் வரை படங்களாக மாற்ற **(converting sanctioned town planning drawings into digital format) -** அனுமதி.

சென்னை மாநகராட்சி ஒரு வருடத்திற்கு சுமார் 7000 முதல் 8000 வரையிலான எண்ணிக்கையில் கட்டிடங்கள் கட்டுவதற்காக திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கி வருகிறது.

அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள் அனைத்தும் பணித்துறை, நகரமைப்பு பிரிவு அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 2005–ஆம் வருடம் ஜீன் மாதம் முதல் மண்டலங்களிலேயே திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படுவதால் அனுமதி அளிக்கப்பட்ட வரைபடங்கள் அந்தந்த மண்டல அலுவலங்களிலேயே வைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 2005–ஆம் வருடம் ஜீன் மாதத்திற்கு முன்பு அனுமதி வழங்கப்பட்ட திட்ட மற்றும் கட்டிட வரைபடங்கள் பணித்துறை, நகரமைப்பு பிரிவு அலுவலகத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நெருக்கடியான இடத்தில் வைத்து பல வருடங்களுக்குண்டான வரைபடங்களை பாதுகாத்து வருவதால் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வரைபடத்தை ஏதேனும் ஒரு காரணத்திற்காக தேடி எடுப்பது மிகவும் கடினமாகவும் காலவிரயமாகவும் உள்ளது. மேலும் பல ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட அனுமதி வரைபடங்கள் பாதிக்கப்பட்டு கிழிந்து விடும் நிலையில் உள்ளன. இவற்றை டிஜிட்டல் வரைபடங்களாக மாற்றி (converting into digital format) சென்னை மாநகராட்சியின் தரவு தளத்தில் (Database) சேமித்து வைத்து விட்டால் தேவைப்படும் போது கணிணி மூலம் அச்சு (Print) எடுத்துக் கொள்ளலாம். மேலும் மென்பொருள் (Software) மூலம் தேடுதல் பணியும் எளிதாகிவிடுவதால் தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்படும்.

எனவே, சென்னை மாநகராட்சியின் பணித்துறை, நகரமைப்பு பிரிவில் 1995 முதல் அனுமதியளிக்கப்பட்ட வரைபடங்களையும் 2005–ஆம் ஆண்டு ஜீன் மாதம் முதல் மண்டலங்களில் அனுமதியளிக்கப்பட்ட வரைபடங்களையும் தக்க முறையில் டிஜிட்டல் வரைபடங்களாக மாற்றவும், அவற்றை சென்னை மாநகராட்சியின் தரவு தளத்தில் (Database) சேமித்து வைக்கவும், பின்னாளில் தேவைப்படும் போது எந்த ஒரு வரை படத்தையும் எளிதில் கணிணி மென்பொருள் (Software) மூலம் தேடவும், அச்சு (Print) எடுக்கவும் வழிவகை செய்யலாம் என கருதப்படுகிறது. அவ்வாறு செய்யும் போது வரை படங்கள் பாதுகாக்கப்படுவதோடு, கட்டிட உரிமைதாரர்கள் கேட்கும் போது உடனுக்குடன் அச்சு (Print) வழங்கவும் ஏதுவாக இருக்கும். மேலும் சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் பதிவு ஏற்றம் செய்துவிட்டால் பொதுமக்கள் தேவையான வரைபடங்களை பார்த்து கொள்ளும் வசதியும் உருவாகும்.

எனவே,

<u>ப.து.ந.க.எண்.நகரமைப்பு/3248/2007</u>

1) சென்னை மாநகராட்சியினால் 1995 முதல் திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்களையும், எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ள வரைபடங்களையும் டிஜிட்டல் வரைபடங்களாக மாற்றி (converting sanctioned town planning drawings into digital format) சென்னை மாநகராட்சியின் தரவு தளத்தில் (Database) சேமித்து வைக்க மற்றும் மேற்படி சேமித்து வைக்கப்பட்ட வரைபடங்களை சென்னை மாநகராட்சியின் வசதிக்கேற்றப்படி தேடவும், அச்சு (Print) எடுக்கவும் மென்பொருள் (Software) வழங்க ஒப்பம் கோரவும்,

2) மேற்படி பணிக்கான செலவினத்தை பணித்துறை, நகரமைப்பு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள அனுமதியும்

மேற்கூறப்பட்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு), நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.130, நாள் 13.07.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"17.7.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.131/07 நாள்.17.7.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.07.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.19/2007, நாள்.18.07.2007–ன்படி 1995 என்பதற்கு பதிலாக 1985 அல்லது கைவசம் இருக்கும் அனைத்து வரைபடங்களையும் என்கின்ற திருத்தத்துடன் இதனை நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

**பொ.து.ந.க.எண்.ஈ1/20581/2007**
**ஆணையாளர் அவர்களின் 23.06.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.384/2007 பொருள் எண்.64

**பணியமைப்பு : உதவி செயற்பொறியாளர் தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான நியமன அதிகாரம் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜுன்மாதம் முதல் தேதி ஆகும். கடந்த 01.06.2006ஐ மைய நாளாகக் கொண்டு உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு 22 நபருக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பதவிக்கு 01.06.2007ஐ மைய நாளாகக் கொண்டு தெரிவுப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு:

| Class, Category and name of post | Method of Appointment | Qualifications |
|---|---|---|
| Assistant Executive Engineer other than Assistant Executive Engineer (Electrical) | உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் பதவிகளைக்கொண்டு பதவி உயர்வின் மூலம் 3 பட்டதாரி பொறியளர்(உதவி பொறியளர்) ஒரு பட்டயப் பொறியாளர்(இளநிலைப் பொறியாளர்) என்ற விகிதாச்சார முறையில் நிரப்பப்படவேண்டும். (அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 09.02.1990) | i.(a) B.E. Degree (Civil or Mechanical) of any University or Institution recognised by the University Grants Commission for purposes of its grant or any other qualification considered equivalent thereto;<br>(b) Must have served as Assistant Engineer in the Corporation Engineering Subordinate Service, Municipal Engineering Grade III, Junior Engineer or Supervisor (Public Health) for a period of not less than five years on duty; or<br>(c) Municipal Engineer, Grade II or Assistant Engineer (Public Health) ; or<br>(d) Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto;<br>Provided that Draftsman, overseers and Surveyors of the CorporationEngineering Subordinate Service Promoted as Junior Engineer in the same service; Head Surveyors and Head Draftsmen of the Corporation Engineering Subordinate Service, Municipal Engineer Grade III or Supervisor (Public Health) possessing the qualifications referred to in item (d) above shall be eligible for appointment as Assistant Executive Engineers only if they have put in a total service of not less than 10 years in one or more categories or as Municipal Engineer Grade III or as Supervisor (Public Health); and (G.O.Ms/No/907, RD&LA dt.20-5-81)<br>(ii) A pass in the Account Test for Public Works Department Officers and Subordinates. |

உதவி செயற்பொறியாளர் பதவியில் பதவி உயர்வு காரணமாகவும், வயது முதிர்வு ஓய்வு காரணமாகவும் 10 காலிப்பணியிடங்கள் ஏற்படலாம் என உத்தேசிக்கப்படுகிறது.

3:1 என்ற விகிதாச்சார முறையின்படி, கடந்த ஆண்டு பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளருடன் தெரிவுப் பட்டியல் முடிவடைந்துள்ளதால், 01.06.2007ஐ மைய நாளில் தெரிவுப் பட்டியல் மூன்று பட்டம் பெற்ற உதவி பொறியாளர் என்ற நிலையில் தெரிவுப்பட்டியல் துவக்கப்பட்டு, பணிமூப்பு மற்றும் விகிதாச்சார அடிப்படையில் பின்வருமாறு அமைகிறது.

<u>பொ.து.ந.க.எண்.ஈ1/20581/2007</u>

| வரிசை எண். | உதவி/இளநிலை பொறியாளரின் பெயர் திருவாளர்கள் | துறை/மண்டலம் | பட்டம்/பட்டயம் |
|---|---|---|---|
| 1 | ஆர். முரளி, வார்டு எண்.141, | மண்டலம்=9 | பட்டம் |
| 2 | கே. சுந்தரேசன், வார்டு எண்.90 | மண்டலம்=6 | பட்டம் |
| 3 | சி.லாரன்ஸ்,வார்டு எண்.154 | மண்டலம்=10 | பட்டம் |
| 4 | எஸ். ஜெயக்குமார், வார்டு எண்.152 | மண்டலம்=10 | பட்டயம் |
| 5 | எ. குமார், வார்டு எண்.100 | மண்டலம்=7 | பட்டம் |
| 6 | பி.எஸ். சீனிவாசன், வார்டு எண்.23 | மண்டலம்=2 | பட்டம் |
| 7 | எம். காமராஜ், வார்டு எண்.62 | மண்டலம்=4 | பட்டம் |
| 8 | சி. ரகுபதி, வார்டு எண்.29 | மண்டலம்=2 | பட்டயம் |
| 9 | பிரதீப்குமார், வார்டு எண்.95 | மண்டலம்=6 | பட்டம் |
| 10 | ஜெ. ஜெயகாந்த் | கட்டடத்துறை. | பட்டம் |
| 11 | கே.எம். சகுபார் உசேன், வார்டு எண்.123 | மண்டலம்=8 | பட்டம் |

மேற்படி பட்டியலில் வரிசை எண்.5ல் உள்ள உதவி பொறியாளர் திரு. எ.குமார் என்பவர் மீது, மண்டலம்=9ல் கட்டடங்கள் கட்டப்பட்ட நிகழ்வில் தனியர் மீது துறைசார்ந்த நடவடிக்கையினை மேற்கொள்ள அரசாணை எண்.,4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 09.01.2007ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆணையினைத் தொடர்ந்து வரைவு குற்றச்சாட்டு குறிப்பாணைகள் தயாரிக்கப்பட்டு, விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்தின் ஒப்புதல் பெற்று தனியர் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தனியர் மீது இதுகாறும் கடுங்குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாததால், தனியரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

மேற்படி பட்டியலில் வரிசை எண்.8ல் உள்ள இளநிலை பொறியாளர் திரு. சி. ரகுபதி என்பவர் மீது, மண்டலம்=1ல் கட்டடங்கள் கட்டப்பட்ட நிகழ்வில் தனியர் மீது துறைசார்ந்த நடவடிக்கையினை மேற்கொள்ள அரசாணை எண்.,1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 09.01.2007ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆணையினைத் தொடர்ந்து வரைவு குற்றச்சாட்டு குறிப்பாணைகள் தயாரிக்கப்பட்டு, விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்தின் ஒப்புதல் பெற்று தனியர் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தனியர் மீது இதுகாறும் கடுங்குற்றச்சாட்டின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாததால், தனியரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

மேற்படி பட்டியலில் வரிசை எண்.9ல் உள்ள உதவி பொறியாளர் திரு. பிரதீப்குமார், என்பவர் மீது மண்டலம்–6ல் சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தின் கட்டுமாணப்பணியினை தடுக்கத் தவறியதற்காக, சென்னை மாநகராட்சி 3

மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்காக ஒழுங்கு நடவடிக்கை விதி, பிரிவு எண்.9(2)ன் கீழ் 10.01.2007 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. எனவே, அரசுக் கடிதம் எண்.18824/எஸ்/2005–2, பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 07.10.2005ன்படி இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பதிலிருந்து ஒத்திவைக்கலாம்.

1993ஆம் ஆண்டு நேரடி நியமனம் மூலம் ஆணையரின் 29.6.93 நாளிட்ட செயல்முறை ஆணையின் வாயிலாக உதவி பொறியாளர்களாக நியமிக்கப்பட்ட 48 நபர்களில், மேற்படி பட்டியலில் உள்ள அனைத்து பட்டப்பொறியாளர்களும் அடங்குவர். இவர்களுக்கு நியமன ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண் விவரம் பின்வருமாறு

| நியமன ஆணையில் உள்ள வரிசை எண். | உதவி/இளநிலை பொறியாளரின் பெயர் திருவாளர்கள் |
|---|---|
| 36 | ஆர். முரளி, வார்டு எண்.141, |
| 37 | கே. சுந்தரேசன், வார்டு எண்.90 |
| 39 | சி. லாரன்ஸ், வார்டு எண்.154 |
| 40 | எ. குமார், வார்டு எண்.100 |
| 41 | பி.எஸ். சீனிவாசன், வார்டு எண்.23 |
| 42 | எம். காமராஜ், வார்டு எண்.62 |
| 43 | பிரதீப்குமார், வார்டு எண்.95 |
| 44 | ஜெ. ஜெயகாந்த் |
| 45 | கே.எம். சகுபார் உசேன், வார்டு எண்.123 |

(வரிசை எண்.38 பணியில் சேரவில்லை)

மேற்படி பணி நியமன ஆணையில் உள்ள மூப்பின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் பதவிக்கான பட்டியலுக்கு இவர்களது பெயர் பட்டியலிடப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க, 11.06.2007 நாளிட்ட கடிதத்தில், உதவி பொறியாளர், திரு.டி.கே. கணேசன் என்பவர், 1993ஆம் ஆண்டு நேரடி நியமனம்

**பொ.து.ந.க.எண்.ஈ1/20581/2007**

மேற்கொண்டபோது தெரிவுப் பட்டியலில் தன்னுடைய பெயர் வரிசை எண்.42ல் இருந்ததாகவும், தான் தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி கடிதமானது, தனக்கு தபால் மூலம் தாமதமாக கிடைத்தாகவும், இதனால், தான், 03.07.93 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி பணிநியமன உத்தரவினை தனியே பெற்றதாக தெரிவித்து, தெரிவுப்பட்டியலின்படி தனது பெயரினை வரிசை எண்.42ல் பொருத்திடுமாறு கோரிக்கை அளித்துள்ளார்.

மேற்படி கடிதத்தில் தனியரால் அளிக்கப்பட்ட தகவல் தவறானதாகும். தற்காலிக தெரிவு பட்டியலில் வரிசை எண்.42ல் இருந்த தனியர் சென்னை மாநகராட்சி பணிக்கு தேர்வு செய்யப்பட்ட விவரம் சரியான நேரத்தில் தனியரது முகவரிக்கு தபால்துறை மூலம் சென்றடைந்திருக்கிறது. தனியர் அப்போது ஊரில் இல்லாததால், அக்கடிதத்தினை பெற்றுக்கொண்ட தனியரது சகோரதர் திரு. கே. நாராயண சாமி என்பவர் தனது 29.6.93 நாளிட்ட கடிதத்தில், தனது சசோதரர் திரு.டி.கே. கணேசன் தற்போது ஊரில் இல்லை எனத் தெரிவித்து, இரண்டு தினங்களில் சென்னைக்கு வரலாம் என்பதால் காலதாமதத்தினை பொறுத்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார். இக்கோரிக்கை மனுவானது கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, 28.06.93 அன்று சான்றிதழ் சரிபார்ப்புக்கு வராத தனியரை, 02.7.93 அன்று அனுமதித்து தனியரது சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, 03.07.93 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணையின் வாயிலாக தனியருக்கு மட்டும் தனியே பணியமர்வு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து, தனியர் உதவி பொறியாளராக பணியில் மூத்தவர்கள் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த பிறகு 06.07.93 அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்துள்ளார். பணியமர்வு ஆணையில் உள்ள மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வு பரிசீலிக்கப்படவேண்டும் என்பதால் 48 நபர்களுக்கு அளிக்கப்பட்ட பணியமர்வு ஆணையில் தனியரின் பெயரினை சேர்க்க இயலாது.

மேலும், அரசாணை எண்.1140, பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 2.12.1983ன்படி, பணிமூப்பு நிலையினை மாற்றியமைக்கக் கோரும் மனுக்கள் பணியமர்வு செய்யப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள் அளிக்கப்படவேண்டும். மூன்று ஆண்டு காலம் கழித்து மனுக்கள் அளிக்கப்படின் அவற்றினை தள்ளுபடி செய்ய வேண்டும். (As per Rule 35(f) of Tamil Nadu State and Subordinates Services Rules)

எனவே, 13 ஆண்டுகள் கழித்து பணிமூப்பினை மாற்றி அமைக்கக் கோரும் தனியரது கோரிக்கையினை நிராகரிக்கலாம்.

எனவே கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது.

(அ) பின்வரும் உதவி/இளநிலை பொறியாளர்கள் கொண்ட உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

| வரிசை எண். | உதவி/இளநிலை பொறியாளரின் பெயர் திருவாளர்கள் | துறை/மண்டலம் | பட்டம்/பட்டயம் |
|---|---|---|---|
| 1 | ஆர். முரளி, வார்டு எண்.141, | மண்டலம்–9 | பட்டம் |
| 2 | கே. சுந்தரேசன், வார்டு எண்.90 | மண்டலம்–6 | பட்டம் |
| 3 | சி. லாரன்ஸ், வார்டு எண்.154 | மண்டலம்–10 | பட்டம் |
| 4 | எஸ். ஜெயக்குமார், வார்டு எண்.152 | மண்டலம்–10 | பட்டயம் |
| 5 | எ. குமார், வார்டு எண்.100 | மண்டலம்–7 | பட்டம் |
| 6 | பி.எஸ். சீனிவாசன், வார்டு எண்.23 | மண்டலம்–2 | பட்டம் |
| 7 | எம். காமராஜ், வார்டு எண்.62 | மண்டலம்–4 | பட்டம் |
| 8 | சி. ரகுபதி, வார்டு எண்.29 | மண்டலம்–2 | பட்டயம் |
| 9 | ஜெ. ஜெயகாந்த் | கட்டடத்துறை. | பட்டம் |
| 10 | சகுபார் உசேன், வார்டு எண்.123 | மண்டலம்–8 | பட்டம் |

ஆ) உதவி செயற்பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியல் காலாவதியாகும் ஓராண்டு காலம் வரை வயது முதிர்வு மற்றும் பதவி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களில் உதவி செயற்பொறியாளர் பதவியில் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 என்ற கால முறை ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளித்திடவும்,

இ) உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு பெற்ற பின்னர், தீர்ப்பின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் பதவிஉயர்வில் பணிஉறுதியாக்கம் செய்வது குறித்து அரசுக்கு தக்க பிரேரணையினை அனுப்பவும்

"மன்றத்தின் விவாதத்திற்குட்பட்டு தெரிவு பட்டியல் ஒப்புதல் அளிக்க நியமனக்குழு தீர்மானிக்கிறது".

"இப்பொருள் அடுத்த நியமனக்குழு கூட்டத்தில் வைக்கப்பட்டு இறுதி முடிவு எடுத்து பின்னர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பொருட்டு இதனை மன்றம் ஒத்திவைக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்.

**பொ.து.ந.க.எண்.ஈ1/20581/2007**
**ஆணையாளர் அவர்களின் 23.07.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.385/2007 பொருள் எண்.65

**பணிமூப்பு நிலை மாற்றி அமைக்கக் கோருதல்**

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான நியமன அதிகாரம் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்மாதம் முதல் தேதி ஆகும். மேற்படி பதவிக்கு 01.06.2007ஐ மைய நாளாகக் கொண்டு 10 நபர்களைக் கொண்ட தெரிவுப் பட்டியலுக்கு நியமனக் குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் கோரி பொருள் தனியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 06.07.2007 நாளிட்ட கடிதத்தில், உதவி பொறியாளர், திரு.டி.கே. கணேசன் என்பவர், 1993ஆம் ஆண்டு நேரடி நியமனம் மேற்கொண்டபோது தற்காலிக தெரிந்தெடுத்தல் பட்டியலில் தன்னுடைய பெயர் வரிசை எண்.42ல் இருந்ததாகவும், தான் தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி கடிதமானது, தனக்கு தபால் மூலம் தாமதமாக கிடைத்தாகவும், இதனால், தான், 03.07.93 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி பணிநியமன உத்தரவினை தனியே பெற்றதாக தெரிவித்து, தெரிவுப்பட்டியலின்படி தனது பெயரினை வரிசை எண்.42ல் பொருத்தி உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்க கோரிக்கை அளித்துள்ளார்.

இதற்கு எதிராக, உதவி பொறியாளர்கள் திரு.எம். காமராஜ் மற்றும் 6 நபர்கள், தங்களுக்கு சென்னை மாநகராட்சியில் பணிநியமனம் வழங்கப்பட்ட உத்தரவில் மேற்படி திரு.டி.கே. கணேசன் என்பவரது பெயர் இடம் பெறவில்லை என்றும் இதனால் இவரது பெயரினை தங்களுக்கு வழங்கப்பட்ட பணியமர்வு ஆணைக்கு பிறகே சேர்க்க வேண்டும் என ஆட்சேபணையினை அளித்துள்ளனர்.

1993ஆம் ஆண்டு உதவி பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தகுதியான 242 நபர்களின் பெயர் விவரங்கள் பெறப்பட்டு, 03.06.93 மற்றும் 04.06.93 ஆகிய நாட்களில் நேர்முகத் தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டது. தேர்வுகளில் கலந்துகொண்டவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், Rule of Reservation அடிப்படையிலும் 50 நபர்கள் வரிசைபடுத்தப்பட்டு, பின்னர் 16.06.93 நாளிட்ட செயல்முறை ஆணையின் வாயிலாக தேவையான 49 நபர்களை தற்காலிகமாக தெரிவு செய்து ஆணையிடப்பட்டது.

மேற்படி ஆணையில் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்ட நபர்கள் 28.06.93 அன்று காலை 10.30 மணிக்கு கல்வித் தகுதி, வயது, அனுபவம் போன்றவை சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த ஆணையானது மனுதாரரான திரு.டி.கே. கணேசன் உட்பட 49 நபர்களுக்கு அனுப்பப்பட்டது. 49 நபர்களில் மனுதாரர் திரு.டி.கே. கணேசன் என்பவர் தவிர 48 நபர்கள் அசல் ஆவணங்களை 28.06.93 அன்று தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, அவர்களுக்கு மறுநாளே 29.06.93 அன்று பணியமர்வு ஆணை வழங்கப்பட்டுவிட்டது.

அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாத மனுதாரர் திரு.டி.கே. கணேசன் என்பவரின் சகோதரர் திரு. கே. நாராயண சாமி என்பவர் தனது 29.6.93 நாளிட்ட கடிதத்தில், தனது சகோதரர் திரு.டி.கே. கணேசன் அப்போது ஊரில் இல்லை எனத் தெரிவித்து, இரண்டுதினங்களில் சென்னைக்கு வரலாம் என்பதால் காலதாமதத்தினை பொறுத்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார். இக்கோரிக்கை மனுவானது கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, 28.06.93 அன்று சான்றிதழ் சரிபார்ப்புக்கு வராத தனியரை, 02.7.93 அன்று அனுமதித்து தனியரது சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, 03.07.93 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணையின் வாயிலாக தனியருக்கு மட்டும் தனியே பணியமர்வு ஆணை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, தனியர் உதவி பொறியாளராக பணியில் மூத்தவர்கள் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாளான 02.07.93க்கு பிறகு 06.07.93 அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்படி உதவி பொறியாளர் தனது மூப்பு நிலையினை உதவி பொறியாளர் திரு.எம். காமராஜ் என்பவருக்கு முன்பாக மாற்றி அமைக்கக் கோரி 13 ஆண்டுகள் கழித்து கோரிக்கை விடுத்துள்ளார். அரசாணை எண்.1140, பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 2.12.1983ன்படி, பணிமூப்பு நிலையினை மாற்றியமைக்கக் கோரும் மனுக்கள் பணியமர்வு

செய்யப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள் அளிக்கப்படவேண்டும். மூன்று ஆண்டு காலம் கழித்து மனுக்கள் அளிக்கப்படின் அவற்றினை தள்ளுபடி செய்ய வேண்டும். (As per Rule 35(f) of Tamil Nadu State and Subordinates Services Rules ) .

மனுதாரரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உதவி பொறியாளர் திரு.எம். காமராஜ் என்பவர் 1993ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.42ல் இருந்த மனுதாரர் திரு.டி.கே. கணேசன் என்பவருக்கு அடுத்து வரிசை எண்.43ல் உள்ளார். இவர் தனக்கு வழங்கப்பட்ட 29.06.93 நாளிட்ட பணியமர்வு ஆணையினைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக 02.07.93அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

மனுதாரர் திரு.டி.கே. கணேசன் என்பவரது கோரிக்கையினையானது 02.07.93 அன்று உதவி பொறியாளராக பணியில் சேர்ந்துள்ள திரு.எம். காமராஜ் என்பவருக்கு முன்னர் தனது பெயரினை சேர்க்க வேண்டும் என்பதாகும். ஆனால் 02.07.93 அன்றை தேதியில் மனுதாரர் திரு.டி.கே. கணேசன் என்பவருக்கு பணியமர்வு ஆணையே வழங்கப்படவில்லை. 03.07.93 நாளிட்ட பணியமர்வு ஆணை மனுதாரருக்கு 05.07.93 அன்றுதான் சார்வு செய்யப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து மனுதாரர் 06.07.93 அன்றுதான் சென்னை மாநகராட்சி பணியில் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

As per Rule 35(aa) of Tamil Nadu State and Subordinates Services Rules, the seniority of a person in a service, class, category or grade shall, where the normal method of recruitment to that service, class, category or grade is by more than one method of recruitment, unless the individual has been reduced to a lower rank as a punishment, be determined with reference to the date of on which he is appointed to the services, class, category or grade.

இந்நிலையில், 03.07.93 நாளிட்ட பணியமர்வு ஆணையினை 05.07.93 அன்று பெற்றததைத் தொடர்ந்து 06.07.93 அன்று சென்னை மாநகராட்சி பணியில் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்துள்ள மனுதாரர் தனது பெயரினை தனக்கு பணியமர்வு ஆணை வழங்கப்படுவதற்கு முன்பே பணியில் 02.07.93 அன்று சேர்ந்துவிட்ட உதவி பொறியாளர் திரு.எம். காமராஜ் என்பவரின் பெயருக்கு முன்னால் தனது மூப்பு நிலையினை நிர்ணயம் செய்யக் கோருவதால், இவரது கோரிக்கை குறித்து முடிவெடுக்க நியமனக் குழு மூலமாக மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை மன்றத்தில் விவாதித்து முடிவு எடுக்க
நியமனக்குழு தீர்மானிக்கின்றது".

"இப்பொருள் அடுத்த நியமனக்குழு கூட்டத்தில் வைக்கப்பட்டு இறுதி முடிவு எடுத்து பின்னர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பொருட்டு இதனை மன்றம் ஒத்திவைக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18.

மன்றச் செயலாளர்.

**க.து.ந.க.எண்.பி2/108/2007**
**ஆணையரின் 25.07.2007 நாளிட்ட குறிப்பு**

**30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.386/2007 பொருள் எண் : 66

**ஒப்பம் ஏற்க அனுமதி**

அரசின் சிறப்புச் செயலர், பொதுப்பணித்துறை, தலைமைச்செயலகம் அவர்களின் நேர்முக கடித எண். 21961/Y–1/2006–3, 24.11.2006 நாளிட்ட நேர்முக கடிதத்தில், 20.07.2006 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் சென்னை மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம் பற்றி நடைப்பெற்ற கூட்ட நடவடிக்கையின் நகல் ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி, மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் இராஜாஜி சாலையின் இரு புறமும் போர் நினைவுச் சின்னம் முதல் ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதை வரை அழகுபடுத்தும் பணியும் ஒன்றாகும். இப்பணி சென்னை மாநகராட்சியால் செயல்படுத்த வேண்டும் என்றும், இத் திட்டப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் 75 விழுக்காடு அரசு ஏற்கும் என்றும் மீதமுள்ள 25 விழுக்காடு சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக 2006–2007 ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக விலைவிவரப்படி திட்ட மதிப்பீடு ரூ.365.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி, மன்ற தீர்மானம் எண்.252/2007 நாள் 28.5.2007 மூலம் பெறப்பட்டுள்ளது. மேலும், இதற்கான அரசின் நிர்வாக அனுமதி வேண்டி அரசிற்கு 08.06.2007 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக அரசின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி, மன்ற தீர்மானத்தின் அனுமதியின்படி ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 6.7.2007 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இதன் விவரங்கள் கீழ்வருமாறு.

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ.) | 2006–07 திருத்திய அலுவலக விலைவிவரபடி ஒப்ப விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள்.ஆர்.கிருஷ்ண–மூர்த்தி அன்ட் கோ, சென்னை | 3,04,98,428.99 | 4,16,89,329.50 | (+) 36.69 % அதிகம் |
| 2. | திருவாளர்கள்.சின்னு அன்ட் கோ, கோயம்பத்தூர் | 3,04,98,428.99 | 4,81,49,502.00 | (+) 57.87 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அன்ட் கோ, சென்னை அவர்களின் ஒப்பத்தொகை ரூ.4,16,89,329.50 ஆகும். இது 2006–07 ஆம் ஆண்டின் திருத்திய விலைவிவரப்படி (+)36.69% அதிகமாகும். எனவே, ஒப்பந்தக்குழு (Tender Committee) 9.7.07, 11.7.07 மற்றும் 16.7.07 ஆகிய தேதிகளில் கூடி ஒப்பந்ததாரருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி விலை குறைப்பதற்கு பரிந்துரைத்தது. அவ்வண்ணமே ஒப்பந்ததாரருடன் 9.7.07, 11.7.07 மற்றும் 16.7.07 ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தை நடத்தியதில் இறுதியாக குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஆர்.கிருஷ்ணமூர்த்தி அன்ட் கோ, சென்னை அவர்களின் இறுதி ஒப்பத்தொகை ரூ.3,79,96,977.45 ஆகும். இது 2006–07 ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக விலைவிவரப்படி பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ.3,04,98,428.99யை விட (+)24.59% அதிகமாகும் மற்றும் 2007–08 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ.3,07,19,732.95யுடன் ஒப்பிடுகையில் (+)23.69% அதிகமாகும். மீண்டும் 20.7.07 அன்று நடந்த ஒப்பந்தக்குழுக் (Tender Committee) கூட்டத்தில் இப்பொருள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டத்தில் இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தைக்கருத்தில் கொண்டும் மற்றும் பணியின் தன்மையைக் கருத்தில்

**க.து.ந.க.எண்.பி2/108/2007**

கொண்டும் தற்போது வெளிசந்தையில் நிலவும் விலையுடன் ஒப்பிடுகையில் (–)19.93% குறைவாக உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், இந்த ஒப்பத்தை 2006–07 ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக விலைவிவரப்படி பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ.3,04,98,428.99யை விட (+)24.59% அதிகமான விலைவிகிதத்தில் திருவாளர்கள். ஆர்.கிருஷ்ணமூர்த்தி அன்ட் கோ, சென்னை அவர்களுக்கு அளிக்க ஒப்பந்தக்குழு பரிந்துரைத்துள்ளது.

மேற்கண்ட பணியின் ஒப்பத்தொகையானது ரூ.50.00 இலட்சத்திற்குமேல் உள்ளதால் இவ்வொப்பத்தை ஏற்க அரசின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே, கீழ்க்கண்ட இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அன்ட் கோ, சென்னை அவர்களுடன் பேச்சுவார்த்தைக்குப்பின் இறுதி ஒப்பத்தொகையான ரூ.3,79,96,977.45, அதாவது 2006–2007 ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ.3,04,98,428.99யை விட (+)24.59% அதிகமான விலைவிகிதத்தில் ஒப்பத்தை ஏற்று திருவாளர்கள்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அன்ட் கோ, சென்னை, அவர்களுக்கு அளிக்க அரசின் அனுமதி வேண்டி அரசிற்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதியும்

2. அரசின் நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரியமைக்கு அரசின் பின்னேற்பு அனுமதியும் மற்றும்

3. மேற்கண்ட திட்டப்பணிக்கு தேவையான நிதியில் 75 விழுக்காடு அரசிடமிருந்து பெற்றும் மீதமுள்ள 25 விழுக்காடு சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதியும் வேண்டப்படுகின்றது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.07.2007 அன்று தீர்மான எண். 142/07–ன் படி நிலைக்குழு (பணிகள்)–வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) – வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.07.2007 அன்று தீர்மான எண். 139/07–ன் படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)–வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.

பொ.து.ந.க.எண்.ஈ1/27527/2007
ஆணையாளர் அவர்களின் 10.07.2007 நாளிட்ட குறிப்பு

30.07.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.387/2007 பொருள் எண்.67

பணியமைப்பு – செயற் பொறியாளர் தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்தல்

சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.133/2007, நாள் 25.4.2007ல், செயற்பொறியாளர் பதவிக்கு 01.04.2006ஐ மைய நாளாகக் கொண்டு 2006–2007ஆம் ஆண்டுக்கான தெரிவுப் பட்டியலுக்கு பின்வரும் உதவி செயற்பொறியாளர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1. எ. தர்மன்,
2. கே. திருமங்கையாழ்வார்,
3. எம்.புகழேந்தி,
4. ஜே. பாபு ராஜேந்திரன்,
5. எஸ். நக்கீரன்,
6. எஸ். தாமரைச்செல்வன்,
7. டி.பி. சுசிந்திரா,
8. ஆர். பன்னீர்செல்வம்
9. பி. நந்தகுமார்,
10. பி. குருநாதன்,
11. கே. செல்வராஜ்,
12. பி. சுப்பையா,
13. எம்.ஆர். சுப்புராம்.

மேலும், செயற்பொறியாளர் பதவியிலிருந்து மண்டல அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படக்கூடிய காலிப்பணியிடங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு மேற்படி பட்டியலுடன் நான்கு தகுதியான நபர்களை சேர்க்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பின்வரும் நான்கு உதவி செயற்பொறியாளர்களின் பெயர்கள் தெரிவுப்பட்டியலில் சேர்க்கப்பட்டு, செயற்பொறியாளர் பதவியில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களில் 17 நபர்களுக்கு செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

1) கலைமணி,
2) ஜி.ஜி. ராஜேந்திரன்,
3) ஏ. சண்முகம்,
4) ஜி. பிரபாகரன்.

இதனால், 01.04.2006ஐ மைய நாளாகக் கொண்டு 2006–2007ஆம் ஆண்டுக்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப் பட்டியல் பின்வருமாறு அமைந்தது

1. எ. தர்மன்,
2. கே. திருமங்கையாழ்வார்,
3. எம்.புகழேந்தி,
4. ஜே. பாபு ராஜேந்திரன்,
5. எஸ். நக்கீரன்,
6. எஸ். தாமரைச்செல்வன்,
7. டி.பி. சுசிந்திரா,
8. ஆர். பன்னீர்செல்வம்
9. பி. நந்தகுமார்,
10. பி. குருநாதன்,
11. கே. செல்வராஜ்,
12. பி. சுப்பையா,
13. எம்.ஆர். சுப்புராம்
14. கலைமணி,
15. ஜி.ஜி. ராஜேந்திரன்,
16. ஏ. சண்முகம்,
17. ஜி. பிரபாகரன்.

**பொ.து.ந.க.எண்.ஈ1/27527/2007**

உதவி செயற் பொறியாளர் திரு. ஜி. மகாராஜன், என்பவர் மீது மண்டலம்-6ல் சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தின் கட்டுமாணப்பணியினை தடுக்கத் தவறியதற்காக, சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கான ஒழுங்கு நடவடிக்கை விதி 1970, பிரிவு எண்.10(பி)ன் கீழ் 10.01.2007 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவந்ததால், இவரது பெயர் தெரிவுப் பட்டியலில் சேர்ப்பதிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது. மேற்படி அலுவலர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், 20.06.2007 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியரை எச்சரித்து(Warned ) ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி உதவி செயற்பொறியாளர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியரை எச்சரித்து ஒழுங்கு நடவடிக்கை முடிவுபெற்றிருப்பதால்,

1) தனியரின் பெயரினை மேற்படி தெரிவுப்பட்டியலில் தனியருக்கு பணியில் இளையவரான திரு.கே. செல்வராஜ் என்பவரின் பெயருக்கு மேல் வரிசை எண்.11 எனச் சேர்த்து தெரிவுப்பட்டியலினை 18 நபர்களை கொண்டு திருத்தி அமைக்கவும்,

2) செயற்பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் இவருக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு, ரூ.10000-325-15200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக செயற்பொறியாளராக பதவி உயர்வு அளித்து பணியமர்வு வழங்கவும்,

3) இவருக்கு பணியில் இளையவரான திரு.கே. செல்வராஜ் என்பவர் செயற்பொறியாளராக பணியேற்ற நாளான 07.06.2007லிருந்து கருத்தியலாக இவருக்கு பணி உறுதியாக்கம் செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ-18.　　　　மன்றச் செயலாளர்.